# புலவர் கதை

## முதற்பாகம்


சென்னைப் பச்சையப்பன் கல்லூரித் தமிழாசிரியர்,

மணி. திருநாவுக்கரசு முதலியார்

எழுதியது.


❋


கே. பழனியாண்டிப் பிள்ளை கம்பெனி

ஜார்ஜ் டவுன், சென்னை.

பதிப்புரிமை] 1938 [விலை அணா 14.

*Reprint—July 1937*
*Reprint—November 1938*

M. I. P. PROJECT
Microfilmed.

**Approved by the Text Book Committee, Madras.**
**Vide Fort St. George Gazette, Page 478,**
*Dated 3rd June, 1924*
*and*
*Consolidated List on Page 222*
*Dated 10th May, 1938.*

M. I. P. PROJECT
Microfilmed.

# பாயிரம்

இது செந்தமிழ் நாட்டிலே தோன்றிய அரும்பெரும் புலவர்களாகிய புகழேந்தி, காளமேகம், அந்தகக்கவி வீரராகவ முதலியார் முதலிய புலவர் அறுவர் கதைகளையும் கன்ன பரம்பரைச் செய்தியையும் தனிப்பாடற்றிரட்டு, விநோதரமஞ்சரி, தமிழ் நாவலர் சரிதை, புலவர் புராணம் முதலிய நூல்களில் உள்ள தனிப்பாடல்களையும் ஆதாரமாகக் கொண்டு கூறுவது.

இஃது ஆராய்ச்சி நூலன்மையானும், கதையையே கூறுவதனானும் இதற்குப் 'புலவர் கதை' எனப் பெயர் சூட்டப்பட்டது. இதற் கொள்ளப்பட்ட புலவர் வரிசை, கால முறை பற்றியதன்று. இதில் தனிப்பாடல்களின் கருத்துக்களும், சொல் நயம், பொருள் நயங்களும் ஆங்காங்கு இனிது விளக்கப்பட்டிருக்கின்றன; ஆசிரிய வசனங்களும் பொருட்குறுதி பயக்குமாறு மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதனைப் படிப்பவர், தமிழின்கண் ஆர்வமுடையவராதலோடு தமிழ் மொழியைப் பற்றிய விஷயங்கள் பலவற்றையும் அறிவர். இதில் இயற்கை வருணனைகளும், மனோபாவனையும் வேண்டிய அளவிற்குப் பொருந்தியிருக்கின்றன. இஃது இருபாலரும் படித்து இன்புறுமாறு அமைக்கப்பட்டுள்ளது. மாணவர்க்கு இது பெருமகிழ்ச்சியைத் தந்து, கட்டுரை எழுதுவதற்கு ஒரு சிறந்த கருவியாகும்.

இங்ஙனம்,

மணி. திருநாவுக்கரசன்

# பொருள் அடக்கம்


| பொருள் | | பக்கம் |
|---|---|---|
| 1. | அந்தகக்கவி வீரராகவ முதலியார் ... | 1 |
| 2. | பொய்யா மொழிப் புலவர் ... | 30 |
| 3. | இரட்டைப் புலவர் ... ... | 48 |
| 4. | காளமேகப் புலவர் ... ... | 65 |
| 5. | படிக்காசுத் தம்பிரான் ... ... | 99 |
| 6. | புகழேந்திப் புலவர் ... ... | 123 |

# புலவர் கதை

## 1. அந்தகக்கவி வீரராகவ முதலியார்

"கண்ணுடையர் என்பவர் கற்றோர்; முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்." வள்ளுவனார்

"உழப்பின் வாரா உறுதிகள் உளவோ?" —பட்டினத்தார்

'தெண்ணீர் வயல் தொண்டை நன்னாடு சான்றோர் உடைத்து,' என அவ்வையாராகிய அருந்தமிழ் மூதாட்டியாரால் எடுத்திசைக்கப்பட்ட பேரிசை வாய்ந்தது தொண்டைநாடு. பால்போலத் தெள்ளிய நீரையுடைய பாலாறு பாய்ந்து அந்நாட்டை வளம்படுத்தும். அதன்கண் பாலியாற்றின் கரை மருங்கிலே பூதூர் என்னுஞ் சிற்றூர் ஒன்றுள்ளது. அப்பதி, அதன் நான்கு புடைகளிலும் அழகிய பல பூஞ்சோலைகளாலும், நீர் வாய்க்கால்களாலும் சூழப்பட்டு ஒரு நந்தவனம்போல விளங்கும். நதி மூன்றுபாலும் வளைந்து ஓடுதலின், அஃது ஒரு துருத்திபோலவும் இலங்கும். அங்கு மா, பலா, வாழை, தென்னை முதலிய மரங்கள் ஓங்கி வளர்ந்து செழும்பயனை நல்கும். பூவை, கிளி, புறு முதலிய பறவைகள் ஆங்காங்கு மரக்கிளைகளிலும், பொந்துகளிலும் கூடுகட்டி இனிது வாழும். அவ்வூர் வேளாண் குடியினரால் விளங்கித் திகழும். ஆங்கு வதிந்த

மேழிச் செல்வர் கொல்லாமை, புலாலுண்ணாமை முதலிய நல்லறங்களை வழிவழிக் கொண்ட வள்ளியோராதலின், புலாலுண்போரும் அவருக்கு அஞ்சி அதனை ஒழித்தனர். அதனால், வாய்க்கால்களில் கயல் மீனும், கெண்டையும் அச்சமின்றிப் பாவையர் கண்கள் போலப் பிறழ்ந்துலாவின. குருகு, காடை முதலிய புள்ளினங்களும் மக்கட் பகையின்றி இரைதேர்ந்து இன்புற்று வாழ்ந்தன. கொலைப் பாதகராகிய வேடுவரும் அவ்வூர்த் தலைவருக்கு அஞ்சி ஆங்குச் சென்று வேட்டையாடத் துணிந்திலர். நன்செய் நிலங்களில் வானம்பாடி கூடுகட்டி முட்டையிட்டுப் பைங் கூழ் அறுவடையாவதற்குள் குஞ்சு பொரித்துச்செல்லும். அவ்வூர் வாழ்வார் அனைவரும் ஒற்றுமை, ஒப்புரவு, அன்பு முதலிய அருங்குணம் வாய்ந்து, தமக்கு நேரும் வழக்குக் களைத் தாமே தீர்த்துக்கொண்டு நன்றுறைவர். பிறர்க் கென்றே உடம்பெடுத்து மக்கட்கு எல்லா வகையாலும் உழைக்கும் எருதுகளும், தம் அன்பைச் சொரிவதுபோலச் செழுமையான தீம்பாலைச் சொரிந்து மன்பதையை ஊட்டும் ஆனிரைகளும் மேய்தற்கேற்ற மேய்கால்களும் அப்பதியின்கண் வேண்டிய அளவிற்கு இருந்தமையான், அவ்விலங்குகளும் அவலக் கவலையின்றி இனிது வாழ்ந்தன.

"பறவைகள் தத்தஞ் சேக்கை பயமின்றி வாழும்; மீன்கள்
உறவுடன் அச்சமின்றி உவகையிற் கரையு லாவும் ;
கறவைகள் செம்புல் மேய்ந்து கனிவுடன் தீம்பால் காலும் ;
நறவினைச் சொரியுஞ் சோலை நலங்கனி பூது ரென்றும். "

இத்தகைய பழம்பதியிலே வேளாண் தலைவராகிய வடுகநாத முதலியார் என்பவர் ஒருவர் இருந்தார். அவர், தம் கற்பிற்சிறந்த மனைவியாரோடு இல்லறம் நடாத்தி வருங்

கால், அவ்வம்மையார் ஓர் ஆண்மகவைக் கருவுயிர்த்தனர். அப்பச்சிளங்குழவி எல்லாவுறுப்புக்களுஞ் செவ்வனந் திரண்டு அழகுடன் விளங்கியதேனும், அந்தோ! இரண்டு கண்ணுமின்றிக் குருடாயிருந்தது. அது கண்ட பெற்றோர் இருவரும் கண்ணில்லார் கண் பெற்றிழந்தாற்போலப் பெருந்துன்பம் உழந்தனர். அவர் ஒருகால் தெய்வத்தை நோவர்; மற்றொருகால் தம் வினைப்பயனை நோக்கி வெறுப்பர்; வேறொருகால் தெய்வம் உண்டோ இன்றோ என ஐயங்கொள்வர்; பிறிதொரு கால் தமது செயலின்மையை எண்ணியெண்ணி மக்கட் பிறப்பின் இழிதகவை எள்ளுவர். இவ்வாறு அவர் நாட்பல செல்லச் செல்ல காலம் என்னும் உயிர் மருத்துவன் சிறிது சிறிதாகத் தேற்றத் தெளிந்து, ஒருவாறு துயராறி இருந்தனர்.

சின்னாட் கழிந்ததும், முதலியார் தம் சேய்க்கு நாமகரணஞ்செய்ய நெருங்கிய சுற்றத்தினர் இரண்டொருவரை மட்டும் வருவித்து, அவருடன் உசாவினர். அப்போது முதியாள் ஒருத்தி, 'இவனுக்கு வீரராகவன் என்று நாமம் சூட்டுங்கள்; சில நாளில் இவனுக்குக் கண்தெரியும்; அஞ்ச வேண்டா; என் சொல்லைக் கேளுங்கள்; யாதொரு குறையும் வாராது. அம்மா, இவ்வாறு சொல்லும்போதே என் உரோமம் சிலிர்க்கிறது!' என்று ஆவேசம் கொண்டவள் போலப் பேசினாள். இதனைக்கேட்ட வடுகநாத முதலியார் தாம் மரபிற் சைவரேனும், மத வைராக்கியம் இல்லாதவரானதால் எங்ஙனமேனும் தம் இனிய மகன் விழி பெற்றால் சாலுமென உட்கொண்டு அதற்கிசைந்தனர். பின் உற்றார் அனைவரும் அம்மைந்தனுக்கு வீரராகவன் என்னும் நாமத்தைச் சூட்டி, உண்டு களித்துத் தாம்பூலம் பெற்றுச் செல்வுழிச் சென்றனர்.

அவ்வருமந்த மகவு நாளொரு மேனியும் பொழு தொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தது. அதன் விளை யாட்டும், மழலை மொழியும், தளர்நடைச் செவ்வியும் பெற் றோருக்கும் மற்றோருக்கும் இன்பத்தையும் துன்பத்தை யும் ஒருங்கே தந்தன. மழலையமுதம் நுகரும் இருமுது குரவரும் உடனே காட்சியின்பம் இழந்த தமது விழிக ளைப்பழிப்பர். குறுகுறு தளர் நடையையும், சிறுகை நீட்டலை யும், இடலையுந் தொடலையும், கௌவலையும் துழத்தலையும் தமது மைந்தன் செய்தலைக் காணும் பெற்றோர் இன்ப மகிழ்ச்சி எய்தாது, குருட்டுத் தன்மையால் இச்செயல் களைத் தம் காதலன் புரிவதாக எண்ணி மயங்கிப் புலம்பு வர். ஆயினும், அப்புதல்வனை நோக்கும் அவர் தம் உறவின் முறையார் அவன் நுண்ணறிவு உடையானென்றும், குறை வின்றிச் செல்வமும் செல்வாக்கும் பெற்று வாழ்வானென் றும், அவ்வப்போது அவர்கட்குத் தேற்றரவு கூறிவருவர்.

இவ்வாறு வீரராகவன் எழுத்தறிவிக்கும் ஐந்தாம் பருவம் எய்தினன். ‘இவனுக்குக் கல்வி புகட்டுமாறு யாங்ஙனம்!’ என நீடு நினைந்து வருந்தினர் வடுகநாதர். ஒரு நாள், அவருடைய வாழ்க்கைத் துணைவியார், தம் கணவ னைரைக் குறுகி, ‘இன்னுயிர்த் தலைவீர், நம் அருந்தவச் செல்வற்குக் கல்வி புகட்ட இயலுமோ? அவனுடன் பிறந்த ஆறுமுகனுக்கும் அருணகிரிக்கும் நாளைத் தைப் பூசத்தில் சுவடி தூக்கப் போகின்றனராம். அது கேட் டது முதல் என் நெஞ்சம் நீராயுருகுகின்றது!’ என்றனர்.

அது கேட்ட முதலியார் வெந்த புண்ணில் வேலுருவி யதுபோல அல்லலுற்றிரங்கித் தம் காதலஞ்செல்வியரைப் பார்த்து, ‘கண்மணி போல்வாய், நாம் என் செய்வோம்!

இறைவன் திருவருள் அவ்வாறு முடிந்தது,' என்றுரைத் துத் தமது விழிநிறைகொண்ட கண்ணீரை மனைவியார் காணுவண்ணங் கரந்து வருந்தி நின்றனர். இச்செவ்வியில் வீரராகவன் பெற்றேரைத் தேடிக்கொண்டு ஆண்டு வந்த னன். அப்போது தாயார் அவனை எடுத்தணைத்து முத்த மிட்டு, 'என் கண்மணியே, உன்னுடன் பிறந்தார் அனை வரும் நாளை பள்ளிக்குச் சென்று எழுத்துப் பயிலப் போகின்றனர். நீ கற்பது எவ்வாறு என்பது தோன்றுமல் நாங்கள் திகைக்கின்ரேம்!' என மொழிந்து வருந்தினர். இது செவியில் நுழைந்ததும் வீரராகவன், தன் அன்னை யரை நோக்கி, 'அம்மா, வாத்தியார் எழுத்துக்களை என் முதுகில் எழுதினல் நான் தெரிந்துகொள்வேன்; நீங்கள் என்னையும் பள்ளிக்கூடம் அனுப்புங்கள்,' என்று விரைந்து விடையிறுத்தனன்.

அம்மொழியை ஆவலுடன் கேட்ட இருமுதுகுரவர் பெருங்களி துளும்பினவராய், மீண்டும் மகனை நோக்கி, 'அப்பா, அறிவின் செல்வமே, எழுத்தை மட்டும் தெரிந்து கொண்டால் போதுமோ? நூல்களை முதுகிலே எங்ஙனம் எழுதிக் கற்கவியலும்?' என்றனர். அதற்கு வீரராகவன் தம் பெற்றேரை நோக்கி, 'பள்ளிக்கூடத்திலே மற்றப் பிள்ளைகள் படிப்பதைக் கேட்டுக்கொண்டே நான் எல் லாம் தெரிந்துகொள்வேன்,' என்றுன். அச்சொல்லைக் கேட்ட பெற்றேர் தமது ஆருயிர்ப் புதல்வன் மதி நுட்பத் தைப் பெரிதும் வியந்து பேருவகை பூத்தனர்.

பின் தைப்பூசத் திருநாளில் முதலியார் தம் மைந் தனையும் மற்றப் பிள்ளைகளோடு பள்ளிக்கு வைத்தனர். தம் மகன் நுண்ணறிவை நன்குணர்ந்திருத்தலின், வடுக நாதர் ஊரார் கூறும் பலப்பல வீணுரையைப் பொருட்

படுத்தவில்லை. பூதூரின்கண் ஒரு திண்ணைப் பள்ளிக்கூடம் உண்டு. அவண் ஓர் உபாத்தியாயர் பெரும்பிரப்பங்கழி ஒன்றை ஏந்திக்கொண்டு ஓரிடத்தே அமர்ந்திருப்பர்; சட்டம்பிள்ளை ஒருவன் பிள்ளைகட்குச் சட்டம் வைத்துத் தருவான்; அவனே கீழ் வகுப்பிலே உள்ள பிள்ளைகட்குப் பாடங் கற்பிப்பான். யாரேனும் ஒரு மாணவன் பேசினால், உபாத்தியாயர் வரிசையாயுள்ள அனைவரையும் சேர்த்து அடித்தல் அத்திண்ணைப் பள்ளிக்கூடத்தின் தருமம். ஆண்டுத் திவாகரம், நிகண்டு, அந்தாதி, நாலடியார் முதலியன ஒருவாறு கற்பிக்கப்படும். நூல்களுக்குப் பொருள் தெரிந்தாலும் தெரியாவிடினும் ஒவ்வொரு நூலையும் முதலிலிருந்து முடிவுவரையில் பிள்ளைகள் உரையோடு 'இதன் பொருள்' என்று தொடங்கி 'என்றவாறு' என்றவரையில் நெட்டுருச் செய்து ஒப்பிக்கும்படி செய்விப்பதில் அக்கணக்காயர் நிபுணர். அங்ஙனம் செய்வதற்கு எத்தகைய தண்டனையேனும் பிள்ளைகளுக்குச் செய்வதற்கு அவர் பின்னிடார். பிள்ளைகளின் தந்தைமாரும் உபாத்தியாயரைக் காணுந்தோறும் தம் மைந்தர் இரண்டு கண்களை மட்டும் விட்டுவிட்டுத் தோலை உரித்துவிடும்படி வேண்டிக்கொண்டு செல்வர். அன்னோர் அங்ஙனம் கேட்டுக் கொள்ளாவிடின், அவ்வுபாத்தியாயர் பிள்ளைகளின் இரண்டு கண்களையுங்கூட உரித்துவிடுவார்போலும்! வீரராகவன் இத்தகைய பள்ளியின்கண் தமிழ் நெடுங்கணக்கு முழுவதும் முதுகிலேயே எழுதிப் பயின்று, பின் உபாத்தியாயருக்குத் தெரிந்த நூல்கள் பலவற்றையும் பின்னொருவன் ஏடு வாசிக்கக் கற்றுத் தேர்ந்தான். அவன் கற்குந் திறனையும், நுட்பமதியையும், நினைவின் ஆற்றலையும் வியவாதார் நயவாதார் இலர்.

பின்னர்ச் சிறிது காலஞ் சென்றதும் வடுகநாத முதலியார்,

'பட்டாளம் நட்டாறு; பழமத்தூர் எதிர்நோக்கு;
ஈசூரும் பூதூரும் என்றைக்கும் அழும்பு.'

என்னும் பழமொழிப்படி பூதூர் பாலியாற்றில் வெள்ளம் வருந்தோறும் வெள்ளக் காட்டால் துன்புறுதலை நோக்கி, அதனை விடுத்துப் பொற்களந்தைப்பதியென்று புகழ் பெற்ற பொன் விளைந்த களத்தூரைத் தமது இருப்பிடமாக அமைத்துக்கொண்டு வாழ்ந்தனர்.

சில்லாண்டுகள் சென்றதும், வீரராகவன் தான் காஞ்சிமா நகரஞ் சென்று ஆங்குச் சிறந்து திகழ்ந்த புலவர் பெருமக்களை அடுத்து, அரும்பெருநூல்களைக் கற்க வேண்டுமெனத் தனது கருத்தைத் தந்தையாருக்கு அறிவித்து, நன்னாள் ஒன்றிலே ஏடு வாசிப்பவன் ஒருவனுடன் திருவேகம்பத்தை அடைந்தனன். ஆங்கண் சிறந்த புலவர் ஒருவரை அணுகி, அவர்பால் முதன்முதல் கற்கத்தக்க நூல்கள் பலவற்றையும், சீவக சிந்தாமணி, சிலப்பதிகாரம் முதலிய பெருங்காப்பியங்களையும், நன்னூல், தொல்காப்பியம், யாப்பருங்கலம் முதலிய இலக்கணங்களையும், திருக்குறள், சங்கச் செய்யுட்கள் முதலியவற்றையும் தன்னுள்ளமே ஏடாகவெழுதிக் கற்றுப் புலமை நிரம்பினன். கல்வியும், அறிவும், குணமும் உடன் முதிர வீரராகவன் காளைப் பருவம் முதிர்ந்தனன். அவன் ஒழுக்கத்தையும், அழகிய குணத்தையுங் கண்ட முது மக்களும் 'அவன்' என ஒருமையாற் கூற அஞ்சி, 'முதலியார்—முதலியார்' என்று மதிப்புடன் கூறுவாராயினர்.

வீரராகவ முதலியார் செய்யுட் பழக்கஞ் செய்யத் தலைப்பட்டுப் பல பாட்டுக்களைப் பாடினர். அப்பாட்டுக்கள்

முதலிலேயே நற்பெரும்பாவலர் பாக்களையொத்துச் சொற் சுவையோடு பொருட்சுவை பொருந்தியிருந்தன. அவ்வியல் பைக் கண்டு மகிழ்ந்த கச்சி நகரத்துப் புலவர்கள், அவரைக் 'கவி வீரராகவ முதலியார்' என அழைக்கத் தொடங்கி னர். அந்தகரும் கவியும் ஆனதால் ஒரு சிலர் 'அந்தகக் கவி வீரராகவ முதலியார்' எனவும் அறைவர். கவிராயர் பின்னர்த் தமக்கு இயற்கையிலேயே அமைந்துள்ள இசை யுணர்ச்சியை மிகுதிப்படுத்த விழைந்து வீணைப்பயிற்சி செய்யத் தொடங்கி இசைத்த தமிழ்ப் புலமையும் பெற்றார். இங்ஙனம் கவி வீரராகவர் எவரும் மீக்கூறச் சிறப்பும் சீரும் பொருந்தச் சிறிது காலம் அங்குறைவராயினர். அப்போது அவர் புலமையை மெச்சிக் கந்தபுராணம் பாடிய கச்சியப்பர்,

"பொங்குதமிழ் அயோத்தியில்வாழ் தசரதனென்
போனிடத்தும் பூதூர் வேந்தன்
துங்கவடு கன்னிடத்தும் வீரரா கவர்இருவர்
தோன்றி னால்:
அங்கொருவன் ஒருகலைமான் எய்திடப்போய்
வசைபெற்றான்; அவனி பாலன்
இங்கொருவன் பல்கலைமான் எய்திடப்போய்க்
கவியினால் இசைபெற் றானே."

என ஒரு செய்யுள் கூறினர்.

காஞ்சிபுரத்திற் கல்வி கற்றுப் புலமை செறிந்து மீண்டு, தம்மூராகிய பொற்களந்தைப் பதியினை அடைந்த கவிஞருக்கு மரபானும் செல்வத்தானும் ஒத்த ஓர் அழகிய மடந்தையினைப் பெற்றோர் மணம் புரிவித்தனர். அவர் தம் நாவிறுடைமையைக் கண்டும், பிறராற் கேட்டுங் கழி மகிழ்

வெய்திய இருமுதுகுரவரும், உறவினரும் தம் கவலை யொழிந்து செருக்கித் திரிந்தனர்.

> "ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
> சான்றோ னெனக்கேட்ட தாய்."

என்பது பொய்யாமொழியன்றோ? இவரது மெய்ப்புகழ் தொண்டைநாடு முழுவதும் பரவிப் பரிமளித்தது. சிறிது காலம் சென்றபின் நம் பாவலருக்குத் தாய் தந்தையர் இரு வரும் இம்மண்ணுலக வாழ்வை நீத்துப் பொன்னுலக வாழ்வையடைந்தனர். அக்காலத்துக் கவிஞர் பெருமான் இன்னற்கடலுள் அழுந்திக் கரை காணாது திகைத்தனர். பின் இறைவன் திருவருளையுன்னி ஒருவாறு தேறியிருந்த னர். கவிஞர் தம் அருமை மனைவியோடு,

> "தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு
> ஐம்புலத்தா றோம்பல் தலை."

என்ற பெருநாவலர் பொருண்மொழிக்கிலக்காக அறம் புரிந்து வாழும் நாட்களில், ஒரு நாள் கவிராயர் புறத்தே சென்று மீண்டும் இல்லம் புகுந்தனர். அப்போது அவர் மனைவி, மாதர் சிலருடன் அமர்ந்து வீணுரைகளைக் கரும்பு போலச் சுவைக்குமாறு பேசிக்கொண்டிருந்தனள். அவள், வார்த்தையின் சுவையிலே தோய்ந்திருந்தமையால், தன் கணவனார் வருதலையும் காணாளாயினள். அப்பொழுது முதலியார் வருகையை அறிந்த பாவை ஒருத்தி, அவர் தம் இல்லாட்குணர்த்த, அம்மடவாள் அவர் பெருமை குறி யாது, 'வந்தாலென்ன? புலமை பெற்றதனால் வளநாடும் இளங்கன்றும் பெற்று வந்தனரோ? என்று சரசந்தோன் றப் புன்சிரிப்புச் செய்து சிறிது இகழ்ந்துரைத்தனள். கற் றோர் பெருமையை மற்றோர் அறியாமையும், அவரை இகழ்

தலும் இவ்வுலகத்தியற்கை யன்றோ! அது புலவர் செவியில் சுருக்கெனப் பாய்ந்தது. அத்தீச்சொல் பொருராய்த் தாம் வேற்றிடஞ் சென்று சிறிது நேரம் ஆழ்ந்து சிந்தித்து,

"பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்."

என்னுந் தமிழ் மறையின் பொருளைக் கூர்ந்து மனங்கொண்டு, பொருளீட்டும் கருத்துடையராய்த் தம் மாணவகன் ஒருவனோடு அக்கணமே வீட்டைவிட்டகன்றனர். அகன்றவர், தம் நண்பர் ஒருவரது மனையை அடைந்து, சிறிது கட்டமுது தரும்படி கேட்டுப் பெற்றுக்கொண்டு, தேச யாத்திரை செய்யத் தொடங்கினர். இஃதறிந்த அவர் தம் மனைவி அஞ்சி, நடுநடுங்கிக் கையை முறித்துக்கொண்டு, 'அந்தோ! அறியாது செய்த பிழைக்கு என்ன செய்வேன்! விளையாட்டு வினையாக முடிந்ததே!' எனக் கவலை கூர்ந்து, தன் கொழுநர்பால் உற்றாரைச் சேர்ப்பித்துத் தனது குற்றத்தைப் பொறுத்தருளுமாறு வேண்டினள். அவ்வாறு பலரும் அவரிடஞ் சென்று வேண்டியும், கவிராயர், 'தேச யாத்திரை செய்யாது மனைக்கு மீளேன். இது திருவருள் இசைவால் நேர்ந்ததேயன்றி வேறன்று. என் மனைவிமீது எனக்கு எத்தகைய வெகுட்சியுமின்று,' என்று கூறி, அவர் எல்லாரையும் போக்கினர். அவர்களும் ஒருவாறு அவ்வுரையை ஒப்புக்கொண்டு, கவிஞர் கிழத்தியிடம் சென்று, அவர் கருத்தை உணர்த்தி, அவளுக்கு ஆறுதல் கூறினர்.

இங்ஙனம் தேசயாத்திரை செய்யத் தொடங்கி வழிக்கொண்டு பிரயாணம் செய்து வருகையில், வழியிலுள்ள ஒரு தாமரைத் தடாகத்தருகே உண்ணுதற்கு எண்ணித்

தங்கினார். மாணவகன் குளத்துள் இறங்கித் தாமரை இலை பறித்து வரச்சென்றான். அப்போது ஒரு நாய் மெல்லெனப் புகுந்து, கட்டமுதைக் கவ்விக்கொண்டு ஓடிற்று. புலவர் செஞ்சொல்லை நினைந்துருகி மனப்பழக்கஞ் செய்து கொண்டிருந்தனர். நினைவும் மறந்து, கண்ணுங் குருடாய் இருந்தமையான், தோட்கோப்பு நாயின் வாய்க்கோப் பாயினமையைப் புலவர் அறிந்திலர். மாணவன் இலையுடன் வந்து ஆற்றுணவைப் பார்க்க, அதனை நாய் கொண்டு சென்று, மூட்டையை வாயால் சிதைத்துண்ணுதலைக் கண்டு, பாவலருக்குப் பகர்ந்தான். அப்போது அவர்,

" சீராடை யற்ற வயிரவன் வாகனஞ் சேரவந்து
பாராரு நான்முகன் வாகனந் தன்னைமுன் பற்றிக்கௌவி
நாரா யணனுயர் வாகனமாயிற்று : நம்மைமுகம்
பாரான்மை வாகனன் வந்தே வயிற்றினிற் பற்றினனே.

என ஒரு செய்யுளை நகைச்சுவையாகப் பாடித் திருவருட் செயலை வியந்து வாளாவிருந்தனர்.

" குடிப்பிறப் பழிக்கும் விழுப்பங் கொல்லும்
பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்
நாணணி களையும் மாணெழில் சிதைக்கும்
பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்
பசிப்பிணி யென்னும் பாவி."

என்ற சீத்தலைச் சாத்தனார் திருவாக்கின்படி பசி கடுகப் புலவர் மெய்சோர்ந்து, வாய் சோர்ந்து, அறிவும் சோர்ந்து, வழி வந்த வருத்தத்தாலும் இளைப்பாலும் ஆண்டிருந்த பழுமரத்தின் கீழே தமது துணியைப் பாயலாக விரித்து, அதன்மேல் படுத்துக் கண் வளர்ந்தனர். அக்காலை வழிப்

பிரயாணஞ் செய்திருந்த வேளாண் செல்வர் ஒருவர் அக் குளக்கரையில் களைப்பாறுவான் இறங்கினர். அவர் கவி ராயரைக் கண்டு அவரிடம் தூண்டுணைச் சென்று, அவ ருக்கு முகமனுரைத்து, உண்வு கொள்ளுமாறு வேண்டித் தாம் கொணர்ந்த பல வகைப்பட்ட ததியோதனம், புளி யோதனம், சருக்கரைப் பொங்கல், மிளகு பொங்கல், எலி மிச்சம்பழச் சாதம் முதலிய சித்திரான்னங்களையும், தேங் குழல், மிளகு வடை, பொரி விளங்காய் உருண்டை, பாகு சேர்ந்த அவல் முதலிய தின்பண்டங்களையும், வாழை, பலா, மா முதலிய கனி வகைகளையும் மிக்க உபசாரத் துடன் ஊட்டி, துவர்க்காய்த் தூளும், இளங்கால் வெற் றிலையும் தந்து, அவருடன் அளவளாவினர். அம்முதலியார் தாம் இராமேசுவர யாத்திரை செய்யப் புறப்பட்டமை யைக் கவிஞருக்குச் செப்பி, அவரையும் உடன் வருமாறு வற்புத்தி அழைத்துக்கொண்டு, புலவர் விருப்பப்படி சோணாட்டிலே அவரை விடுத்துத் தஞ்செலவுமேற் சென்றனர்.

சோழ நாட்டிலே சிலநாள் வைகி, ஆண்டு மொழிக்கு மொழி தித்திப்பாகப் பாடிய சைவசமய குரவரால் திருப் பாடல் பெற்ற பெருமை மிக்க திப்பிய தலங்களாகிய தில்லை, சீர்காழி, திருவாரூர், திருவையாறு முதலியவற்றைக் கண்டு வணங்கிப் புலவர் ஈழநாட்டை அடைந்தனர்.

அக்காலத்து அதன் வடபாகத்தைப் பரராச சிங்கம் என்னுந் தமிழவரசன் அரசாண்டு வந்தான். அவர் அவண் சென்று வேந்தர் பெருமான் திருமுன்னர்ச் செல்லுதற்குப் பல நாள் காத்திருந்தனர். 'வீரராகவ முதலியார் இயற் றமிழ்ப் புலமையேயன்றி இசைத் தமிழ்ப் புலமையும்

வாய்ந்தவர். யாழ் வாசிப்பதில் அவர் பெருந்திறல் படைத்தவர்,' என்ற செய்தி எங்கும் எட்டிற்று. அதனால் பலரும் புலவரைச் சூழ்ந்து அவர் கலைத்திறனை அறிய விரும்பினர். கவிஞர் அதற்கிணங்கித் தம் புலமையைப் புலப்படுத்தினர். அவர் செந்நாப் புலமையையும், யாழிசையையும் அப்பதியிலுள்ள பெருமக்கள் அனைவரும் அறிந்து வியந்து கொண்டாடினர். ஆயினும், மன்னவன் பேட்டி மட்டும் அவருக்கு நெடுநாட்காறும் கிடைத்திலது. கவிஞரது அரிய பெரிய செயல்களை வேத்தவைப் புலவர் பலரும் தெரிந்திரிந்தும், அழுக்காற்றால் அரசற்கு அவற்றை அறிவித்திலர்.

இஃதிவ்வாறாக, அரையன் பெருந்தேவி நாவலர் செய்தி முற்றுங் குறைவறக் கேட்டுக் கழிபேருவகை எய்தி, அவரைத் தன் காதலனாகிய வேந்தன் காணுதிருத்தலைக் குறித்து முனிந்து, அக்கால வழக்கப்படி அவனுடன் ஊடுவாளாயினள். இறைவன் அவள் பிணங்கியமைக்குக் காரணம் இற்றெனை அறிந்திலன். புரவலன் எத்துணையோ நன்மொழிகள் கூறியுணர்த்தியும், அது பயன்பட்டிலது. பின் காவலன் அவ்விடம் விட்டகன்று தன் ஆருயிர்த் தலைவியினது புலவியின் முதலை நாடி நின்றனன். மறு நாள் மன்னன் தனது இளமரக்காவையடைந்து, அங்குள்ள அழகுகளையெல்லாம் உற்று நோக்கி உவகை துளும்பினன். அக்கால் ஒரு மாப்பொந்தில் கிள்ளையொன்று கூடு கட்டியிருந்தது. அம்மரத்தருகே வாழை மரங்கள் செறிந்து, குருத்தீன்று பச்சைப் பசேரெனப் பார்ப்பவர் கண்களைப் பறிப்பன போலத் திகழ்ந்து தோன்றின. கிளி குஞ்சு பொரித்திருந்தது.

அக்குஞ்சுகளுக்கு இறை தேடும் பொருட்டுத் தாய்ப் பறவை வெளிச் சென்றிருந்தது. தாயின் வருகையை ஆவலுடன் எதிர் பார்த்திருந்த பார்ப்புக்கள் பஞ்சரத்தினின்றும் தம் குறுந்தலைகளைப் பைய நீட்டி எட்டிப் பார்த்தன. அப்போது கதலிக் குருத்தொன்று அம்மரப் பொந்துக்கு நேரே காற்றால் அசைய வளைந்து, அம்மரப் பொந்தைத் தொடுவது போலச் சாய்ந்தது. அது கண்ட குஞ்சுகள் குருத்துப் பசியதாய்ச் சுருண்டு மேலே பாய்வது போல வருதலின், அதனைப் பாம்பெனப் பிறழ உணர்ந்து உள்ளே தந்தலைகளை இழுத்துக்கொண்டன; குருத்து மீண்டு சென்றதைக் கண்டு மறுவலும் தம் தலைகளை நீட்டின; பின்னரும் குருத்துச் சாயக் கிளிப்பிள்ளைகள் உள்ளே பதுங்கின. இவ்வினிய காட்சியைக் காணுந்தோறும் அத்தோன்றல் இயற்கை அமைப்பின் வனப்பை வியந்து நனியுவகை பூத்தான். எனினும், கிள்ளைப் பிள்ளைகளின் அச்சத்திற்குக் காரணம் அவனுக்குப் புலப்படவில்லை. அதனால், அவனுக்குக் கவற்சி பெரிதாயிற்று. அரசன் அன்று அத்தாணி மண்டபங் குறுகியதும் ஆங்கு வீற்றிருந்த கழகப் புலவர்களை நோக்கி, ' அருந்தமிழ்ப் புலவீர், என் மனக்கவலை இன்னதென நும் நுண்மாண் நுழைபுலனாற் கண்டுரைமின்,' என்றான். பாவலர் யாவரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து விழித்தனர்.

பின் அந்நாவலருள் ஒருவர், செம்மலைச் செவ்வன் நோக்கி, ' வேந்தர் பெருமானே, தமது பேட்டியைக் காணப் பல நாளாகக் காத்திருக்கும் வீரராகவ முதலியார் என்னுந் தமிழ் நாட்டுப் புலவர் கண்ட சுத்தி பாடுவதில் அதிசமர்த்தர். அவரைத் தருவித்தால், அவர் நும் உள்ளக்

கிடையை உள்ளவாறு உரைக்கக்கூடும்,' என்றனர். அதனைச் செவியேற்ற மன்னன் அவ்வாறே உடன்பட்டுக் கவி வீரராகவ முதலியாரை வருவித்தான். அவ்வேளை ஆண்டிருந்த முதுமக்களில் சிலர் அரசன் அந்தகரைக் காணலாகாதென்னும் நியாயத்தைக் காட்டிக் கவிவாணருக்கும் அரையனுக்கும் குறுக்கே ஒரு திரை இடுவித்தனர். கவிராயரும் புவிராயன் அவைக்கண்ணே புகுந்தனர்.

அதுகாலை முதலியார் மாணவகன், அங்கே திரையிடப்பட்டிருந்த செய்தியைப் பாவாணருக்குக் குறிப்பிக்கக் கருதி, 'சிவசிதம்பரம்' என்று இரு முறை கூறி, அவருக்கென இடப்பட்டிருந்த இருக்கையில் அவரை இருத்தினன். அதனைத் தெள்ளிதின் உணர்ந்த கவிஞர், 'அண்ணாமலை' என இரு முறை கூறித் திருவருளைச் சிந்தித்தனர். அத்திரையில் உடனே தீப்பற்றிக்கொள்ள, ஏவலர் அதனை அறுத்து வீழ்த்தினர். அதனைக் கண்டோர் புலவர்பால் அச்சமும் வியப்பும் கொண்டு ஒருபால் ஒதுங்கினர். அரையன் அவரை அணுகினன். பின்னும் அவரைத் தேர்ச்சிசெய்யக் கருதி, அமைச்சர் காவலன் கையில் வில்லும் அம்பும் அளித்து, முதலியாரைப் பார்த்து; 'பாவலரேறே, இப்போது அரையன் கோலம் எவ்வாறு உளது? கூறுமின்,' என்றனர். கேட்டலும் அவர், 'அபிராமா, இன்று நீ வில்லை எடுத்த காரணம் யாது? இங்கு இலங்கைக் கோமான் இலையே! நான் இயற்றமிழ்க் கோமான்; மாய மானும் இல்லை, நான் கல்விமானே; ஏழு மராமரங்களும் இல்லை; இங்குள்ளார் அனைவரும் நீட்டோலை வாசிக்கும் நன்மக்கள்,' என்று பல பொருள் தொனிக்கச் சுவை துறும,

'வாழும் இலங்கைக்கோ மானில்லை மானில்லை
ஏழு மராமரமோ இங்கில்லை—ஆழி
அலையடைத்த செங்கை அபிராமா இன்று
சிலையெடுத்த வாறெமக்குச் செப்பு.'

என்று சாதுரியமாக அரசன் கோலத்தைப் போர்க் கோலமாகத் தற்குறிப்பேற்றவணி தோன்றப் புகழ்ந்து கூறினர். யாவரும் விம்மிதமடைந்து, புலவர் ஒப்பனை அழகை வியந்தனர்; பின் வேத்தவையில் அவரைத் தரு வித்த காரணத்தை வெளிப்படுத்தினர். அது செவிமடுத்த கவிஞர் பெருந்தகையார்,

'வடவைக் கனலைப் பிழிந்துகொண்டு
மற்று மொருகால் வடித்தெடுத்து
வாடைத் துருத்தி வைத்தூதி
மறுகக் காய்ச்சிக் குழம்புசெய்து
புடவிக் கயவர் தமைப்பாடிப்
பரிசு பெறுமல் திரும்பிவரும்
புலவர் மனம்போற் சுடுநெருப்பைப்
புழுகென் றிறைத்தாற் பொறுப்பாளோ
அடவிக் கதலிப் பசுங்குருத்தை
நச்சுக் குழலென் றஞ்சியஞ்சி
அஞ்சொற் கிளிகள் பஞ்சரம்விட்(டு)
அகலா துறையும் அகளங்கா!
திடமுக் கடவா ரணமுகைத்த
தேவே! தேவ சிங்கமே!
திக்கு விசயஞ் செலுத்திவரும்
செங்கோல் நடாத்தும் எங்கோவே!'

என்னும் அருமையான செய்யுளை அணியுறக் காவலன் கருத் துணர்ந்து இனிது விளம்பினர். தேவியின் ஊடலுக்குக் காரணம் புலவருக்குப் பேட்டி அளியாமையே என்பது

முன்னிரண்டடிகளிலும், கிளிப் பார்ப்புக்கள் அஞ்சியது வாழைக் குருத்தைப் பாம்பென எண்ணியதே என்பது பின்னிரண்டடிகளிலும் பொதிந்திருத்தலைக் கண்ட மன்ன வன் அளவிறந்த உவகை வெள்ளத்தழுந்திப் புலவாண ருக்குப் பற்பல வரிசைகளைப் பொற்பந்தம், யானைக்கன்று முதலியவற்றுடன் பாராட்டி வழங்கினன். புலவர் பொற் பந்தம் பெற்ற போது,

'பொங்குமிடி யின்பந்தம் போயதே! என்கவிதைக்
கெங்கும் விருதுபந்தம் ஏற்றதே!—குங்குமந்தோய்
வெற்பந்த மானபுய வீரபர ராசசிங்கம்
பொற்பந்தம் இன்றளித்த போது.'

என்று பாடி உவந்தனர். பின்னர் யானைக் கன்றும் பரி சிலாதலைக் கண்டு, 'அந்தோ! என் ஒரு வாய்க்கே படும் பாட்டிற்கு அளவில்லை. இந் *நால்வாய்க்கு இரை எங்கே தூரப்புவேன்,' எனச் சொன்னயம்பட,

' இல்லெனுஞ்சொல் லறியாத சீமையில்வாழ்
தானனைப்போய் யாழ்ப்பா ணன்யான்
பல்லைவிரித் திரந்தக்கால் வெண்சோறும்
பழந்தூசும் பாலி யாமற்
கொல்லநினைந் தேதனது நால்வாயைப்
பரிசென்று கொடுத்தான் பார்க்குள்
தொல்லையென தொருவாய்க்கும் நால்வாய்க்கும்
இரையெங்கே தூரப்பு வேனே!

என்று பாடியதைக் கேட்ட இறைவன் அக்கன்று வளரும் பொருட்டு வளநாடு ஒன்றும் வழங்கினன். பிறகு புலவர் சிறிது காலம் ஆண்டே உறைவாராயினர். ஈழ நாட்டுப்

* நால்வாய்=நான்கு வாய்; யானை

புலவர் சிலர் அவருக்குச் சில வினாக்களை விடுப்ப, அவர் அவைகட்குத் தக்க விடை இறுத்தனர். அவ்வினா விடைகள் வருமாறு :

வினா:—உதிரமுண்ணும் பறவை யாது?
விடை:—துக்கம்.
வினா:—பசும்பால் என்னும் பண்புத் தொகைக்குப் பொருள் என்ன ?
விடை:—கார்காலத்து வெள்ளாட்டுப் பால்.
வினா:—பங்கமின் மாது பசுமஞ்சள் நன்றிழந்தும்
மங்கலமும் நன்கலமும் மற்றிழக்காள்
—சங்கையென்ன
விடை:—
மங்கல மென்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு.

இவ்விடைகளைக் கேட்ட அப்புலவர் மனமகிழ்ந்து கவிவாணருக்குக் கெழுதகை நண்பராயினர்.

ஒரு நாள் பரராச சிங்கன் வீரராகவ முதலியாரைத் தாம் கம்பராமாயணப் பிரசங்கம் செய்தல் வேண்டுமென விழைவுடன் கேட்டனன். அதற்கு முதலியார் இசைந்து கம்பராமாயணத்தைத் தருவித்து, அதினின்றுஞ் சில பாக்களை மாணவன் ஒருவன் படித்துவரத் தமது சொல் வன்மையும் மதி நுட்பமும் பரந்த புலமையும் இனிது தோன்றப் பிரசங்கித்தனர் ; பின்னர் அந்நூலைப் பிரித்து ஆங்கிருந்தார் பலரிடத்தும் பற்பல ஏடுகளைத் தந்து, அவரைப் படிக்கச்சொல்லிக் கேட்டனர் ; அதன்பின் ஏடுகள் அனைத்தையும் கட்டி வைத்துவிட்டுச் செல்லுமாறு அவரைப் பணித்தனர். மறுநாட்காலையில் புலவர், நிருபன் பட்டி மண்டபத்தை வழக்கம்போல அடைந்து, கவலைக் குறிப்

புடன் அமர்ந்திருந்தனர். அப்போது அரையன், முதலி யாரைப் பார்த்து, 'முத்தமிழ்ப் புலவீர், தமக்கு யாதோ கவலை இருப்பதாகத் தெரிகின்றது! அதன் காரணம் யாது? விளங்கச் சொல்லல் வேண்டும்,' என்று வின விஞன். அதற்குக் கவிராயர், வேந்தனை நோக்கி, 'மன்ன ரேறே, நெருநல் இரவு இராமாயாணப்போர் ஒப்படி செய் தேன். அதனுல், இச்சோர்வு நேர்ந்தது,' என்று விடுத் தனர். அது கேட்ட காவலன், 'அங்ஙனமாயின், கண்டு முதல் யாது?' என்றுன். அதற்கு அவர், 'அரசே, அடித்தது பத்தாயிரம்; அதில் நெல் நாலாயிரம்; கல் இரண்டாயிரம்; புல் நாலாயிரம்,' எனக் கம்பராமாயணத் தைப்பற்றிய தமது கருத்தை நன்கு புலப்படுத்தினர். பரராச சேகரன் இராமாயணத்தின்கண் இரண்டாயிரம் செய்யுட்கள் கல்லைப்போலக் கடினமானவை என்பதும், நாலாயிரம் பாடல்கள் நெல்லைப்போலப் பதமுறுமாறு செம்பாகம் உடையன என்பதும், நாலாயிரம் பாட்டுக்கள் புல்லைப் போலப் பயன்படுவனவல்ல என்பதும் கவிஞர் கூற்றுனறிந்து மகிழ்ந்து, அவரது அதி தீவிர புத்தி நுட் பத்தையும், அவதான சக்தியையும் வியந்து,

'இன்னங் கலைமகள் கைம்மீதிற் புத்தக மேந்தியந்தப்
பொன்னம் புயப்பள்ளி புக்கிருப் பாளென்ன புண்ணியமோ
கன்னன் சயந்தன் கவிவீர ராகவன் கச்சியிலே
தன்னெஞ்சம் ஏடெனக் கற்றுன் கனமுத் தமிழையுமே.'

என ஒரு சிறப்புச் செய்யுள் கூறினன்.

அன்றியும், மன்னவன் கவி வீரராகவ முதலியார் பால் வைத்திருந்த அன்பும், நன்மதிப்பும் சாலச் சிறந்தவை. அதனுல், அவர் பாடிய வண்ணத்தைப் பாராட்டி,

'விரகன்முத் தமிழ்க்கவி வீர ராகவன்
வரகவி மாலையை மதிக்கும் போதெலாம்
உரகனும் வாணனும் ஒப்பத் தோன்றினுல்
சிரகர கம்பிதஞ் செய்ய லாகுமே!'

என்றும், அவர் இயற்றிய ஆரூருலாவைக் கேட்டு, அதன் சொன்னேக்கும், பொருளமைதியும், தொடை அழகும் நோக்கிப் பேருவகை வயத்தனுய்,

'புவியோர் பெறுந்திரு வாரூ ருலாவைப் புலவர்க்கெல்லாஞ்
செவியே சுவைபெறு மாறுசெய் தான்சிவ ஞானவனு
பவியே யெனுநங் கவிவீர ராகவன் பாடியாற்
கவியே கவியவன் அல்லாத பேர்கவி கற்கவியே.'

என்னுமோர் செய்யுளைப் பாடினுன்.

பின்னர்க் கவிவாணர் ஈழ நாட்டிலே தமிழக் குடிகள் பலரைக்குடியேற்றிச் சில்லாண்டுகள் அங்கு வாழ்ந்திருந்து, அரசன்பால் விடை பெற்று, அவன் அளித்த பரிசில்க ளுடன் தமிழ் நாட்டுக்கு மீண்டனர். அப்போது புலவர் வரும் வழியில் திருநெல்வேலியிலுள்ள கயத்தாறு என்னும் ஊர்ப் புரவலன்மீது ஓருலாப் பிரபந்தம் பல அணிகளும் பொதுளப்பாடி அரங்கேற்றினர். அதன் விஞ்சிய சுவையை வியந்து அங்கமர்ந்திருந்த அருங்கவிஞர் ஒருவர்,

'ஒட்டக்கூத் தன்கவியும் ஓங்கியகம் பன்கவியும்
பட்டப் பகல்விளக்காய்ப் பட்டவே—அட்டதிக்கும்
வீசும் கவிவீர ராகவனும் வேளாளன்
பேசுங் கவிகேட்ட பின்.'

என்னும் வெண்பாவைப் பாடினர். அப்பால் முதலியார் தமதூராகிய பொற்களந்தைப்பதி புகுந்து தம் மனைவிக்குத் தமது வருகையையும், தாம் வளநாடும் இளங்கன்றும்

உழும்' என்றாள். கவி, 'கம்ப மா' என்றார். மனைவி, கம்பு மாவென நினைத்து, 'களியாகும்' என்றாள். கவி கடைசியில் 'கைம்மா' என்றார். மனைவி யானையென உணர்ந்து, இதுகாறும் கவி குறித்த பொருளைத் தான் தெரிந்துகொள்ளாமைக்காகக் கலங்கி நின்றாள். இந்நிகழ்ச்சியை அமைத்துக் கவிராயர்,

"இம்பர்வா னெல்லை இராமனையே பாடி
என்கொணர்ந்தாய் பாணநீ?' என்றாள் பாணி;
வம்பதாங் களபமென்றேன்; பூசும் என்றாள்;
மாதாங்கம் என்றேன்; நாம் வாழ்ந்தோம் என்றாள்;
பம்புசீர் வேழமென்றேன்; தின்னும் என்றாள்;
பகடென்றேன்; உழும்என்றாள் பழனந் தன்னை;
கம்பமா என்றேன்; நற் களியாம் என்றாள்;
கைம்மாஎன் றேன்; சும்மா கலங்கி னாளே.'

என்னும் இனிய கவியை இயம்பினர்.

இவ்வாறு இவர் தம் மனைவியோடு மனையறம் நடாத்தி வருங்கால் இவருக்கு நோய் உண்டாயிற்று. அந்நோய்க்கு எருமைப் பால் மிகுதியும் வேண்டப்படுவதாயிற்று. அக்கால் புலவாணர் காளத்தி கிருஷ்ணப்ப வாணன் என்னும் திருமகனுக்கு,

'இனிதினிதெ னச்சேர சோழபாண் டியர்மெச்சும்
இச்சித மதுரவாக்கி
ஈழமண் டலமளவுந் திறைகொண்ட கவிவீர
ராகவன் விடுக்குமோலை,
வனிதையர்வி காரமன் மதராச ரூபன்
மயிலையா திபதிசக்ர
வாளத்தி யாகிநங் காளத்தி கிருஷ்ணப்ப
வாணன்எதிர் கொண்டுகாண்க;

கனதமிழ்த் துறையறிம ரக்கலங் கல்வியாம்
கன்னிகா மாடமன்னூற்
கட்டுபேர் கொட்டாரம் வாணிசிங் காதனம்
கவிநாட கஞ்செய்சாலை
வினவுசிவ காதையிற் சர்க்கரையெ னத்தக்க
வினையேன் உடம்புநோயால்
மெலியுமோ மெலியாத வகைபால் பெருத்ததொரு
மேதிவர விடவேணுமே'

என்றொரு சீட்டுக் கவி எழுத அச்செல்வன் உடனே பால் மேதி ஒன்றை அளிக்கப் புலவர் குறை தீர்ந்தனர்.

பின்னொருகால் செந்தமிழ்ச் செல்வர் குதிரை வேண்டிச் சேலத்தைத் பரிபாலித்து வந்த செழிய தரையனுக்கு,

'ஏடாயி ரங்கோடி எழுதாது தன்மனத்
தெழுதிப் படித்தவிரகன்,
இமசேது பரியந்தம் எதிரிலாக் கவிவீர
ராகவன்வி டுக்குமோலை,
சேடாதி பன்சிர மசைத்திடும் புகழ்பெற்ற
திரிபதகை குலசேகரன்,
தென்பாலை சேலம்பு ரந்துதா கந்தீர்த்த
செழியன்எதிர் கொண்டுகாண்க:
பாடாத கந்தருவம் எறியாத கந்துகம்
பற்றிக்கொ ளாதகோணம்
பறவாத கொக்கு அனற் பண்ணுத கோடைவெம்
படையில்தொ டாதகுந்தம்
சூடாத பாடலம் பூவாத மாவொடுதொ
டுத்துமுடி யாதசடிலம்
சொன்னசொற் சொல்லாத கிள்ளையொன் றெங்குந்து
திக்கவர விடல்வேண்டுமே.'

என்னுஞ் சீட்டுக்கவி ஒன்று தீட்ட அவனும் பரிமா ஒன்றனுப்பிப் பாவலர் குறைமுடித்தான். அவனைக் குறித்துப் பலருஞ் சேறலையும், மற்றோரிடத்து யாருஞ் சேருதலின்மையும் அமைத்து ஒட்டு என்னும் அலங்காரம் தோன்ற,

‘ சாலப் பழுத்த மரம்பார்த் தெறிவர்;தண் ணீர்சுரக்கும்
ஞாலத் தகழ்வர் ; கறக்கின்ற ஆவைநற் கால்தளைவர் ;
நீலக் கடல்விட்டுப் பாலாழி மத்திட்டு நிற்பர்;என்னீர்
சேலத்து வேந்தன் அகத்தாகந் தீர்த்த செழியனுக்கே.’

என்று ஒரு செய்யுளையும் புலவர் பின்னொருகால் பாடினர். மற்றொருகால் இவர் விசய ராசன் என்னுங் கோமானைக் கண்டு மீள, அவன் இவரை விட்டுப் பிரிய மனமின்றியும், பெரியோர் பின் சென்று வழிவிட வேண்டுமென்னும் கருத்துப் பற்றியும், இவர் பல்லக்கின் பின் வந்த போது இவர்,

‘ திருமாலு மீசனும் பின்போயுந் தூதுசெ லத்துணிந்தும்
அருமா துரியத் தமிழ்வளர்த் தாரவ ரோடுபங்கால்
வருமா மறையவன் பேர்சாதித் தேமிக வண்டமிழ்க்கும்
பெருமான் சிவிகைப்பின் சென்றான் விசயப் பிரமனுமே’

என்று பாடி, அன்னான் அருங்குணச் செல்வத்தைப் பாராட்டினர்.

வேறொரு சமயம், பாவலர் இடும்பா வனம் என்னும் ஊரிலே தங்கியிருந்த பொழுது தமக்கு நேர்ந்த இன்னல்களைக் குறித்து,

‘ பசிமுடுக நோவதல்லாற் பாழ்வீட்டில் பாழ்த்த
கொசுகுகடி யாலுங் குமைந்தோம்—மிசையில்
நெடும்பாவம் யாஞ்செய்தால் நீரென்ன செய்வீர்
இடும்பா வனநாத ரே !”

என்ற ஒரு பாட்டைப் புனைந்தார்.

இன்னுமொருகால் முதலியார் இலக்கண விளக்கம் செய்த வைத்தியநாத நாவலரைச் சந்தித்து, அவருக்குச் சங்க நூல்களிலுள்ள விழுப்புலமையை நன்றி போற்றி,

'ஐம்பதின்மர் சங்கத்த ராகிவிடா ரோநாற்பத்
தொன்பதின்ம ரென்றே யுரைப்பரோ—இம்பர்புகழ்
வன்மீக நாதன் அருள் வைத்தியநா தன்புடவி
தன்மீதந் நாட்சரித்தக் கால்.'

என்று ஒரு பாச்செய்யுள் மொழிந்தனர்.

சிறிது காலஞ்சென்றபின் கவி வீரராகவ முதலியார் தாம் சந்திரவாணன் மீது பாடிய கோவையை அரங்கேற்றத் தொடங்கி, 'பெருநயப்புரைத்தல்' என்னுந் துறை அமைந்த,

'மாலே நகராகுஞ் சந்திர வாணன் வரையிடத்தே
பாலேரி பாயச்செந் தேன்மாரி பெய்யநற் பாகுகற்கண்
டாலே யெருவிட முப்பழச் சேற்றின் அமுதவயல்
மேலே முளைத்த கரும்போஇம் மங்கைக்கு மெய்யெங்குமே.'

என்னுஞ் செய்யுளைச் சொல்லி வாய்மூடுமுன், அங்கிருந்த அம்மைச்சி என்னும் புலமை நிறைந்த தாசியொருத்தி, 'கவிராயர்க்குக் கண்தான் கெட்டது ; மதியுங் கெட்டதோ?' என்றாள். அது கேட்ட கவிராயர், உடனே அவள் குறிக்கும் பொருள் இன்னதென அறிந்து, கையேடு வாசிக்கும் மாணவனை நோக்கி, 'அக்கொம்பை வெட்டிக் காலை நடு,' என்றனர். அவன் அஃதுணர்ந்து உடனே செய்யுளிலுள்ள சேற்றின் என்னும் பதத்தைச் சாற்றின் என மாற்றிப் படித்தான். அம்மைச்சி அவர் தம் கூர்மையைக் கொண்டாடினள். ஆண்டிருந்தார் பிறர், அக்கருத்துப் புலப்படாமையால் திகைத்துக் கவிராயரை விளக்கும்

படி வேண்டினர். அவர், 'புலவீர், அம்மைச்சி என்னும் இம்மாதரசியார், எமது பாட்டில் கரும்பு சேற்றில் முளைத்திருப்பதாகக் கூறியிருப்பது, அது புன்செய்ப் பயிராதலின் பொருந்தாதெனக் குறிப்பிட்டார். அஃதுணர்ந்த யாம் சேறு என்னுஞ் சொல்லிலுள்ள சுழியை நீக்கிச் சகரத்தின் பின் கால் கொடுத்து வாசிக்கும்படி எம் மாணவருக்குச் சொன்னோம். அக்குறிப்புணர்ந்த அவர் சேற்றில் என் பதை மாற்றிச் சாற்றில் என வாசித்தார். அதனால் அவ் வையம் அகலப்பெற்ற அம்மைச்சியார் களிகூர்ந்தார்,' என்று விரித்துச் சொல்லி, அப்பாவின் பொருளை எடுத் துரைத்து யாவரையும் உவப்பித்தனர். அன்று முதல் அம்மைச்சியும், கவி வீரராகவ முதலியாரும் துவர நட்பு டையராயினர்.

இங்ஙனம் வாழும் நாளில், காஞ்சிபுரத்து வரதராஜப் பெருமாள் ஆலயத்துப் பிராமணர் சிலர், அம்மைச்சியின் கல்விச் செருக்கை எங்ஙனமேனும் அடக்க வேண்டுமெ னத் தக்க சமயம் பார்த்துக்கொண்டிருந்தனர். திருக் கோயில் திருவிழாக் காலம் அண்மியது. அவர்களும் தம் கருத்தை முடித்துக்கொள்ள ஒரு சூழ்ச்சியை எண்ணித் தேர்விழாவன்று, தேரை அம்மைச்சி வீட்டில் முட்டு வித்து அவளிடஞ்சென்று, வீட்டை இடித்துத் தள்ளியே தேரைச் செலுத்த வேண்டுமென வற்புறுத்தினர். உடனே அம்மைச்சி கவிவாணரைத் தருவித்துத் தனக்கு நேர்ந் ததைக் கூறி வருந்தினள். அப்போது முதலியார், பிராம ணர்களை அழைத்து, 'ஐயன்மீர், ஒரு பேதைப் பெண் வாழும் வீட்டை இடித்தல் நேரிதன்று; வேறேதேனும் ஒரு விரகுகொண்டு தேரைக் கடாவுமின்,' என்று மெல்

லென மொழிந்தனர். அவ்வந்தணர் அவள்பால் கொண்ட பகைமை காரணமாக அத்தகைய கேடு சூழ்ந்தவராதலின், புலவர் சொல்லுக்கிணங்காது தாம் கொண்ட கருத்தை நிறைவேற்றுவான் விரைந்தனர். அவர் தீக்குணத்தை நோக்கிய கவிஞர் வெகுண்டு, வரதனை முன்னிலைப்படுத்தி,

'பார்ப்பார் குரங்காய்ப் படையெடுத்து வந்தீரோ
தேப்பெருமா ளேகச்சிச் செல்வரே !—கோப்பாகக்
கொம்மைச்சிங் காரலங்கைக் கோட்டையென்று வந்தீர்ஈது
அம்மைச்சி வாழும் அகம்.'

என்ற பாட்டைப் பாடினர். அது கேட்ட அவ்வேதியர் 'இவர் கையறம் பாடின் நாம் வாழ்வேமல்லேம்!' என அஞ்சி அகன்று, வேறோராற்றான் தேரைச் செலுத்திச் சென்றனர். அற்றைநாட்டொடங்கி அம்மைச்சிக்கு முதலியார் பாலிருந்த நட்புக் கனிந்து காதலாய் முடிந்தது. அவள் சிறந்த புலமையும் விரிந்த அறிவும் உண்மையன்பும் கவிராயர் நெஞ்சத்தைக் கவர்ந்தன. அவளும் புலவர் புறவழகைப் பொருட்படுத்தாது அகவழகைக் கண்டு ஆராக் காதலுடையளாய் அவரைத் தெய்வம்போல ஏற்றிப் போற்றிப் பணிவிடை புரிந்து வந்தாள்.

சில நாட்கள் சென்ற பின் கவி வீரராகவ முதலியார் பொற்களந்தையைச் சேர்ந்து ஆங்குப் பல்லாண்டு இனிது வாழ்ந்து அருந்தவப் பேறாக ஒரு பெண்மகவைப் பெற்றுக் களிப்புற்றிருந்தனர். அப்போது 'திருக்கழுக்குன்றமாலை' என்னும் ஒரு பத்திச்சுவை மிகுந்த நூலைப்பாடிச் சிவாநுபூதிமானாய் விளங்கினர். அந்நூலின் அருமையை, 'கந்தரந்தாதியைப் பாராதே; கழுக்குன்றத்து மாலையை

நினையாதே,' என்னும் அமுதவசனம் தெளித்துரைக்கும். அதன் செய்யுள் ஒன்றை இங்குத் தருவோம்:

'மாடேறு தாளும் மதியேறு சென்னியும் மாமறையோன்
ஓடேறு கையும் உடையார் தமக்கிடம் ஊருழவர்
சூடேறு சங்கஞ் சொரிமுத்தை முட்டையென் றேமகலந்
காடேறும் அன்னஞ் சிறகால் அணைக்குங் கழுக்குன்றமே'

சீட்டுக்கவி பாடுதலில் இவருக்கிருந்த ஆற்றலைப் புகழ்ந்து நிரஞ்சன நாதர் என்னும் புலவர்,

'சீட்டுக் கவியென்று சொல்வார் சிலரந்தத் தீட்டுக்கவி
காட்டுக் கெறித்த நிலவாகிப் போம்செங் கனகரத்னச்
சூட்டுக் கிரீட முடிவேந்தர் உற்பத்தி சூறைகொள்ளும்
நாட்டுக் கிலக்கியங் கவிவீர ராகவன் நற்கவியே.'

என்று ஒரு கவி இசைத்தனர்.

இவர் உலக நடையை ஒட்டிச் செய்த சில செய்யுட்களுமுள. அவற்றில் இங்கே சிலவற்றைத் தருவோம்:

'பொய்யருக்குப் பொய்யுரைத்தால் வெற்றியாம்
அவருக்குப் பொய்யா காத
மெய்யருக்குப் பொய்யுரைத்தால் தேய்பிறைபோல்
தவங்குறையும் மிடியுண்டாகும்
துய்யதாய் தந்தையர்க்குப் பொய்யுரைத்தால்
வறுமைபிணி தொலையா வென்றும்
உய்யஅருள் தேசிகர்க்குப் பொய்யுரைத்தால்
நரகமது வுண்மை தானே.'

'மாதர்க் கிதங்கவி வாணர்க்குச் சால வணக்கங்குரு
நாதற்கு நீதியோ டாசாரம் நண்பின் நயந்தவர்க்குக்
கோதற்ற வாசகம் பொய்க்குப்பொய்கோளுக்குக்கோள் அறிவி
லாதற் கிரட்டிப் பறிவுடை யோர்செய்யும் ஆண்மைகளே.'

### விநாயகர்மேல் பாடிய நிந்தா ஸ்துதி

'வீரஞ் சொரிகின்ற பிள்ளாய் உனக்குப்பெண் வேண்டுமென்றால்
ஆருங் கொடார்உங்கள் அப்பன் கபாலிஅம் மான்திருடன்
ஊருஞ்செங் காடுநின் றன்முகம் யானை உனக்கிளையோன்
பேருங்க டம்பன்உன் தாய்நீலி நிற்கும் பெருவயிறே.'

அந்தகக்கவி வீரராகவ முதலியார் பின்னர்ச் சிவபெருமானது சிந்துரச் சேவடியை இரண்டறக் கலந்து இனித்தனர். அவரது பிரிவைக் குறித்துக் கயத்தாற்று மன்னன்,

'முன்னாட்டுத் தவமுனியுஞ் சேடனும்வான் மீகனும்உன்
முன்னில் லாமல்
தென்னாட்டு மலையிடத்தும் பாரிடத்தும் புற்றிடத்துஞ்
சென்று சேர்ந்தார்;
இந்நாட்டுப் புலவருனக் கெதிரிலையே கவிவீர
ராக வாநீ
பொன்னாட்டுப் புலவருடன் வாதுசெய்யப் போயினையோ
புகலு வாயே.'

என்னுங் கையறு நிலை பாடி மனம் வருந்தினான். இயற்கையிலேயே குருடராய்ப் பிறந்தும் தமது முயற்சியின் வன்மையால் கண்ணுடைய புலவர் பலரினுஞ் சிறந்த புலமை வாய்ந்து, பாவலராகிக் காவலர் பல்லோரால் பரிசு பெற்றுத் திருவருளையும் பெற்றுத் தம் பெயர் என்றும் நின்று நிலவுமாறு பல அருந்தமிழ் நூல்களையும் இயற்றிச் சிவனடி நீழல் சேர்ந்த இப்பெரியார் சரித்திரம் யாவர்க்கும் பெரிதும் மனமகிழ்ச்சியைத் தருமென்பதற்குச் சிறிதும் ஐயுறவில்லை.

## 2. பொய்யாமொழிப் புலவர்

காப்பு

'மதிபாய் சடைமுடித்து மாசுணப்பைம் பூட்டுச்
சதிபாய் குறுந்தாட்டுத் தான—நதிபாய்
இருகவுட்டு முக்கட்டு நால்வாய்த்தேன் னுள்ளம்
உருகவிட்டு நின்ற ஒளி.'

ஏறத்தாழ எழுநூறு ஆண்டுகட்கு முன்னர்த் தொண்டை நாட்டிலே செங்காட்டங்கோட்டத் துறையூரின்கண் பொய்யாமொழிப் புலவர் பிறந்தார். இவர் வயிர புரம் என்னும் ஊரிலே தமிழாசிரியர் ஒருவர்பால் கல்வி பயின்று வந்தனர். ஆசிரியருக்கு ஒரு கொல்லை உண்டு. அதனை அவர் தம்மிடம் தமிழ் கேட்கும் மாணவரைக்கொண்டு ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு நாள் முறைவைத்துக் காத்துவருதல் வழக்கம். ஒரு நாள் பொய்யாமொழியார் முறை வந்தது. அன்று அவர் சென்று கொல்லைக் கணித்தாயுள்ள காளி கோட்டத்தின்கண் இருந்த ஒரு பழுமரத்தின்கீழ்ப் படுத்துத் தம்மை மறந்து துயின்றனர். அந்நேரம் புலவர், அவ்வூர் அரசன் காளிங்கராயன் குதிரை கொல்லையில் இறங்கிப் பயிரை மேய்வதாகக் கனக்கண்டு திடுக்கிட்டு விழித்து ஓடிச்சென்று கொல்லையைப் பார்க்கப் பயிரனைத்தும் குதிரையால் மேயப்பட்டிருந்ததைக் கண்டு, அஞ்சி நடுநடுங்கி, 'அந்தோ! குரவன் வெகுளுமே! என் செய்வேன்!' என்றரற்றி அழுது காளிகோட்டம் குறுகினர்.

குறுகித் தேவியின் திருமுன்னர் நின்று, 'எம்பெருமாட்டி, அடியேன் குரவன் தாளால் இட்ட பணியைத் தலையாற் செய்யவேண்டியவனாக இருந்தும், ஊழ்வினை வயத்தாலோ, பிள்ளைமையாலோ, மற்றெக்காரணத்தாலோ, வினையிற் சோர்ந்து, மெய்யயர்ந்து துயின்றொழிந்தேன்; கொல்லைப் பயிரை வல்லே குதிரை மேய்ந்திருக்கக் கண்டேன். ஆரியன் அறியின் என் கதி என்னாகும்?' என்று கூறி வேண்டினர். அச்சிறுவரது அருந்துயர் கண்ட அத்தேவியார் அருள் சுரந்து, செந்தாமரை போன்ற தமது திருமுகம் மலர்ந்து, செங்கனிவாய்த் தேனொழுகுமாறு வாய்பூத்துக் குறுகையரும்பி, சிறுவர் உச்சிமேல் தம் அருமைத் திருக்கரம் அமைத்து, 'மைந்த, கவலற்க; எல்லாம் இனிது முடியும்,' என்று மெல்லிய இனிய மொழி நவின்று மறைந்தனர். காளி தேவியார் மறைந்ததும் நிகழ்ந்தனவெல்லாம் கனவோ நனவோ என்றையுற்ற பொய்யாமொழிப் புலவர் புத்துயிர் பெற்றவர் போலப் பெருங்களி துள்ளி நிற்கும்போது வாயினின்று,

'வாய்த்த வயிரபுர மாகாளி யம்மையே!
ஆய்த்த அருகாம் அணிவயலிற்—காய்த்த
கதிரைமா ளத்தின்ற காளிங்கன் ஏறுங்
குதிரைமா ளக்கொண்டு போ.'

என்னும் வெண்பா உதயமாயிற்று. அச் செய்யுளைப் பாடிய துணையானே அப்பரிமா பொட்டென விழுந்து தொட்டென மாண்டது. அக்காலை ஆண்டுச் சென்றோர் இதனையுணர்ந்து தமிழ்க் கணக்காளரைக் கண்டு காவலன் பரிமா ஆவி நீத்தமையைக் கூறினர். ஆசிரியர் விரைந்து புனஞ்சென்று, குதிரை இறந்திருப்பதையுணர்ந்து, கை

பிசைந்து, 'அந்தோ! யாது புரிவேன்! காவலன் ஆணை என் செயுமோ!' என்று கவன்றுழி, பொய்யா மொழியார் தம் ஆசிரியர் படும் அல்லலை நோக்கி, முன்னர்த் தாம் செப்பிய வெண்பாவின் ஈற்றடியை மட்டும் 'குதிரை மீளக் கொண்டுவோ,' என மாற்றி மீண்டும் உரைத்தனர். அதனை அவர் உரைத்ததும் குதிரை உயிர்த்தெழுந்து ஆண்டிருந்த குழுவைக் கண்டு வெருண்டு, கால் வாங்கிப் பறந்தது. சூழ்ந்திருந்தார் யாவரும் சொல்லொணு வியப்பும் மகிழ்வும் உடையராய்ப் பொய்யா மொழியாரின் அருஞ்செயலை ஊர்முழுதும் பரப்பினர். அப்போது ஆசிரியர் தம் மாணவரைக் கட்டி மார்புறத் தழுவி,

"பொதியில் அகத்தியனைப் பொய்யா மொழியாய்ச்
சிதையிற் புலவர் சிறப்பாய்த்—துதிபெருகு
செங்காட்டுக் கோட்டத் துறையூர் எனுந்தலத்துத்
தங்காட்டங் கொண்டிருப்பாய் தான்,"

என முத்தமிழ்ப் புலமை அகத்தியனாரே பொய்யா மொழியாய்ப் போந்தாரென்னுங் கருத்துப் பொருந்தப் பாடி வாழ்த்தினர். அன்றுதொட்டு அவருக்குப் பொய்யா மொழிப் புலவரென்னும் பெயரே பெயராய் வழங்கலாயிற்று. அவர் பிள்ளைப் பெயரும் மறைந்தொழிந்தது. பொய்யாமொழியார் அன்றுமுதல், கவிபாடுதலையே தமது தொழிலாகக்கொண்டு வாழ்ந்துவந்தார். அன்றியும் அவர் செந்தமிழ் நூல்கள் பலவற்றையும் மிக விரைவில் கற்றுப் பொருள்களை அறிந்துகொண்டனர். காளியம்மையின் கருணையோடு புலமையும் நிரம்பி நின்ற பாவலர் பெருமையும் இன்னதெனக் கூறல் வேண்டுமோ! அவருக்குப் புகழும் மதிப்பும் எங்கும் உண்டாயின.

கோழியையும் பாடிக் குஞ்சையும் பாடுவேனே?

இவர் சிவபெருமான் திருவடித் தாமரைகளில் என்றும் குன்றாத பேரன்புடையராய், அவர்மீது செந்தமிழ்ச் சுவையொழுகும் அருட்பாடல்களைப் பாடி உருகுவார். ஒரு நாள் செந்தமிழ் அமுதம் திருச்செவிமாந்த வாயூறி நிற்கும் அறுமுகப்பெருமான் அவர்பால் ஒரு விளையாட்டைக் கருதி அவர் கட்புலன் கதுவ அருட்டிருமேனி தாங்கித் தோன்றி, 'பொய்யில் புலவோய், எம்மீது ஓர் அருஞ்செய்யுள் இசைக்கற்பாலையோ?' என்றனன். அதற்குப் புலவர் துண்ணெனத் தாம் சிவபெருமான் ஒருவரையன்றி வேறொருவரையும் பாடலாகாதென்னும் துணிபுள்ளங் கொண்ட கற்புடைச் செல்வராதலின், 'கோழியையும் பாடிக் குஞ்சையும் பாடுவனே?' என்றார். அது கேட்டதும், நாணினன் போலக் கந்த வேள் கதுமென மறைந்தனன்.

சிறிது காலஞ் சென்றதும் புலவர் பாண்டி மண்டலத்திலே தஞ்சாக்கூரிலே வாழ்ந்திருந்த தஞ்சை வாணன் என்னும் ஒரு வேளாளப் பிரபுவின்மீது கோவை என்னும் தமிழ் வளம் கெழுமிய பிரபந்தத்தைப் பாடி எடுத்துக் கொண்டு அவனைக் காணுமாறு சென்றனர். அப்போது அவன் பாண்டியன் அமைச்சனும் படைத்தலைவனுமானதால், தன் மனைவியை வேந்தற்குற்றுழிப் பிரிந்திருந்தான். புலவர் வருகையைக் கண்ட அவன் அருமைத் தலைவி, முகமும் அகமும் மலர்ந்து, அவரை வரவேற்று, அவர் கருத்தை உணர்ந்து, தாம் பாடிய நூலை அரங்கேற்றக் கேட்டு நானூறு பாக்களுக்கும் நானூறு பொற்றேங்காய்களைப் பரிசாக உருட்டினள். அம்மங்கையர்க்

கரசியின் கல்வி விருப்பையும், நற்குணப் பெருக்கையும் மிகுதியும் வாழ்த்திப் புலவர் சென்றனர்.

இவற்றைப் பெற்றுக்கொண்டு சென்ற புலவர் பெருமான் வழிச் செல்லுகையில் பாலைவனம் ஒன்று குறுக்கிட்டது. அங்கே முருகவேள் ஒரு வேட்டுவச் சிறுன் போலத் திருவுருக்கொண்டு நகை வேலுடன் புலவர் எதிர்த்தோன்றினன். புலவர் அவனைக் கண்டு அஞ்சி ஓரடி எடுத்து வைக்க, வேட்டுவக்குமரன் அவரை வழி மறுத்து, 'நில், நில்,' என்று கடுத்துரைத்தனன். அப்போது புலவர், 'ஐய, நான் ஒரு புலவன்,' என்று கூறினுர். உடனே வேலன், 'நீ புலவனுனல் பாட வல்லையோ?' என்று வினுவினன். புலவர், 'பாடுவேன்,' என்றனர். முருக வேள், 'அங்ஙன்மாயின், இப்பாலை வனத்தைச் சுட்டி என்மேல் நற்றுயிரங்கலாக ஒரு செய்யுள் கூறுக,' என்றனன்.

அது கேட்ட பாவலர், வேட்டுவன் கல்வி நலம் அறிந்தவன் போலும்! நாம் இனி அஞ்ச வேண்டுவதின்று,' என எண்ணி, அவ்வேடனை நோக்கி 'ஐயா, நும் பெயர் யாது?' என்றனர். வேள், 'என் பெயர் முட்டை' என்றுன். உடனே செந்நாப் புலவர்,

'பொன்போலுங் கள்ளிப் பொறிபறக்குங் கானலிலே
என்பேதை செல்லற் கியைந்தனளே—மின்போலும்
மானவேன் முட்டைக்கு மாறுய தெவ்வர்போம்
கானவேன் முட்டைக்குங் காடு.'

என்று பாடினர். இப்பாட்டைக் கேட்டதும் வேட்டுவக் குமரன், 'புலவ, நின்மதியிருந்தவாறென்னே? கள்ளிப் பொறிபறக்குங் காட்டிலே வேலமரத்தின் முள் வெந்தெரி

யாமற் கிடந்தது மிகவும் நேரிது,' என்று எள்ளி நகையாடினன். பின் முருகவேள், 'நான் பாடுவேன் கேள்,' என்றுரைத்து,

'விழுந்த துளி அந்தரத்தே வேமென்றும் வீழின்
எழுந்து சுடர்சுடுமென் றேங்கிச்—செழுங்கொண்டல்
பொய்யாத கானகத்தே பெய்வளையுங் போயினுள்
பொய்யா மொழிப்பகைஞர் போல்."

என்னும் பாவைப்பாடி முடித்து, 'குஞ்சைப் பாடாத நீ முட்டையைப் பாடியது வியப்பே,' என்று முன்னிகழ்ச்சியைக் குறிப்பித்துச் சிறு நகை செய்து, திருவுருக் கரந்தனன்.

பின்பு பொய்யாமொழிப் புலவர், முருகவேள் அளப்பருங்கருணையை நினைந்து நினைந்து மனருமுருகி, 'எம்பெருமான் திருக்கருணை புழுத்தலைச் சிறியேற்கும் வாய்த்ததோ!' என்று பலவாறு பரவி வணங்கித் தம் வழிச் சென்றனர். சில நாட்கள் கழிந்த பின் தஞ்சை வாணன் தன் நகருக்குத் திரும்பி வந்து, மனைவியினுல் புலவர் கோவை பாடி அரங்கேற்றியதைக் கேட்டு மகிழ்ந்தான். மனைவி, தான் அவருக்கு அளித்த பரிசிலைச் செப்ப, வாணன் கேட்டு, 'பெண்மணி, இங்ஙனம் செய்தல் பொருந்துமோ? அவர் வரிசையறியாது போயினையே!' என்று கூறி, உடனே ஆட்போக்கிப் புலவரைப் பரிசிலுடன் வருமாறு புரிந்தனன். பொய்யாமொழிப் புலவரும் ஐயங்கொண்டு தாம் பெற்ற பரிசிலுடன் வாணனைக் கண்டார். அப்பிரபு சிகாமணி புலவாணரைக் கனிந்த அன்போடு எதிர் சென்று, முகமன் கூறிக் கோவையை மற்றொருகால் அவரால் அரங்கேற்றுவித்துக் கேட்டு உள்ளங் குளிர்ந்து, நானூறு பொற்றேங்காய்களிலும் ஒவ்

வொரு காயின் முக்கண்ணிலும் மூன்று மணி யிழைத்துப் புலவரிடம் உருட்டினன். புலவர் இன்ப வாரியில் திளைத் தனர். வாணன் மனைவியும் கணவர் கருத்தை நன் குணர்ந்தனள்.

பின்பு பாவாணர் பாண்டி மண்டலஞ் சேரவிழைந்து வழிக்கொண்டு திரிசிர புரம் குறுகினர். அங்கே சிவபெரு மான், செந்தமிழ்ப் புலவர் அந்தமில் வேடமே கொண்டு சுந்தரப் புலவர் முன்னர்த் தோன்றி,

"கோட்டாற் கொழும்பிரசம் குத்தி யதன்நடுவே
பாட்டாற் பனைக்கைப் புகமெடுத்துக்—காட்டானை
தேனீ ரருந்துஞ் சிராமலையே செஞ்சடைமேல்
வானீர் கரந்தான் மலை."

என்னும் சீரிய கூரிய வெண்பாட்டொன்றால் தாம் மேவி உறையுமிடம் சிராமலை எனக் குறிப்பித்து மறைந்தனர். பொய்யாமொழியார் தம் எதிரே தொன்றிக் காட்சி தந்த வன் கருணைக் கடலாகிய கண்ணுதற்பெருமானே என உணர்ந்து, அப்பெருமான் என்றும் அடியார்க்கு எளி வரும் பெருமையையும் தேனூறு தமிழ்க்கு வாயூறி நிற் றலையும் பல்காற் சிந்தித்து,

'அங்கம் புலியதள் ஆடையைச் சாத்தி அரவமுடன்
பங்கம் புலிவைத்த பண்பர்க் கிடம்பனை வாள்எயிற்று
வெங்கட் புலியைவிட் டானையைத் தேடி விதம்விதமாய்ச்
சிங்க மிருந்து தனித்தனி நோக்குஞ் சிராமலையே.'

என்னும் ஒரு கட்டளைக் கலித்துறைச் செய்யுள் பாடிப் பரவிப் படர்ந்தனர்.

## பழைய குருடி கதவைத் திறடி

பின்பொருகால் புலவர் பெருமான் காளையார் கோயில் என வழங்கும் திருக்கானப்பேர் என்னுஞ் சிவ

தலத்துக்குச் சென்று, அங்கே திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் அடிகளாரை வழிபட்டு மீளுங்கால் பெருமழை பெய்யக் கூத்தாள் என்னுந் தேவ மாது ஒருத்தி அகத்தை அடைந்தனர். ஆண்டுச் சிறிது நேரம் தங்கியிருந்தபோது, அவளும் அவள் தமக்கையும் தாயும் பாட்டியும் ஆகிய நால்வருங் குருடராய்க் கையால் தடவித் தடவிச் செல்வதை நோக்கி, மனங்குழைந்து, அந்நால்வருக்கும் கண் வருதல் வேண்டுமெனத் திருவுளங் கொண்டு,

'கூத்தாள் முகத்திரண்டு கூர்வேல்கள் கூத்தாள்தன்
மூத்தாள் முகத்தில் முழுநீலம்—மூத்தாள்தன்
ஆத்தாள் முகத்தில் அரவிந்தம் ஆத்தாள்தன்
ஆத்தாள் முகத்திலிரண் டம்பு.'

என்றோர் அரும்பாட்டு இசைப்ப, அனைவரும் அழகு மிக்க ஒளி வீசும் விழிகளைப் பெற்றுக் கங்கு கரையற்ற இன்பமுடையவராய்ப் புலவர் பெருமானைப் போற்றி, வழிபாடாற்றி நின்றனர். இச்செய்தி யாண்டும் பரம்ப, அவ்வூரினராகிய பொருட்பெண்டிர் எழுபதின்மரும் ஒருங்கு குழுமிப் புண்ணியப் புலவரை நண்ணிப் பொன்னொடு தூசுந் துகிலும் பொலிவன தந்து, அவர் எதிரே நின்று பணிவுடன், 'பொய்யா நாவின் புலவரேறே, அடியேங்கள் உய்யுமாறு ஒரு நற்றமிழ்ச் செய்யுள் எம்மைச் சுட்டிப் பாடுதல் வேண்டும்,' எனக் கூசி மொழிந்து, பூங்கொடிகள் போல ஒசிந்து நின்றனர். அப்பாவையர் அடக்கத்தையும், தமிழ் மொழிக்கண் வைத்துள்ள அன்பின் பெருக்கையுங் கண்டு கழிமகிழ் பூத்து, இசைப்புலவர்,

'வாச மலர்மடந்தை போல்வார்வண் கானப்பேர்
ஈசன்தன் மக்கள் எழுபதின்மர்—தேசத்து

இரவலர்மேல் நீட்டுவர்கை ஈண்டுலகங் காக்கும்
புரவலர்மேல் நீட்டுவர்பொற் கால்.'

என்று சமத்காரந் தோன்ற அவர் கொடையையும் எழிலின் மிகுதியையும் வியந்து பாடினர். பின் அங்குச் சின்னாள் வைகி, அத்தலத்தை விட்டு நீங்கிப் பல அரிய திருப்பதிகட்குச் சென்று வணங்கிக் கானப்பேருக்குச் சிறிது காலம் சென்ற பின் மீண்டனர். அங்குப் போந்ததும் தாம் முன்னர்க் கண் பெறப்பாடிய கணிகையர் செவ்வியை உணர விரும்பி அவர் இருக்கையைத் தேடிச் சென்றனர். அவர்களோ, கண் பெற்ற காரணத்தான் அழகு மிகப் பெருஞ் செல்வர் கண்களைக் கவர்ந்து, நன்னிதி பலவும் ஈட்டிச் செல்வத்திற் சிறந்திருந்தனர். அஃதுணர்ந்த உத்தமக் கவிஞர் அவரது பெருவாழ்விற்கு உவந்து, அவரது மாளிகையிற் சென்று கதவைத் தட்டினர். அவர்கள் இவரை இன்னாரென அறிந்தும்,

"முந்திரிமேற் காணி மிகுவதேல் கீழ்தன்னை
இந்திரனா வெண்ணி விடும்."

என்னுந் திருவாக்கின்படி தம்மைத் தாமறியாமலும், கண் கொடுத்த தெய்வம் என அவரை மதியாமலும், கதவைத் திறவாது வாளாவிருந்தனர். அவர் தம் இறுமாப்பையும் நன்றியறியாக் கயமையையும் கண்டு, செந்தமிழ் வாணர் சினமீக்கூர்ந்து, 'பழைய குருடி கதவைத் திறடி,' என்று கூறினர். கூறியவுடன் அந்நால்வருள் மிக்க இளையாளாகிய ஒருத்தியின் கண்கள் இரண்டும் பொட்டென அவிந்தன.

'வில்லேர் உழவர் பகைகொளினுங் கொள்ளற்க
சொல்லேர் உழவர் பகை."

என்னும் புலவர் வாக்குப் பொய்ப்படுமோ? அப்போது

அவனும் மற்றையோரும் புலவாணர் செந்தாமரைச் சேவடிகளில் அடியற்ற பனையெனவிழுந்து கைகட்டி வாய்பொத்தி, 'எங்குல தெய்வமே, அடிச்சிமார்கள் செய்த பிழையைப் பொறுத்தருளல் வேண்டும். எமது அறியாமையால் யாம் பிழை செய்தலும் இயல்பே; அவற்றைப் பொறுத்தருளலுந் தேவரீருக்கு இயல்பே,' என்று பலவாறு பன்னிப் பன்னி ஏத்தி நடுநடுங்கி அவர் அருளை எதிர்பார்த்த வண்ணம் நின்றனர். அருள் மிகுந்த நெஞ்சினராகிய அருந்தமிழ்ப் புலவர், அவர் செருக்கொழிந்து பிணம்போற் கிடத்தலைக் கண்டு இரங்கி, அகந்தையால் அவிந்த கண் மீண்டும் பெறும்படி அருள் முகிழ்த்தனர்.

## குலமகட் கழகுதன் கொழுநனைப் பேணுதல்.

நம் புலவர் பெருமகனார் சிறிது காலங்கழிந்த பின்னர் மதுரை மாநகரை அடைந்து, வணங்காமுடிப் பாண்டியனைக் காண அவனது அரண்மனைக்கேகினர். அவன் அக்காலை ஆலயதரிசனஞ் செய்யும்பொருட்டுத் திருக்கோயிலுக்குச் சென்றிருத்தலையுணர்ந்து, ஆங்குச் சென்றனர். அரசன் அப்போது தீவண்ணன் திருமுன்னர்த் தலை வணங்கி, உள்ளம் அனலிடைப்பட்ட மெழுகென உருகி நிற்றலைக் கண்டு,

'குழற்கால் அரவிந்தங் கூம்பக் குமுதம் பொதியவிழ்ப்ப
நிழற்கால் மதியமன் றோநின் திருக்குலம் நீயவன்தன்
அழற்கால் ஒளிர்சடை மீதே யிருந்தும் அவ்வந்திவண்ணன்
கழற்கால் வணங்குதி யோவணங் காமுடிக் கைதவனே!'

எனப் பாதி வசையும் பாதி நகையுமாகப் பாடினார். அப் பாடலைக் கேட்டும் வணங்காமுடியன் வணங்கா வாயினனாய்ப் புலவரை நோக்கி, 'நீர் உண்மைப் புலவர் ஆயின்,

ஈண்டுச் சிலை வடிவாய் விளங்கும் பண்டைத் தண்டமிழ்ச் சங்கப் புலவரைச் சிரக்கம்பம் செய்விப்பீராக,' என்று எட்டுணையும் மதிப்பின்றி இயம்பினன்.

அது கேட்ட செம்புலச் செல்வர் அங்ஙனமே செய்யத் துணிந்து, அங்குத் திருமேனி கொண்டிருக்கும் சங்கப் புலவரை முன்னிலைப்படுத்தி, நெஞ்சங் குழைந்து,

'உங்களிலே யான்ஒருவன் ஒவ்வுவனோ ஒவ்வேனோ
திங்கட் குலன்அறியச் செப்புங்கள்—சங்கத்தீர்!
பாடுகின்ற முத்தமிழ்க்கென் பன்னூலும் ஏற்குமோ
ஏடவிழ்தார் ஏழெழுவீர் இன்று.'

என்றோர் அரிய வெண்பாவை இசைக்க, அச்சிலா ரூபங்கள் சிரக்கம்பம் செய்தன. அது கண்டு பாண்டியன் வணங்கு முடியனாகிப் புலவரைப் 'பொற்றாமரைத் தடத்துள் அமிழ்ந்துள்ள சங்கப் பலகை மிதக்கப் பாடுக,' எனப் புலவர் அதற்குமிசைந்து,

'பூவேந்தர் முன்போற் புரப்பார் இலையன்றிப்
பாவேந்தர் உண்டென்னும் பான்மைதான்—மாவேந்தன்
மாறன் அறிய மதுரா புரித்தமிழோர்
வீறணையே சற்றே மித.'

என்னுந் தனிப்பாசுரம் கூறக் கன்மாப்பலகை கவினுற மிதந்தது. அத்திறங் கண்டும் பாண்டியன் இணங்கா மனத்தினனாய்ப் புலவரைச் சிறப்பியாது கல்லினும் வல்லெனும் நெஞ்சினனாய் வாளாபிருந்தனன். பாவலர் பெருமான் வெகுளி பொங்க, அவனை விட்டகன்று சென்றனர்.

இந்நிகழ்ச்சிகள் அனைத்தையும் மறைவிலிருந்து பார்த்துக்கொண்டிருந்த பாண்டிமாதேவியார் மன்னவனது அறியாமைக்கு மிகவும் வருந்தி, மாறு வேடந் தரித்துப்

பொய்யாமொழிப் புலவர் சிவிகையைத் தாங்கிச் சென்றனர். அப்பொழுது புலவர், சிவிகை காவுவோரால் புதிய வரது வரவை உணர்ந்து, அவரைத் தம்மெதிரே தருவித்து, வினவி, அரசன் கோப்பெருந்தேவியாராதல் தெரிந்து, அப்பெருமாட்டியாரின் கற்புடைமையையும், விழுமிய குணத்தையும் பெரிதும் பாராட்டி,

'உமையாளும் நீயும் ஒருங்கொப்பே ஒப்பே
உமையாளுக் கங்குண்டோர் ஊனம்—உமையாள்தன்
பாகந்தோய்ந் தாண்டான் பலிக்குழன்றான் பாண்டியன்நின்
ஆகந்தோய்ந் தாண்டான் அரசு.'

என்று பாடினார். அச்செல்வியரும் அவர் வெகுளித் தீயை இனிய சொற்களாகிய தெண்ணீரால் தணிவித்துத் தாம் கொணர்ந்த சில பரிசில்களையும் தந்து, விடை பெற்றுச் சென்றனர்.

ஒருகால் அரசன் பொய்யாமொழியாரை, 'நீர் நல்ல புலவர்!' என்றபோது,

'அறம்உரைத் தானும் புலவன்முப் பாலின்
திறம்உரைத் தானும் புலவன்—குறுமுனி
தானும் புலவன் தரணி பொறுக்குமோ
யானும் புலவன் எனில்.'

என்றோர் அருமைச் செய்யுளால் தமது சிறுமையையும் திருவள்ளுவர், அகத்தியனார் முதலியோர் பெருமையையும் இனிது விளக்கினார்.

புரைய மன்ற புரையோர் கேண்மை

பின்னர்க் கவிஞர் சோழவள நாட்டை அடைந்து, அவ்வேந்தன் அமைச்சராகிய சீநக்கர் என்பவரைக்

கண்டு, தம் புலமை விளங்கக் கவிபாடி அவர் ஆதரவு பெற் றிருந்தனர். அவர் ஒருகால் தமக்களித்த கட்டுச் சோற் றைப் பெற்று, அவர் அன்புடைமைக்கு மகிழ்ந்து,

'அளிகொ ளுந்தொடை யான்அர சைக்குமன்
ஒளிகொள் சீநக்கன் இன்றுவந் திட்டசீர்ப்
புளியஞ் சோறுமென் புந்தியிற் செந்தமிழ்
தெளியும் போதெலாம் தித்தியா நிற்குமே.'

எனப் பாடினர். பின்பு சீநக்கருந் தாமும் உடலும் உயிரும் போலக் கெழுதகைமையுடையவராய் இனிது வாழ்ந் தனர். சீநக்கரை விட்டுப் பிரியப் புலவருக்கும், புலவரை விட்டுப் பிரியச் சீநக்கருக்கும் இயலாது போயிற்று. இவ்வாறிருக்கும் நாளில் ஒருநாள், கங்குற் பொழுதில் புல வரும், சீநக்க முதலியாரும் பள்ளியறையின்கண் நெடு நேரம் அரச கருமங்குறித்து உரையாடியிருக்குங்கால், பாவாணர் அயர்வால் சிறிது கண்ணுறக்கங் கொள்ள, முதலியார் யாதோ கரும வயத்தராய் வெளிச்சென்றனர். புலவர் பெருமானே தம்மை மறந்து இன்துயில் கொள்வா ராயினர்.

அதுபோழ்து முதலியாரின் மனைவியார் தம் பள்ளி அறையிற் சென்று, மஞ்சத்தில் துயில் புரிவோர் தமது கணவனாரே என எண்ணிக் களங்கமின்றி அருகே கிடந் துறங்குவாராயினர். சிறிதுநேரம் சென்றதும் சீநக்க முதலி யார் கருமம் முடித்துப் பள்ளியறைபுக்கு நோக்க, தமது அமளியின்மேல் புலவரும் மனைவியாரும் ஒருங்கு உறங்கு தலைக் கண்டு தினைத்துணையும் ஐயமின்றித் தேவியாரைச் சற்றே ஒதுக்கிவிட்டுத் தாமும் அம்மஞ்சத்திலேயே ஒரு

புறம் படுத்துத் துயில் புரிந்தனர். வைகறை யாமம் குறு கியதும், தேவியார் வழக்கம்போலத் துயிலுணர்ந்து பார்க் கத் தமது மருங்கில் புலவர் படுத்திருத்தலைக் கண்டு துணுக்குற்று, அம்பு பாய்ந்த மயிலேபோலப் பாயலினின் றுந் துள்ளிக் குதித்து வீழ்ந்தனர். அவருடைய அணி கலங்களின் ஆரவாரங் கேட்டுத் திடுக்கிட்டெழுந்த புலவர், தாம் தேவியார் பக்கலில் கிடந்து துயின்றதை நோக்கிக் கட்டிலை விட்டு இறங்கத் தொடங்குகையில், சீநக்கராயர் விழித்துக்கொண்டு புலவருடைய கைகளைப் பற்றிச் 'செல் லக்கிட,' என்றுரைத்து, அவரை மீண்டும் படுக்கும்படி கூறியிரந்தனர். முதலியார், தேவியாரை நோக்கி, 'கண் மணி, உன் தந்தையார் பக்கலில் படுத்திருந்ததால் உனக்கு யாது குறை?' என்று தம் மனக்கருத்தை வெளியிட்டுச் செல்லுமாறு விடுத்தனர்.

அற்றைக் கணமே புலவருக்கும் சீநக்கருக்கும் மேன் மேலும் முறுகி வளர்ந்துவந்த நட்பு முற்றி நின்றது. புல வர் சீநக்கர் பெருந்தகைமையை உள்ளுந்தோறும் உருகு வர். அவர் முதலியாரின் அமிழ்தம் ஒத்த மனைவியாரது கற்புடைமைக்குத் தமது அறியாமையாலும் அயர்வாலும் ஏதேனும் பழுதுவருமோ என்றெண்ணியெண்ணி ஏங்கு வார். இவ்வாறு வருந்தும் பாவலருக்கு உகிர்ச்சுற்றின்மேல் உலக்கை விழுந்தாற்போல ஊரார் பழியும் ஏற்பட்டது. உலகம் என்றும் உண்மையுணர்வது அரிதன்றோ? அவர் அக்கம்பக்கத்தில் தம்மீது பழி சுமத்திப் பேசுவோர் உரை யைக் கேட்டு, இன்னது செய்வதெனத் தோன்றாது திகைத்து, மனம் புழுங்கினர்; உண்மையறியாத உலகத் தின் மீச்செலவை நிந்திப்பார்; 'அந்தோ! அந்தோ! இத் தீவினைக்கு யாது புரிவேன்!' என்று அரற்றிப் புலம்புவர்.

'இதனை வெளியிட்டு உண்மை நிலையிடலாமெனினும் நன்றெனத் தோன்றவில்லையே!' என நினைப்பர்; 'முதலியார் இப்பழிச்சொல்லைப் பொருட்படுத்தார் என்பது திண்ணமேயெனினும், அவர்தம் மறுவற்ற பெயரை மடவோர் பன்முறை தம் தீய வாயாற் கூறி மாசிபடுத்துகின்றனரே!' என்றெண்ணி மாழ்குவர்; 'கற்பரசியாராகிய தேவியார் தூய குணத்தைப் பொல்லாமை கூறும் புல்லர் கறைப்படுத்துகின்றனரே!' எனக் கவல்வர். இங்ஙனம் வருந்தும் புலவர் ஒரு நாள் தமது மனத்தூய்மையையும், தேவியார் வாய்மையையும் புலப்படுத்தி,

'தேரையார் தெங்கிளநீர் உண்ணார் பழிசுமப்பர்
நாரியார் தாமறிவர் நாமவரை நத்தாமை
கோரைவாய் பொன்சொரியுங் கொற்றவன்றன் கண்டி
ஊரைவாய் மூட வுரையறிந்தோ மில்லையே!'

என்னுங் கவியைப் பாடித் தமது ஆற்றுமையையும், செயலின்மையையும் வெளியிட்டுத் தேறியிருந்தனர். காலம் செல்லச் செல்லப் புலவர்மீது ஆராயாது பழி சொல்லிய புல்லரும் சொல்லுதல் தவிர்ந்தனர். உலகமும் உண்மையை அறிந்தது. காலம் செய்யும் வேலையை யாவரே செய்ய வல்லார்! ஆறு மன நோயை ஆற்ற வல்ல அரிய மருந்து அதுவே. தீரா வினையைத் தீர்ப்பதும் அதுவே. அதுவே பகையை மாற்றும்; நகையை ஊட்டும்; மெய்ம்மையை நிறுத்தும்; பொய்ம்மையைச் சிதைக்கும்; புரவலனை இரவலனுக்கும்; இரவலனைப் புரவலனுக்கும்; அன்பில்லா நெஞ்சினும் அன்பு முளையைத் தோற்றுவிக்கும்; அருள் பழுத்த உள்ளத்தில் ஆனந்த நுகர்ச்சியைத் தரும்; துன்பத்தைப் போக்கும்; இன்பத்தை ஆக்கும். உயிரினுஞ்

சிறந்த அன்னையையும் மனைவி மக்களையும் இழந்து வருந்தும் மக்களுக்குக் காலம் என்னும் கடவுள் அருள்புரியாவிடின், அவர் உயிர் வாழ்தலும் உண்டோ? கொடும்பிணியாலும் நெடுவறுமையாலும் பெரும்பழியாலும் அல்லலுழப்பார்க்கு அவர்தம் தமர்போலத் துணை புரிவது காலமே அன்றோ? ஆதலின், புலவரும் மனநோய் நீங்கி மகிழ்ச்சியோங்கிச் சீநக்கருக்குத் தமிழ்ச்சுவையை அடிக்கடி புகட்டிக்கொண்டு நன்றுறைவாராயினர். இவ்வாறு ஆண்டுகள் பல சென்றன.

மக்கள் வாழ்க்கையோ, நிலையற்றது. இன்றிருப்பார் நாளையிருப்பர் என்று துணிந்துரைக்க இயலாது.

> 'நெருநல் உளன்ஒருவன் இன்றில்லை என்னும்
> பெருமை உடைத்திவ் வுலகு.'

என்றார் தெய்வப் புலவரும். சீநக்க முதலியாரும் சின்னாள் சிறிது மெய்ச்செவ்வி கெட்டிருந்து, ஒரு நாள் இம்மண்ணுலக வாழ்வை நீத்து விண்ணுலக வாழ்வை எய்தினர். அப்பொழுது அவர் இல்லக் கிழத்தியாரும் உடன் கட்டையேறத் துணிந்தார். இவ்விருவரையும் ஈமத்தில் சந்தன விறகை அடுக்கி அதன்மேற்கிடத்தித் தீக்கொளுவினர். சுற்றத்தார் சோழ மன்னரும், அவன் அமைச்சரும், தானபதிகளும், குறுநில மன்னரும், பட்டவர்த்தனரும், போர் வீரரும் சூழ்ந்து நின்று, அமைச்சர் பெருமானாகிய சீநக்கராயர் பிரிவாற்றாமையைக் குறித்துப் பேசி நின்றனர். அரையனும் முதலியார் அருங்குணமாட்சியை நினைந்து கண்ணீர் சொரிந்தனன்.

அப்போது ஒரு குரோசத்தில் ஒருவர் ஓடி வருதலை அனைவரும் நோக்கினர். அவர் தம் வாடிய பொடியாடிய

மேனியையும், ஊற்றுநீர்க் கேணிபோல ஒழுகு கண்ணீரையும், உரையிழந்து நாத்தழுத்து நிற்கும் நீர்மையையும் சோழன் கண்டு ஒன்றுந் தோன்றாது திகைப்பூடு மிதித்தவன் போல நின்றான். அங்ஙனம் ஓடிப்போந்தார் பொய்யாமொழிப் புலவரே. அவர் வேற்றாருக்குச் சென்றிருக்கையில் சிங்கராயர் இறந்துவிட்டனர். அச்செய்தியைப் புலவருக்குத் தெரிவிப்பினும் அவர் வருதற்கியலாதெனநினைத்துச் சோழன் பிணத்தைச் சுடலை சேர்ப்பித்தனன். புலவரோ, எங்ஙனமோ செய்தி எட்ட, ஓட்டமாகவே வழியைக் கடந்து இத்தருணத்தில் வந்து சேர்ந்தனர். அவருடைய அளவு கடந்த துன்பத்தைக் கண்டவர் அனைவரும் பொறுக்கலாற்றாது புலம்பினர். கன்னெஞ்சினரும் கரைந்து கண்ணீர் உகுத்தனர். சிலர், 'புலவர் இங்ஙனம் வருந்துவாரென ஒருவரும் எண்ணவில்லை!' என்று கூறி வருந்தினர். சோழனும் சிறிது உரங்கொண்டு, புலவாணரைக் குறுகி, 'தெளிதமிழ்க்கோர் வரம்பு செய்ய வந்த செழும்புலவரே, எம்போன்றார் வருந்தின் ஆற்றவேண்டிய தாமும் இவ்வாறு புலம்புதல் தகுமோ? கற்று வல்ல தமக்கு யான் கூறுவது யாதுளது? மனந்தேறுவீராக,' என்று கூறினன். பொய்யாமொழிப் புலவர் சோழர் பெருமானைப் பார்த்து,

'வாழி சோழ,என் வாய்மொழி கேண்மோ :
ஊழி நிலவுளறி மாளிகை யின்வயின்
கட்டிளங் கணவன் கவின்பெறு சேக்கை
என்றுஅறி மனைவி நெடிது துயில்கொளச்
செல்லக் கிடமின் எனக்கிடந் தருகெனச்
சொல்லிய நண்பன் தனிச்செல் பவனே!
நானும் ஏகுவன் நற்றுணை யவற்கே.'

என முன்னர் நிகழ்ந்த செய்தியை நன்கு எடுத்துரைத்துத் தாமும் உயிர்விடத் துணிந்திருத்தலை உணர்த்திச் சிதை மருங்கு சென்றனர். அது கண்ட சோழன் புலவரை நோக்கி, 'ஐயன்மீர், நீர் இன்னுஞ் சின்னாள் இந்நிலவுலகில் இருப்பின் எம்மனோர் உய்வாரன்றே? அன்றியும், நம் சீநக்கராயர் எம்மைப் புகுத்திய துன்பக் கடலினின்றுங் கரையேறு தற்குத் தம்போன்ற கல்விச் செல்வராகிய தெப்பமின் றேல் யாம் யாது புரிதும்? ஆதலின், அவ்வெண்ணத்தை விட்டொழிமின்,' எனச் சாலவும் வருந்திக் கேட்டுக் கொண்டனன். பொய்யாமொழிப் புலவரோ, அதற்கிசை யாமல் அனைவருக்கும் வாழ்த்துக் கூறி, விடை பெற்றுச் சிதையை நோக்கி,

> ' அன்றுநீ செல்லக் கிடவென்றாய் ஆயிழையோடு
> இன்றுநீ வானுலகம் ஏறினாய்—மன்றல்கமழ்
> மானொக்கும் வேல்விழியார் மாறனே கண்டியூர்ச்
> சீநக்கா செல்லக் கிட.'

என்றொரு செய்யுளைப் பாடச் சிதை விரிந்து புலவருக்கு இடந்தந்தது. உடனே அவர் அதிலேறி எல்லாரும் தம் விழிகளில் நீரைச் சொரியப் பொன்னுலகு புகுந்தனர். ஈதன்றோ உண்மை நட்பு! கோப்பெருஞ்சோழன் இறந்த போது பிசிராந்தையார் என்னும் புலவர் உடனுயிர் நீங்கிய தும், வேள் பாரி இறந்ததனால் கபிலர் உயிர் நீத்ததும் போலப் பொய்யாமொழிப் புலவரும் தமதுயிரைச் சீநக்க ராய முதலியாரோடு நீக்கினர்.

> " அன்பின் வழிய துயிர்நிலை அஃதிலார்க்
> என்புதோல் போர்த்த உடம்பு."

# 3. இரட்டைப் புலவர்

"கற்றோர் அறிந்துரைத்த கண்ணகன்ற நூற்பொருளைப்
பெற்றாரே பெற்றார் பெரும்பேறு—மற்றோர்
ஒள்ளறிவும் இன்சுவையும் ஒப்புரவும் கண்டக்கால்
தெள்ளமுதுங் கைக்குந் தெளி."

இந்நிலவுலகு கற்றறிந்தாராலேயே எக்காலமும் நடைபெறுவது. அவரே உலகுக்குக் கண்ணெனக் கருதப்படுவர். உலக வியற்கையிலே தோன்றும் பொருள்களின் உண்மை அவர்தம் நுண்ணறிவிற்குப் பொள்ளெனப் புலப்படும். இறந்த காலத்தில் நிகழ்ந்ததைக் கொண்டு எதிர்காலத்தில் நடப்பதை உணர்ந்துரைக்கும் வன்மை அவருக்கு இயல்பின் அமைந்தது. மக்கள் ஒழுகலாறு இதுவென நம்முணர்வுக்கு இயைந்த வண்ணம் இனிய மெல்லிய சொற்களால் நமது புலத்தில் நன்கு பதியுமாறு அழகுறக் கூறும் அவர்தம் செந்நாவீறு பெரிதும் போற்றற் பாலையது. அவர் உறுதிப் பொருளாகிய தெள்ளமுதத்தைத் தீஞ்சுவை கனிந்த சொற்குழூவாகிய வலம்புரிச் சங்கானே ஊட்டி, நமது உடம்பைப் பெரிதும் பேணிவளர்க்கும் நற்றாயைப் போன்று நமது அறிவை வளர்ப்பவராவர். அவருக்கு இவ்வுலகு என்றுங் கடமைப்பட்டுளது. அவர் தம் அறிவின் மாட்சியானும் சொல் வன்மையானும் உலக நிலையை ஒரு கணத்தில் மாற்றத்தக்க ஆற்றல் படைத்தவராவர். அவர் இயற்றிய அரும்பெருநூல்களே அன்றி, அச்செல்வர் வாழ்க்கையில் ஒழுகியவாறும் பெரிதும் சுவை பயப்பன

வாம். அப்பெரியாரது நடையின்கண் மதிப்பொலிவு தோன்றின் மகிழ்ச்சி பூப்பேம்; கல்வி உயர்வு கவின்றால், கண்டு வியப்பேம்; மேன்மையும் இழிதகவும் காணின் அவர்தம் கல்வியும் அறிவும் பயன்படாமை நோக்கிக் கவல்வேம். எவ்வாறாயினும் நமக்கு அவை பேரின்பமும் விழுப்பயனும் பயப்பனவே. அத்தகைய அருந்தமிழ் வாணர்களுள் இரட்டையர் என்னும் இருபெரும் புலவருடைய சரித்திரம் நமக்கு ஆராவின்பம் பயப்பது.

இற்றைக்குச் சற்றேறத்தாழ நானூற்றைம்பது ஆண்டுகட்கு முன்னர்ச் சோழ வளநாட்டின்கண் ஆமிலந்துறை என்னும் ஊரிலே செங்குந்தர் மரபிலே இரட்டையர் எனப் பெயரிய இருவர் தோன்றினர். இவ்விருவரும் ஒருவரை ஒருவர் எவ்வாற்றானும் ஒத்திருந்தமையாலும் ஒருங்கு சேர்ந்து செய்யுள்பாடி வந்தமையானும் இரட்டையர் என வழங்கப்பட்டனர். இவர் தம்முள் ஒருவர் முடவர்; மற்றவர் குருடர். முன்னை வினைப்பயனாலே கால் முடம்பட்டாரேனும் அறிவான் முடம்பட்டிலர் முடவர்; முகக்கண் ஒழிந்தும் அகக்கண் விளங்கப் பெற்றார் குருடர். இவ்விருவருக்கும் முதுசூரியர் என்றும் இளஞ்சூரியர் என்றும் முறையே பெயர் வழங்கலாயின. முடவர், குருடர் தோள் மீது இவர்ந்து அவருக்கு வழி காட்டுவர். குருடர் முடவரைச் சுமந்து செல்வர். இவ்விருவரும் உறவின் முறையில் ஒருவருக்கொருவர் அம்மான் சேயாகவும், அத்தை மகனாகவும் அமைந்தனர். இவர் திருவருட்செல்வம் பெற்றவராய்க் கல்வி வளம் பழுத்த இனிய செந்தமிழ்ப் பாக்களை முயற்சியும் உழைப்புமின்றி எளிதிற் பாடிய காரணத்தாலே தெய்வப் புலவர் எனவும் சிறப்பித்தோதப் பெறுவர்.

4

இப்புலவர் தமது சமயமாகிய சைவ சமயத்திலே பெரும்பற்றும் அன்பும் உடையராய்த் திகழ்ந்தனர். தமது வாழ்நாள் முழுவதும் சிறந்த திருத்தலங்களுக்குச் சென்று, ஆங்காங்குக் கோயில் கொண்டெழுந்தருளியுள்ள அருட்பெருங்கடலைப் பலவாறு கனிவு தோன்றப் பழிச்சுதலும், தணிவு தோன்ற உள்ளமுருகிச் சிந்தித்தலும், பணிவு தோன்றத் தலையாரக் கும்பிட்டு வணங்குதலும் ஆகிய இவற்றையே அரும்பெருந் திருப்பணியாகக்கொண்டு வாழ்ந்து வந்தனர். அக்காலத்துச் செந்தமிழ் நாட்டிலே வதிந்த செல்வரையணுகி, அவர்மீது அரிய பெரிய தமிழ்ச் செய்யுட்களைப் பாடிப் பரிசுபெற்று அதனால் தமது வாழ்க்கையைச் செலுத்துவர். ஒவ்வொரு பாட்டையும் இருவரும் கலந்தே பாடுதல் இவருக்கு இயல்பு. ஒவ்வொரு நூலையும் இருவரும் சேர்ந்தே பாடி முடிப்பர். ஒரு பாட்டில் அரைப் பகுதியை ஒருவர் பாடி முடிக்க, மற்றப் பகுதியைக் கருத்துப் பிறழாது சொல் வகையும் ஒப்ப, ஒருவரே பாடியது போலத் தோன்றுமாறு மற்றவர் பாடி முடிப்பர். இப்பரிசு எவரானும் பாராட்டப்படுமென்பதில் ஐயமுண்டோ? உறுப்பானும் புலத்தானும் குறைபாடுடைய இவ்விருவரும் கல்வி கற்றலே அருமை? அதனினுங் கவி பாடுவதென்றால், அஃது அருமையினும் அருமை அன்றோ! அங்ஙனம் பாடுங் கவிகளும் சொற்சுவை பொருட்சுவை செறிந்திருத்தல் எல்லாவற்றினும் அருமையாதலை மறுப்பார் யாவர்? இதனால் இவர் கற்றார் கல்லாதார் ஆகிய எல்லாராலும் நன்கு மதிக்கப்பட்டுத் தெய்வப் பாவலர் என்னும் புகழுரையும் பெற்று, இனிதுறைவாராயினர்.

இவ்விருவரும் சிவஸ்தல யாத்திரை செய்து போதருங்கால், ஒருநாள் பூலோக கைலாயம் எனப் புகழ்பெற்ற

சிதம்பரத்துக்குச் சென்று ஆங்குக் கோயிலின்கண் பொன்னம்பலத்தே வீற்றிருக்கும் இன்னமுதை இரு கண்களாலும் பருகும்பொருட்டுக் கோயிலுக்கு வழிக்கொண்டனர். அப்போது இடைவழியில் செல்வமிக்குடைய ஒருவன் விலையுயர்ந்த ஆடை அணிகளை அணிந்து சிறக்கப் போதலை முடவர் கண்ணுற்றுப் பரிசிலைக் கருதி, அவனைப் புகழ்ந்து முதலிரண்டடி தொடுத்துப் பாடக் குருடர் பின்னிரண்டடி பாடி முடித்து நின்றனர். அவிழ்ச் சுவையே அன்றித் தமிழ்ச்சுவையறியா அச்சீமான் செல்வச் செருக்கால் அப்பாடலைப் பாராட்டாது நெடுமரம் போல நின்றான். அத்தகைமையைக் கண்ட முடவர்,

> 'மூடர்முன்னே பாடல் மொழிந்தால் அறிவாரோ
> ஆடெடுத்த தென்புலியூர் அம்பலவா!'

என்று துவங்கிப் பாடினர். அக்குறிப்பினை அறிந்த குருடர், கவிப்பொலிவைக் காணற்குரிய கண் அச்செல்வற்கில்லை என்பதைக் குறித்து,

> '—ஆடகப்பொற்
> செந்திருவைப் போல் அணங்கைச் சிங்காரித்தென்ன பயன்
> அந்தகனே நாயகனா னால்.'

எனக் கூறி முடித்தனர். இப்பாட்டைக் கேட்டார் பலர் இதன் பொருளை வியந்து, அச்செல்வனுக்கு இவர் தம் அருமை பெருமைகளை எடுத்துரைத்தனர். அதன் பின்னர் அவனும் தனது குற்றத்தையுணர்ந்து இவரை உபசரித்து வேண்டும் பரிசிலளித்துக் கொண்டாடினன்.

பின்னர் இரட்டையரது அரும்புலமையைக் கேள்வியுற்ற தில்லை வாணவர் சிலர் அவ்விருவோரையுங் குறுகி, 'தெய்வப் புலவீர், இத்தலத்தைச் சுட்டி, ஐந்தொழிலியற்

பின்னர் இரட்டையர் திருவாமாத்தூர் என்னுந் திருப் பதியை அடைந்தனர். அங்குள்ள புலவாணரும், பிரபு சிகாமணிகளும் இவர்களைச் சூழ்ந்துகொண்டு, அத்தலத்தே எழுந்தருளியிருக்கும் பெருமானைச் சுட்டி ஒரு கலம்பகம் பாடவேண்டுமென வேண்டினர். அவர்களும் அதற்கிசைந்து, திருவருட்பான்மை இருந்தவண்ணம் அறிந்து, உவகை மீக் கூர்ந்து, சொல்லழகு, பொருளழகு, விஞ்சக் கலம்பகம் இயற்றி அரங்கேற்றினர். அதன்கண்,

'ஆற்குழை யோஅர வோஆயர் பாடி அருமனையோ
பாற்கட லோதிங்க ளோதங்கு மாவம் பலபலவாம்
மார்க்கமும் ஆகிநின் றூர்மாதை நாதர் வலங்கொள்பம்பை
மேற்கரை கோயில்கண் டார்புரஞ் சீறிய வெங்கணைக்கே.'

என்னுந் தூக்கில், திருக்கோயில் பம்பையாற்றின் மேலைக் கரையிலே இருப்பதாகக் கூறப்பட்டிருந்தது. அதனைக் கண்டார் நகைத்து, 'குருடருக்குத்தான் கண்ணில்லை; முடவருக்குமா கண் கெட்டது!' என்று அவர்தம் அறி யாமையை இகழ்ந்து கூறினர். அது கேட்ட பாவாணர், 'இந்நூலை இன்னுஞ் சின்னாட்கழிந்தபின் அரங்கேற்று வோம்,' என்று மொழிந்து தமது உறைவிடம் சேர்ந் தனர். அற்றைநாள் இராப்பொழுது இறைவன் திரு வருளால் பெருமழை பெய்யக் குளம், மடு, கூவல் எல் லாம் தண்ணீர் நிரம்பி, எங்கும் பெருவெள்ளம் தேக்கி யது. அவ்வெள்ளப் பெருக்கால் பம்பை நதி பழைய நெறியை விட்டு விலகித் தென்பால் ஓடி வடபால் மீண் டது. மறுநாள் இவ்வியப்பைக் கண்ட அவ்வூர் மக்கள் அச்சமும் விம்முதமுமுற்று இரட்டையர்பால் சேர்ந்து, நிகழ்ந்த செய்தியை உணர்த்தி, அவர்தம் புலமையைப்

பெரிதும் போற்றி நின்றனர். பின் நூலை மீண்டும் அரங்கேற்றத் தொடங்கி, எல்லாரும் பெருங்களி துளும்புமாறு, சொற்பொருள் விரித்துரைத்து முடித்தனர்.

சிறிதுகாலஞ் சென்றபின் இரட்டையர் ஆங்கூர் என்னும் ஊருக்குச் சென்றனர். ஆங்குச் சென்றவளவில், வழி நடந்த வருத்தத்தாலும் களைப்பாலும் பசி நேரம் கடுகுதலும் முடவர்,

'தேங்குபுக ழாங்கூர்ச் சிவனேவல் லாளியப்பா
நாங்கள் பசித்திருக்கை ஞாயமோ?'

என்றிரண்டு அடிகளை இசைப்பக் குருடர்,

'—போங்காணும்

கூறுசங்கு தோல்முரசு கொட்டோசை யல்லாமற்
சோறுகண்ட மூளியார் சொல்,'

எனப் பின்னிரண்டடி தொடுத்து முடித்தனர். இச்செய்யுளில் முடவர் வருந்திக் கேட்ட வினாவிற்கு விடையாக எழுந்த அடிகளால் சிவபிரான் தாமே அன்னமறிந்திலர் என்னும் உண்மை புலப்பட்டது.

பின்னர்ச் சின்னாட்களில் அவ்வாலய அருச்சகர் அங்குச் செய்து வந்த சூழ்ச்சி வெளிப்பட்டது. அதாவது: அருச்சகர் நித்திய நைமித்திகத்தின் பொருட்டுத் தரப்படும் அரிசி பருப்பு முதலியவற்றை எல்லாம் தாமே எடுத்துக்கொண்டு கோயிலின் நைவேத்தியத்திற்காக ஒரு செங்கல்லை அடுப்பி லிட்டு, அதிலே சூடேறிய பின் அதை ஒரு தட்டிலே வைத்து மூடிக்கொண்டு சென்று, பலர் அறியச் சுவாமி சந்நிதானத்திலே அதன்மேல் சிறிது தண்ணீரைத் தெளிப்பார். அப்போது கல்லினின்று புகை எழுதலைக் காண்போர் புதிய நைவேத்தியம் அருச்சகர் படைக்கின்றனர் என்றெண்ணிச் செல்வர் என்பதாம்.

இஃது ஒருநாள் ஒருவனுக்குப் புலப்பட அவன் அதனை ஊர் முழுதும் அறிவித்தான். ஊரார் குழுமி அருச்சகரைப் புறப்படுத்தினர். அவ்வூரினர் இரட்டையர் பெருமையைப் பல்காலும் பாரித்துரைப்பர் என்பது பகர வும் வேண்டுமோ? இரட்டையர் பின்பு தொண்டை நாட் டின்கண் மிகச்சிறந்து விளங்கும் காஞ்சிமா நகரை அடைந்து, ஒரு மாவிற் பெருமானை அறுபோதும் வணங்கி, ஆண்டுச் சிறிது காலம் இனிதுறைவாராயினர்; அங்கு ஏகம்ப வள்ளலார் இனிய பவனி விழாவிலே ஈடு பட்ட மனமுடையவராய் அவர்மீது ஓர் அழகு பழுத் தொழுகும் 'உலாப்பிரபந்தம்' பாடினர். அதனை அரங் கேற்றுகையில் விநாயகர் வணக்கச் செய்யுளாகிய,

'சாற்றிய ஆயிரக்கால் மண்டபத்தின் சார்வாக
ஏற்ற முடனே இனிதிருந்து—போற்றும்
விறல்விகட சக்ர விநாயகனை யேத்தும்
திறல்விகட சக்ரா யுதம்.'

என்பதைக் கூறி உரை விரிப்பத் தொடங்குழி, அவைக் களத்தே அமர்ந்திருந்த புலவர் சிலர் அப்பாட்டிலே குறிப் பிடப்பட்டிருக்கும் ஆயிரக்கால் மண்டபமும், விகட சக்ர விநாயகரும் ஆண்டில்லை என்பதை உணர்த்தினர். அது கேட்ட இரட்டையர், "யாமும் அறியோம். அவளும் பொய் சொல்லாள்,' என்று தமக்குக் கலைமகளார் உண் ணின்றுணர்த்துதலைக் குறிப்பித்து, 'பின்னொருகால் இந்நூலை அரங்கேற்றுவோம்,' எனக் கூறிச் சென்றனர். காலஞ் சென்றதும் காஞ்சி நகரை ஆண்டு வந்த அரை யன் ஒருவன் வேள்வி புரிவான் நிலந்திருத்துகையில், அங்கிருந்த மண் மேடு கரைய, விகட சக்ர விநாயகரும்,

ஆயிரக்கால் மண்டமமும் விளங்கித் தோன்றின. அது கண்டார் இறும்பூதெய்தி இரட்டையருக்கு நிகழ்ந்ததைத் தெரிவித்து, உலாவை அரங்கேற்றுவித்தனர். அனைவரும் அன்று முதல் அதனைத் தெய்வீக உலா என இறப்பவும் மகிழ்ந்துரைத்துப் பாராட்டுவாராயினர்.

ஒருகால், இவ்விருவரும் காவித்தண்டலம் சென்று, செல்வத்தாற் சிறந்த வேளாளப் பிரபுவாகிய ஓமளநாதனைப் பரிசில் கருதிக் கண்டனர். அவனோ, கல்விச் செல்வர்களின் கண்ணியமறியாத கயவனாதலின், அவர்களைப் பொருட்படுத்தாது இருந்தனன். அவன் அயலகத்தானும் சிறிதும் மதியாது, நாவலர் பெருமக்களை அவர் மனம் புண் படுமாறு பல வசைமொழி கூறினன். அதனால் மனங் கொதித்து இருவருமாக,

‘ஒருகாவித் தண்டலம்வாழ் ஓமளநா தன்வீடு
இருகாலும் பற்றி யெரிக—அருகாகுங்
கம்பத்தான் வீடும் கலந்தெரிக மற்றிவர்கள்
சம்பத்தெல் லாமொழியத் தான்.’

என்னும் வெண்பா இசைத்துச் சில அடிகள் நடத்தற்குள் அவ்வீடுகள் இரண்டும் தீபற்றி எரிந்தன.

பின்னொருகால் இரட்டையர் சிவராசதானியாகிய மதுரை மாநகரஞ் சென்று, ஆலவாய் அவிர் சடைக் கடவுளைத் தரிசிக்க விழைந்து, பொற்றாமரைத் தீர்த்தத்தில் நீராடப் புக்கனர். அப்போது முடவர் கரையின்மேல் அமர்ந்திருந்தனர். குருடர்படித்துறையில் இறங்கித் தமது உடுக்கையைத் துவைத்து ஆடையை அலச நீர்ப்பரப்பின் மேல் விரிப்ப, அது சிறிது நழுவிவிட்டது. நழுவிதையக்

குருடராதலின் அறியாது, அவர் தடவித் தடவித் தவிப் பதைக் கண்ணுற்ற முடவர்,

‘ அப்பிலே தோய்த்திட் டடுத்தடுத்து நாமதனைத்
தப்பினல் நம்மையது தப்பாதோ ?’

எனக்கூறி மைத்துனக் கேண்மையான் எள்ளி நகையாடினர்.

அது கேட்ட குருடர் நாணி,

—‘அப்படியே

ஆனலுங் கந்தை அதினுமோர் ஆயிரங்கண்
போனல் துயர்போச்சுப் போ.’

என்று இயம்பினர். அது கேட்ட முடவர்,

‘ கண்ணா யிரமுடைய கந்தையே ஆனலுந்
தண்ணார் குளிரையுடன் தாங்காதோ ?’

என்று மீண்டுஞ் செப்பக் குருடர்,

‘—எண்ணாதீர்

இக்கலிங்கம் போனல்என் ஏகலிங்க மாமதுரைச்
சொக்கலிங்கம் உண்டே துணை.’

என்று விடையிறுத்தனர். உடனே அவ்வாடை காற்ருல் உந்தப்பட்டுக் கரை சேர்ந்தது. பின் சொக்கலிங்கப் பெருமானை அங்கயற்கண்ணியோடு தொழுது மீண்டு அத்தலத்தின்கண் சின்னாள் வதிவாராயினர்.

அவர் பின்பு ஒரு நாள் வழுதியைச் சேர்ந்து அவன் செந்தமிழ் வளர்க்குஞ் செவ்வியினை வியந்து பாடினர். அம் மன்னர் மன்னனும் அப்பாவலருக்கு மிக்க பரிசில் அளிப்பான் எண்ணியிருத்தலை அவன் குறிப்பானுணர்ந்த தன்னலமொன்றே கருதும் புன்மொழில் அமைச்சன் ஒருவன் அவனைத் தகைந்தனன். அஃதுணர்ந்த இரட்டையர்,

'புராதன மான தமிழ்ப்புல வீர்இந்தப் புன்குரங்கு
மாராமரம் விட்டிங்கு வந்ததென் னேவகை கேட்டிலேயோ
தராதலம் வென்ற தமிழ்மா றனையுந்தன் தம்பியையும்
இராகவ னென்றும் இலக்குவன் என்றும் இருந்ததுவே.'

என்ற செய்யுளால் வசைபாடத் தமிழ்மாறன் அவ்வமைச்சனுக்கு நற்றமிழ்ப்புலவர் நல்லிசையை எடுத்துக் கூறி, அவருக்கு வரிசை வழங்கி அனுப்பினான்.

இரட்டையர் அதனைப் பெற்று வேறோர் ஊருக்கு வழிக்கொண்டு செல்கையில், இடையில் பிள்ளையார்கோயிலொன்று புலப்படலும், ஆங்குப்புக்குப் பிரணவப் பொருளாகிய ஐங்கரக் கடவுளை வணங்கும் ஆதாரமுடையராகித் தாம் பெற்று வந்த பொருளை ஒரு கிழியில் கட்டி முடிந்து அப்பெருமான் திருமுன்னர் வைத்துவிட்டு நீராடப் படர்ந்தனர். நீராடி முடித்துப் பின் அவர்கள் செல்வக் கணபதியை வாழ்த்தி வணங்கித் தமது முடிச்சைக் காண, அஃது அவிழ்ந்து கிடைந்தது. அதன்கண் இருந்த பொருளும் களவாடப்பட்டிருந்ததை நோக்கிக் கவிவாணர். 'இப் பிள்ளையே இச்செயலைச் செய்தது. வேறு யாவரே இது செய்ய வல்லார்!' என நினைத்து, விநாயகப் பெருமானைச் சுட்டி,

'தம்பியோ பெண்திருடி தாயா ருடன்பிறந்த
வம்பனோ நெய்திருடும் மாமாயன்—அம்புவியில்
மூத்தபிள்ளை யாரோ முடிச்சவிழ்த்தீர் போமோ
கோத்திரத்திற் குள்ள குணம்?'

என மிகச்சமத்காரமாக ஓர் அருங்கவி சொற்றனர். அதன் பின் அம்முட்டை முன்னினும் பெரியதாய் மிக்க பொருளுடன் காணப்பட்டது. அவர் அதனை உவகைமீதூர எடுத்

துக்கொண்டு அப்பெருமான் திருவிளையாடலை எண்ணி எண்ணி மனமுருகி அன்பு கனிந்தொழுகப் பரவசப்பட்டு ஏருவராயினர்.

சின்னாட் கழிந்த பின்றை அவர் ஈகையிற் சிறந்தவனாகிய திருவேங்கடேசன் என்னும் பொருட்செல்வனை அணுகினர். அவனும் இவ்விரட்டையர்தம் பெரும்புகழை முன்னரே கேள்வியுற்றோனாதலின், அவர்தம் அருமையுணர்ந்து பரிசிலளிப்பான் விரைந்தனன். அஃதுணர்ந்து அவன் தமயன் கண்ணுக்கினியான் என்பவன், இயற்கையிலே வன்கண்ணனாதலின், தன் இளவல் புலவோருக்கு ஈதலை விலக்கினன். அஃதறிந்த செந்நாச் செல்வர்,

'தேன்பொழியும் வாயான் திருவேங்க டேசனுடன்
என்பிறந்தான் இந்த இனியான்காண்—யான்செலக்கேள்
சீதேவி யார்பிறந்த செய்யதிருப் பாற்கடலுள்
மூதேவி என்பிறந்தாள் முன்?'

என்றொரு தூக்கிசைத்துச் சென்றனர். இப்பாவினைக் கேட்ட இளையான், தமயன் அறியாது அவர் பின்னே தொடர்ந்து சென்று, தான் கொடுக்கக் கருதிய பொருளைத் தந்து, முகமன் கூறி, அவர்பால் விடைபெற்று மீண்டான்.

பின் அவ்விருவரும் அருட்சோதிப் பிழம்பாகிய அண்ணாமலையான் அடிக்கமலம் பரவத் திருவண்ணாமலைத் திருப்பதியை அடைந்து, அங்கே சக்தி உபாசகனும், செந்தமிழ்ப்புலவனும், செருக்குமிக்கவனும், புலவர் எவரேனும் அவரை இழித்துரைத்தலே தன் கடப்பாடாகக் கொண்டவனுமாகிய சம்பந்தாண்டான் என்பவனைக்கண்டனர். அப்போது அவனுக்கு மயிர் விளைஞன் ஒருவன் க்ஷவரம் செய்துகொண்டிருந்தான். அவன் புலவரென இவர்களைக்

கேட்டவுடன், விரைந்து, 'மன்னென்றெடுத்து மலுக்கென்று ஒரு வெண்பா கூறுமின்,' என்று கூறினன். அவன் அறியாமைக்கு நகைத்துச் செந்தமிழ்ப் புலவர் இருவரும்,

'மன்னுதிரு வண்ணு மலைச்சம்பந் தாண்டாற்குப்
பன்னு தலைச்சவரம் பண்ணுவதேன் ?—மின்னின்
இளைத்த மடவார் இவன்குடுமி பற்றி
வளைத்திழுத்துக் குட்டா மலுக்கு.'

என்றோர் தொடர்பை அவன் செருக்கொழியுமாறு கூறினர். அன்று முதல் அவன் இறுமாப்பும் அடங்கிற்று.

அப்பால் புலவர் அவ்விடம் விட்டு வேற்றூருக்கு வழிபற்றிச் செல்லுகையில், தமக்கு மெய் வருத்தமும் இளைப்பும் மீதூர, மிகுதியும் வருந்தி, இவ்வல்லல் பரிசில் வாழ்க்கையை நினைந்து நொந்து குருடர்,

'குன்றும் வனமும் குறுகி வழிநடந்து
சென்று திரிவதென்றுந் தீராதோ ?'

என்றிசைப்ப, முடவர் தாம் பொய்யும் புனைவுங் கூறுந் தன்மையை முனிந்து,

'—ஒன்றுங்

'கொடாதவரைச் சங்கென்றுங் கோவென்றுஞ் சொன்னால்
இடாதோ அதுவே இது ?'

என்று செய்யுளை முற்றுவித்தனர். இவ்வாறே இவ்வரும் புலவர் தமது வறுமையைப் பல்கால் நினைந்து வருந்திய நாட்கள் பல. சங்க காலத்துக்குப் பின் தமிழ்ப் புலவருக்குப் பெருமையும் ஆதரவும் இறப்பவும் குறைந்தன. ஆங்காங்குச் சிற்சில மன்னர்கள் சிற்சில புலவர்களை ஆதரித்து வந்தனரேயன்றி, ஓர் ஒழுங்காகக் கல்வி வளர்ச்சிக் கேற்ற சாதனங்கள் ஒன்றுமில்லை. அதனால் தமிழ்

செழித்து வளரத் தடை நிரம்பவும் நேர்ந்தது. இன்றேல், இயல்பாகவே கருவிலே பாடுந்திறன் அமையப்பெற்ற செந் தமிழ் நன்மக்கள் இனிய அழகிய பல வகை நூல்களைப் பல துறைகளிலுஞ் செய்து முடித்துத் தமிழகத்துக்கேயன்றி இவ்வையகத்துக்கே அறிவமுதை வழங்கியிருப்பார்கள் என்பது ஒருதலை. ஒருகால் இரட்டையர் நல்குரவு என் னும் வல்விடம் தீண்டச் செப்பிய தீங்கவி கற்றோர் நெஞ் சத்தைக் கரைந்துருகச் செய்யும் :

'கேட்ட வரமளிக்குங் கீர்த்தியுள்ள தெய்வங்காள் !
கூட்டோடே எங்கே குடிபோனீர் ?—பாட்டாய்கேள் :
செல்கால மெல்லாஞ் செலுத்தினோம் அல்காலங்
கல்லானோஞ் செம்பானோங் காண்.'

இவரைக் கூவத்து நாரணன் என்னும் தமிழ் வள்ளல் கண்ணோட்டம் வைத்துப் பெரிதும் பேணி வந்தனன். அவன் புகழ்சிப் பெருக்கை நெஞ்சார மேன்மேலும் உவகை ததும்ப,

'மாதாபி தாவுமவன் மன்னுகுரு தெய்வமவன்
தாதா அவனே தருங்கீர்த்திக்கு—ஆதாரன்
த்யாக சமுத்திரன் தண்கூவ ராயன்றன்
ஈகைதனைச் சொல்லவெளி தோ !'

என்று எடுத்துரைத்தனர். பின் அவ்வருங்குணச் செம் மல் இவ்வுலக வாழ்வை நீத்தமைக்கு உள்ளமுருகி, இய மனைச் சுட்டி, 'அந்தோ! பாவி! கூவத்துத் தியாக சமுத் திரமாகிய நாரணனைக் கொல்லல் நன்றோ? கற்பகச் சோலை யைக் கரிக்கென வெட்டலாமோ?' என நல்லார் பன் னாள் நில்லாது இறத்தலையும், அல்லார் பல்லாண்டு இருத் தலையும் பொருளாக அமைத்து, அதனைக் காலன்மீது மடமை யாக ஏற்றி,

‘ இடுவார் சிலரும் இடாதார் பலரும்
வடுவிலா வையத் திருக்கப்—படுபாவி,
கூவத்து நாரணனைக் கொன்றாயே கற்பகப்பூங்
காவெட்ட லாமோ கரிக்கு.’

என்று ஓர் யாப்பு இயம்பினர்.

இரட்டையர் ஒருகால் ஆசுகவி பாடுவதில் தமக்கிணை தாமேயாகிய காளமேகப் புலவரைச் சந்தித்து அவருடன் கமலாலயம் எனச் சீர்த்தி பெற்ற திருவாரூரை அடைந்து, தியாகராயப் பெருமானை முறுகி வளர்ந்த அன்போடு வணங்கினர். அப்போது குருடர் சிவபெருமானைப் பாவால் பரவ நினைந்து,

‘ நாணென்றால் நஞ்சிருக்கும் நற்சாபங் கற்சாபம்
பாணந்தான் ’

என்றவளவில் அவருக்கு நாத்தடைப்பட்டது. முடவருக்கும் அதனை முடிக்கச் சீர் வரவில்லை. இருவரும் ஆழ்ந்து சிந்திக்கத் தலைப்பட்ட அளவில் அவ்வேளையில் அருகேயிருந்த காளமேகப்புலவர் உடனே, ‘ மண்தின்ற பாணமே,’ என்றனர். இச்சீர் எழுந்த மாத்திரையானே முடவர்,

‘—தாணுவே,
சீராரூர் வாழுஞ் சிவனே சிரிப்பன்றோ
நேராரூர் செற்ற நிலை?’

என்று கூறி வெண்பாவை நிரப்பினர். பின் இரட்டைப் புலவர் காளமேகப் புலவர் அற்புத சக்தியை வியந்து,

‘ விண்தின்ற கீர்த்தி விளைகாள மேகமே
மண்தின்ற பாணமென்ற வாயினிக்க—கண்டொன்று
பாகொடுதேன் சீனியிடும் பாக்கியம்பெற் றோமிலையே
ஆகெடுவோ முக்கிங்கென் னும்?’

என்று பாடிப் புகழ்ந்தனர். பின்னர் இரட்டையரும், காளமேகப் புலவரும் ஒருவரோடொருவர் அளவளாவி,

'உவப்பத் தலைக்கூடி யுள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்.'

என்னும் தமிழ் மறையின்படி மிக்க வருத்தத்துடன் பிரிவாராயினர்!

சில்லாண்டுகள் சென்ற பின்றை இரட்டையர் திருவானைக்காவிற்குச் சென்று திருக்கோயில் வழிபாடு புரிந்து, காளமேகப் புலவரைக் கண்டு மகிழ, அவர் அகத்துக்குச் சென்றனர். அப்போது அங்குள்ளார், அவர் அன்று தானே சிவபெருமான் திருவடி நீழலை அடைந்தாரெனவும் அப்போதுதானே அவரது யாக்கை சுடலைக்குக் கொண்டு போகப்பட்டது எனவுங் கேட்டு, கடலுள் கலங் கவிழ்ந்தாற் போன்று வருந்திச் சுடலைக்கு விரைந்து செல்லப் பிணம் வேதலைக் கண்டு மீளாத் துயரத்துடன்,

'ஆசு கவியா லகில வுலகெங்கும்
வீசு புகழ்க்காள மேகமே,—பூசுரா,
விண்தின்ற செந்தழலில் மேவுதே ஐயையோ!
மண்தின்ற பாணமென்ற வாய்.'

என்று பாடிப் புலம்பினர். இளமையிலேயே கவி பாடுந் திறன் வாய்ப்பப் பெற்றுக் கலம்பகம், உலா முதலிய அரிய பெரிய பிரபந்தங்களைப் பாடி முடித்த செந்தமிழ்ப் புலவராகிய இரட்டையர் இருவரும் சிறிது காலஞ் சென்ற பின் செம்பொருளின் அம்புயத்தாளில் சொரியும் சிவானந்த மதுவை உண்ண அதனுடன் இரண்டறக் கலந்தனர்.

# 4. காளமேகப் புலவர்

" தண்ணீரும் காவிரியே தார்வேந்தன் சோழனே
மண்ணாவ தும்சோழ மண்டலமே."

எனச் சிறப்பித்துப் பாராட்டப்படுவது சோழ வளநாடு. அந்நாட்டிலே 'கோனிலை திரிந்து கோடை நீடினுந் தானிலை திரியாத் தண்டமிழ்ப் பாவை'யாகிய காவிரியாறு எக்காலத்தும் பெருக்கறாது நின்று பொன் கொழிக்கும். நீர் வளம் குறைவறப் பெற்ற அச்சோணாடர் முப்போகம் விளைத்துச் 'செல்விருந் தோம்பி வருவிருந்து' பார்த்திருப்பர். அதனால் அது, 'சோழ வளநாடு சோறுடைத்து,' என்ற புகழுரையும் பெற்று விளங்கும். வயிற்றுப் பெருமான் பூசனை இனிது நிறைவேறவே அந்நாட்டினர் கடவுள் வழிபாடு புரிவதிலும், தமிழாராய்ச்சியிலும் தமது காலத்தைச் செலவிட வல்லராயினர். அதனால், சோழ மன்னர் தமிழ் மொழியைப் புலவர் பலரை ஆதரனை செய்யுமுகத்தான் வளம்படுத்தினர்; தமது நாட்டில் எங்கெங்கும் திருக்கோயில்கள் கட்டினர்; ஆங்காங்குத் திருக்குளங்கள் தொட்டனர்; அன்ன சாலை, விடுதிச் சாலை முதலியன எடுத்தனர்; இளமரக்காவும், பயன்மரச் சோலையும் வைத்தனர்; தத்துவ ஆராய்ச்சியில் தலைக்கூடி நின்று, புராணக் கேள்விகளை மக்கள் கேட்குமாறு பட்டிமண்டபங்களை இயற்றுவித்து, ஆங்குப் புலவர் குழுமிப் பொருளுரை மொழியுமாறு செய்தனர்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த சோழ வளநாட்டிலே செல்வம் ஓங்கிய நகரங்களில் ஒன்றாகப் பொலியும் திருக்

5

குடந்தையம்பதி என்னும் கும்பகோணம். அஃது எப்புறனும் அழகிய கோயில்களை உடையது. அந்நகரிலே குளங்கள் நிறைந்து, சோலைகள் செறிந்து, வயல்கள் மிகுந்து விளங்கும் காட்சி எவ்வெவர் மனத்தையும் கவர்ந்துகொள்ளும் நீர்மையது. சிவாலயங்கள் பலவற்றினும் பேர் பெற்றுத் திகழ்வது கும்பேசன் கோட்டம். விஷ்ணுவாலயங்களுள் சீர்பெற்றுத் துலங்குவது ஆராவமுதன் சந்நிதி. இவ்விரு பெருங்கோயில்களிலும் திருவிழா நடைபெறுங்கால் திரள் திரளாக மக்கள் குழுமித் தேவ பூசனை செய்து, எண்ணிய வரங்களை எளிதில் அடைந்து, எக்களிப்பெய்துவர். அந்நகரம் கல்விச் செல்வம் கவின்று, புலவர் வதியும் பொன்னகராய்ப் பொலிந்தது. அதனால், அங்குச் செந்தமிழ் மணம் சந்ததம் வீசிற்று. அப்பதியிலே புலவர் பாட்டுக்களாகிய கனியமுதைப் பூரித்துண்டு அவரைப் போற்றும் புலமுடையோர் பலர் வாழ்ந்திருந்தமை யான் அவர் பாடும் பாட்டும் பாடெய்தியது. அவரும் புகழும் பொருளுஞ் பெற்று அருமைப்பாடு கொண்டனர்.

அத்தகைய அரும்பெரும்பதிக்கு அருகிலேயுள்ள நந்திக்கிராமத்திலே வேதியர் குலத்திலே வைணவ மரபிலே ஏறக்குறைய நானூறு ஆண்டுகட்கு முன்னர்க் காளமேகப் புலவர் பிறந்தார். அவருக்குப் பெற்றோர் இட்டு வழங்கிய பிள்ளைப் பெயர் வரதர் என்பது. அவர் தக்க வயது வந்ததும், காவிரியாற்றின் நாப்பண் கண்டவர் கண்ணையுங் கருத்தையுங் கவரும் அழகுடன் விளங்கும் திருவரங்கத் திருநகரை அடைந்து, அவ்விடத்தே திருக்கோயிலின் மடைப்பள்ளியிற் பரிசாரகராய் அமர்ந்தார். அப்போது அவர் அப்பெரிய கோயிலிலே எழுந்தருளி யிருக்கும் பெரிய

பெருமாளாகிய அரங்கநாதனைத் தரிசிக்கவரும் பெருந்திர ளான அன்பர் கூட்டுறவால் அரியபொருள்கள் பலவற்றை யும் உணர்ந்தனர். அன்றியும், அவர் கல்வியறிவு மிகவும் பெற்றிலரேனும், கேள்விச் செல்வம் இனிது வாய்க்கப் பெற்றார். அரங்கனது திருமுன்னர்க் கைகூப்பி நின்று, அப்பெருமான் வடிவழகு வெள்ளத்தில் ஈடுபட்டு, விழி நீர் பெருக, உள்ளங் குழைந்து, ஆர்வலர் வாயாரப் பாடும் வண்டமிழ்ப் பாடல்களால் வரதர் தோட்கப்பட்ட செவிய ராயினர். அவர் மடைத்தொழிலில் வினைத்திறன் சிறந்து, வெவ்வேறு வகைப்பட்ட சித்திரான்னங்களைப் பாகமுறச் சமைத்து யாவர்க்கும் மகிழ்ச்சியூட்டினர். திருவரங்கத் தின் ஒரு மருங்கிலே திகழ்வது திருவானைக்கா என்னுஞ் சிவநகர். அத்தேவகுலத்தில் வழிவழித் திருப்பணிசெய்து வரும் கணிகையருள் அழகிலும் அன்பிலும் சிறந்தாள் மோகனாங்கி என்னும் ஒரு பெண்மணி. அவளுக்குத் திரு வாசகம், தேவாரம் முதலிய சைவத் திருமுறைகளில் நல்ல பயிற்சி உண்டு. மோகனாங்கி இனிய குயில்போன்ற தனது குரலெடுத்துத் திருவெம்பாவை ஓதுவாளாயின், கல்லுங் கரையும் ; மண்ணும் உருகும். அவள் வாயில் வரும் ஒவ் வொரு சொல்லும் தனித்தனி ஒவ்வோர் அழகைப் பெறும்.

அம்மாதரசி திருவிழா நடைபெறுகையில், ஒருகால் திருவாசகத்தில் வரும் குயிற்பத்தைப் பொருளுணர்ந்து, முப்பொறிகளும் ஒன்றுபடப் பாடி வரும்போது திருவரங் கத்துப் பரிசாரகராகிய வரதர் கேட்டு, அவள் அன்பு கனிந்த இன்பப் பாடலை மேன்மேலுங் கேட்டு மனமுருக வேண்டுமென விழைந்தார். அவ்விழைவு நாளேற நாளேற முதிர்ந்து அவள்பால் காதலாய் அங்குரித்தது ; அக்காத

லுஞ் சிறிது காலத்துள் வளர்ந்து வரதர் நெஞ்சை வாங்கிக் கொண்டது. வரதரும் மோகனாங்கியின் அரும்பெறற் காதலை அடையப் பலவாறு முயன்று, இறுதியில் அவள் காதற்கிழமையைப் பெற்று மகிழ்ந்தனர்.

இங்ஙனம் வரதர் அம்மங்கையுடன் இன்புற்று அன்புற்று வாழ்ந்து வருங்கால், மார்கழித் திருநாள் வந்தெய்தியது. திருவானைக்காவிலுள்ள கணிகை மாதர் யாவரும் ஈசனடியார். அவர் எல்லோரும் ஒருங்கு கூடித் தேவ கோட்டத்தில் திருவெம்பாவை ஓதி வந்தனர்; அக்கால் மத வைராக்கியம் மிகுந்துள்ள,

"உங்கையிற் பிள்ளை யுனக்கே அடைக்கலமென்று
அங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்அன்பர் அல்லார்தோள் சேரற்க;
எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க;
கங்குல் பகல்எங்கண் மற்றொன்றுங் காணற்க;
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோர் எம்பாவாய்"

என்னுந் திருப்பாசுரத்தைப் பாடத் தையலர் அனைவரும் மோகனாங்கியை நோக்கிக் கொல்லென்று நகைத்தனர். மோகனாங்கியோ, மென்மைத் தன்மை வாய்ந்தவள்; வன்சொல் பொறாதவள். ஒரு சிறு சொல்லும் அவளைத் துன்புறுத்தும். இவ்வாறு மடவார் தன்னைச் சுட்டிப் பெருநகை செய்ததைக் கண்டு, அப்பாவை துண்ணென வெகுண்ட நோக்குடன் அவர்தம்மை நோக்கி, அவர் தன்னைப் பார்த்துச் சிரித்ததற்குக் காரணம் யாதென அவரை வினவினள். அவர்கள் அவள் வெகுளியைத் தணிக்கவெண்ணி, மெல்லென, 'மோகனாங்கி, நீ இப்போது பாடிய திருப்

பாடலின் கருத்துக்கு முற்றும் முரண்பட்டிருக்கிறது உன் செய்கை என்பதை நினைத்துத்தான் நாங்கள் யாவரும் நகைத்தோம்,' என்றனர். அது கேட்ட மோகனாங்கி கண் சிவந்து, மொழி குழறி, அவர்களைச் சீறி நோக்கி, 'எவ் வகையில் என் செய்கை மாறுபட்டுளது? கூறுமின்,' என்ற னள். அப்பொழுது அவளது சினக்குறிப்புப் பொறுத மங்கையொருத்தி, மோகனாங்கியைப் பார்த்து, 'வைணவ பார்ப்பானுக்கு வாழ்க்கைப்பட்டிருக்கிற உனக்கு ஏன் வாயும் வீறும்? படிக்கிறது திருவாசகம்; இடிக்கிறது சிவன் கோயிலா? நீ இப்போது பாடிய பாட்டுக்கும் உனக்கும் எவ்வளவு தூரம்? எண்ணிப்பார். உன் செய்கை இதுவா யின், உண்மையுரைத்த எங்களை வெறுத்துக்கொள்வதால் என்ன பயன்?' என்று வெடுவெடுப்புடன் இகழ்ந்துரை யாடினள். அவ்வன்சொற்களைக் கேட்ட மோகனாங்கி வெங் கதிரால் தெறப்பட்ட இளங்கொடிபோல வாடி, வாளா விருந்தனள். அவள் நெற்றி ஒளி இழந்தது; முகம் பொலி விழந்தது; இதழ் புன்னகை தவிர்ந்தது. பின்பு அவள் தன் மனைக்கேகி, அந்நங்கையர் கூறிய சிறு சொல்லை நினைந்து நினைந்து வருந்தினாள்; 'இவ்விழிவைப் போக்கும் வழி யாது!' எனப் பலகாலும் சூழ்ந்து சோர்வுற்றாள். ஒரு புடை மாதர் மொழிந்த வன்மொழியும், மற்றொரு புடை வரதர் தன்மேல் வைத்திருக்குந் தலையன்பும் அவள் மனத் தைத் துன்புறுத்தின.

அப்போது வரதர் பெரிய கோயிலிலே தமக்குரிய வேலையை முடித்து மிக மகிழ்வோடு மோகனாங்கி இல்லம் புகுந்தனர்; அப்பாவை தனது மஞ்சத்தின்மீது பூங்கொடி போலச் சாய்ந்திருத்தலைக் கண்டார். அவள் மதர் விழிகள்

பிறழ்வின்றி ஆழ்ந்திருந்தன; முகம் வெண்டாமரையாய் வெளுத்திருந்தது. அது கண்ட வரதர் மனம் நொந்து, அவளுக்கு நேர்ந்த இடுக்கண் யாதென உணருமாறு அவள் மருங்கு சென்று, இனிய மொழிகளால், 'கண்மணி போல் வாய், உனக்குற்ற இடர் யாது? உனக்குப் பூசல் செய்தார் உளரோ? உடனே கூறுக,' என்று மொழிந்தனர். அப்பொழுது அவளுக்குத் துக்கம் மேலிடக் கண்களில் புலம்பு முத்துறைத்தாற்போலப் புன்கணீர் உகுத்தாள். உடனே வரதர் தமது கரத்தால் அவள் கண்ணீரைத் துடைக்கத் தொடங்குழி, அம்மங்கை வரதர் கையைத் தடுத்துச் சினக்குறிப்புப் புலப்படுத்தினள். வரதர் இன்னது செய்வதென அறியாது திகைத்து, அவள் திருமுகமலரில் வழிந்தொழுகும் எழிலாகிய தேனைப் பருகுவாராய், 'என் உயிரினும் இனியாய், உனக்குற்ற துன்பம் எனக்குற்றதன்றோ? உடலை விட்டு உயிர் பிரியுமோ? உன் இன்னலுக்குக் காரணம் இன்னதெனத் தெரிவிப்பின், உடனே அதனை ஒழிப்பேன்; உனக்குத் தீமை இழைத்தவர் உளராயின், அவரை இந்நொடியிற்றானே ஒறுத்து உனக்கு உவகை ஊட்டுவேன்; ஆகலான், கரவாது நிகழ்ந்ததை அறிவி,' என்று அவளைப் பெரிதும் வேண்டினர். அவ்வினிய மெல்லிய மொழிகள் மோகனாங்கி உள்ளத்தைக் குளிர்வித்தன; அவள் மனப்புண்ணுக்கு மருந்தாயின. அவள் நெஞ்சம் உயர்வுற்றது; அதனால் தனக்கும் கணிகையர் பிறர்க்கும் நேர்ந்தனவெல்லாம் செவ்விதின் வரதருக்கு எடுத்துரைத்தாள். இவையனைத்துஞ் செவி மடுத்த வரதர் உவகை ததும்பும் வதனத்துடன் மோகனாங்கியை நோக்கி, 'ஆருயிர்ப்பாவாய், இவ்வளவுதானா? இதற்காக ஏன் வருந்தல்

வேண்டும்? யாதோ என்று அஞ்சினேன். உன்னைப் பழித்த பாவையர் கருத்து இன்னதென உணர்ந்தேன். உன் மனக் கவலையின் காரணமும் இனிது விளங்கிற்று. உன்னை மகிழ் விப்பதே எனது மதம். அதன்பொருட்டு யாதாயினுஞ் செய்ய எனக்குச் சம்மதம். அதனால், இக்கணமே வைணவ சமயத்தைக் கைவிட்டுச் சைவ சமயத்தைத் தலைக்கொள் வேன். யாதற்கும் அஞ்சற்க; நாளை உன்னை இகழ்ந்த பெண்டிர் இடையே பெருமிதமுடைய மயில்போல நடந்து சென்று, இச்செய்தியைச் செப்பிச் செருக்கி நிற்க,' என்று தெளிவாகத் தம் செயலைக் கிளந்து கூறி, அவள் அருகே சென்றனர். அவளுக்கு அதனால் பெருங் களிப்புப் பொங்கி வழிந்ததேனும், மதத்தை மாற்றிக் கொள்வது அத்துணை எளிதென அறியாளாய், அவள் வரதரை உற்று நோக்கி, ஆழ்ந்த நினைவோடு, 'அவ்வாறு எளிதிலே ஒருவர் தமது மதத்தை மாற்றிக்கொள்ள இய லுமோ?' என்றாள். வரதர் அவளைப் பார்த்து, 'அஃது எளிதே; அரிதன்று. இனி நான் திருநாமஞ் சாத்துதலை விடுத்துத் திருவெண்ணீற்றை அணிய வேண்டுவதுதானே! அதனால் விளையும் இடையூறு யாது?' என்று மறுமொழி கூறினர்.

மோகனாங்கி, அவரைப் பார்த்து, 'அங்ஙனமாயின், கோயில் அதிகாரிகள் தங்களை அங்கே வைத்திருக்கமாட் டார்களன்றோ?' என்று வினவினள். உடனே வரதர், அவளை நோக்கி, இந்த மடம் போனால் ஒரு சந்தமடம் ஆகிறது; அதற்கு நீ ஏன் கவலைப்படல் வேண்டும்?' என்று கூறி அவள் செந்தாமரை போன்ற கரங்களைப் பற்றி, கண் ணாடி போலத் தெளிந்து அழகு ஒழுகுவனவாகிய கபோ

லங்களில் ஆர்வமுடன் கணக்கின்றி முத்தம் வைத்தனர். மோகனங்கியும் உடனே திருவெண்ணீற்றைக் கொணர்ந்து அவர் கையிலளித்து, அதனைச் 'சிவ சிவ' என அண்ணாந்து நிலத்திற் சிந்தாமல் தரிக்கச் சொன்னாள்; அவரும் அவ்வாறே அன்போடு அதனையணிந்து, திருவருளை வழுத்தி நின்றார். மோகனங்கி அவரைத் தழுவிக் கற்பகத்தைச் சேர்ந்த காமவல்லிக் கொடிபோலத் திகழ்ந்தனள்.

மறுநாட் காலை வரதர் திருமண் தரித்துக்கொள்ளாராய்த் திருநீற்றை அணிந்து வெளிப் போதலைக் கண்டார் அனைவரும், 'இதென்ன விபரீதம்! இப்பரிசாரகர் ஆண்டிவேடம் பூண்டார்! இவர் மதிகெட்டதோ! இது பைத்தியத்துக்குத் தொடக்கமோ!' என்று தம்முள்ளே பேசி நகைத்துக்கொண்டனர். வைணவர் மனம் வருந்தி வரதர் மீது அளவற்ற சினங் கொண்டனர். சைவர் மனமகிழ்ந்து அவரைத் தழுவிக்கொண்டனர். திருவரங்கம் பெரிய கோயில் அதிகாரிகள் அவரைத் தம்மால் இயன்றவரை நயந்தும் அச்சுறுத்தியும் பார்த்தனர். அவர் ஜபம் பலிக்கவில்லை; அதனால் அவரைக் கோயிலினின்றும் நீக்கினர். உடனே வரதர் திருவானைக்காக் கோயிலின்கண் மடைப்பள்ளிப் பரிசாரகராய் அமர்ந்தனர்.

மோகனங்கி தன்னை முன்னாள் எள்ளிய கணிகையர் குழுவிற் சென்று நிகழ்ந்தவற்றைக் கூறி இன்புக்கு உறைவிடமாயினள். அவர்களும் அவள் ஆற்றலை வியந்து, வரதர் செய்கையை எண்ணி நகைத்து, விளையாட்டு வினையாக முடிந்தமையைப் பன்னிப் பன்னிப் பொழுது போக்குவாராயினர். இச்செய்கை நிகழ்ந்த பின்னர் மோகனங்கிக்கு வரதர்மீதுள்ள காதல் முறுகி வளர்ந்தது. அவளும் அவரும்

உடலும் உயிரும்போலவும், உகிரும் தசையும்போலவும் இனிது வாழ்ந்துவந்தனர். அவர் தம் மனங்கலந்த வாழ்க்கை இம்மையிலே எய்தும் சுவர்க்கலோக சுகம்போலிருந்தது.

இஃதிவ்வாருக, திருவானைக்காவிலேயுள்ள சிவாலயத்துள் சைவ வேதியர் ஒருவர் இருந்தார். அவர் ஒழுக்கமிக்கவர்; விரதத்தால் இளைத்த திருமேனியினர்; அனுட்டானபரர்; வைதிக ஒழுக்கம் வழுவாதவர். அவருக்குச் செந்தமிழ்ப் புலமை அடைந்து, கவி பாடல் வேண்டுமென்னும் வேணவா உதித்தது. அவர் கவிதா சக்தியைக் கலைமகளார் திருவருளாலே பெறல் வேண்டுமென எண்ணினர். ஏனெனில், ஒரு புலவரை அடுத்துக் கல்வி கற்பது அவருக்கு இயலாது. ஏடு தூக்கிச் சென்று, ஆசிரியர் ஏடு அவிழ்மென அவிழ்த்து, இருவென இருந்து, சொல்லெனச் சொல்லிச் சித்திரப் பாவையின் அத்தகவு அடங்கிப் போவெனப் போதல் அவருக்கு முடியாத கருமம். பொருள் நனி கொடுத்தேனும், வழிபாடு புரிந்தேனும் கற்றற்கும் அவருக்குப் பொருளும் விருப்பமும் இல்லை. அதனால், அவர் கம்பர், கூத்தர் முதலியோர் வரப்பிரசாதம் பெற்றுப் பாடினர் என்று கேள்வியுற்றவராதலின், அவற்றுள் முழு நம்பிக்கை கொண்டு, தாமும் அன்னேரைப்போலவே நாமகளார் அருள் பெற்றுக் கவி பாடும் வன்மைபெறல் வேண்டுமென நினைத்து, சாரதா தேவியை முன்னிட்டுப் பன்னாள் நோன்பு நோற்று வந்தனர். வெண்டாமரையாளும் அவர் நெடுங்காலம் நோற்றுவந்தமையான் அவருக்கு அருள்சுரக்கத் திருவுளங்கொண்டு, ஒரு நாள் கோயிலின் ஒரு புறத்தே சாவித்திரி மந்திரத்தை உருவேற்றிக்கொண்டிருக்கும் அவ்வந்தணர் அருகே சென்றனள். சென்ற வாணி அம்மறை

யோரை விளித்துத் தன் திருவுருவத்தைத் தோற்றுவித்து அவரைத் தனது அருள்வழியும் திருக்கண்களால் நோக்கி, 'அன்ப, நின் வாயைத் திறக்க,' என்று கூறி, அண்மையிற் சென்று தன் வாயிலுள்ள தம்பலத்தை உமிழ்வான் புக்கனள். அந்தோ பாவம்! அப்பார்ப்பனர் போகூழ் வயத்தானே அங்குத் திருமேனி தாங்கி எழுந்தருளி யிருப்பவள் மணி முடி மன்னரும் வணங்கத்தக்க அணி மலர்ச் செல்வியென்று அறிகிலராய், யாரோ ஒரு தீயொழுக்கமுடைய தையலெனப் பிழைத்துணர்ந்து, வெடு வெடுப்புடன், 'ஹே! துஷ்டை! அகலச்செல்! யாரென மதித்தனை!' என்று சினந்துரைத்தார். அம்மட்டில் நாவின் கிழத்தி அவருக்கு அப்பிறப்பிலே தவமுதிர்ச்சி இன்மையைத் திருவுளத்தடைத்துக் கோபுரவாயிலை அடைந்தனள்.

அங்கே வரதர் பள்ளிகொண்டிருந்தார். அவர் படுத்திருந்ததற்குக் காரணம், தாம் தம் காதத்குரிய மோகனாங்கியிடம் கோயில் திருப்பணி முடிந்ததும், தம்மை மனைக்கு அழைத்துப்போம்படி உரைத்துச் சென்று ஓரிடத்தில் அயர்ந்து படுத்துக்கொண்டவர், மெய்ம்மறந்து உறங்கிவிட்டதேயாம். மோகனாங்கியோ, தன் பணி முடிந்ததும் தன் காதலரைத் துருவித் துருவிப் பார்த்துக் காணாளாய், வீடுசென்றிருப்பாரென எண்ணி, மனையை அடைந்தனள். கோயிலும் அடைக்கப்பட்டது. கோபுர வாயிலின் மருங்கிலே ஒரு மூலையிலே அயர்ந்து துயின்ற வரதர் நள்ளிரவில் துயிலுணர்ந்து தனது ஆருயிர்க் காதலியை எண்ணியெண்ணி உறக்கம் பிடியாமல் விழித்துக் கொண்டிருந்தனர். அவர், 'அவள் ஒருகால் கோயிலிலேயே தங்கிவிட்டனளோ!' என நினைப்பார்; மற்றொருகால்,

'வீடு சென்று என்னைக் காணாது மீண்டு வருவாளோ!' என எண்ணுவர்; மரமசைந்தால், 'அவள் காலடிச் சத்தம் கேட்கின்றது; அதோ அவள் வருகின்றாள்,' என உன்னுவர்; 'வாராதொழியாள்; அவள் உள்ளம் மலரினும் மெல்லிது அன்றோ? என உள்ளுவர்; 'இன்று மோகனாங்கி வெள்ளாடை பூண்டு வெள்ளைப்பணி பூண்டிருத்தலைக் காணின், கலை மகளும் நாணுவாள்,' என முன்னுவர்; 'இக்கோயிற் பணிக்கர் இவள் கோலத்தையே இறைவிக்கு நாளை நவராத்திரி விழாவிற்குக் கொள்ளலாம்,' எனக் கொள்ளுவர்.

இங்ஙனம் எண்ணமிட்டுக்கொண்டிருப்பார் எதிரே சகல கலாவல்லி, வெளியது உடீஇ, வெண் சாந்தணிந்து, வெண்பூச் சூடி, வெண்பணி பூண்டு தோன்றினாள். உவாமதி தண்ணிய கதிரைச் சொரிந்து, பாற்கடல் பொங்கி ஒழுகுவதுபோல ஒளிர்ந்தது. எங்கும் ஒலியவிந்து அமைதி குடி கொண்டிருந்தது. அவ்வெண்மதியே நிலத்தே இறங்கிப் போந்ததோ என்று எண்ணுமாறு விளங்கும் அம்மையின் திருவுருவைக் கண்டு வரதர் தம்மை மறந்து, சிறிதுங் காலந்தாழ்த்தாது, 'கண்மணி, வந்துவிட்டனையோ? இவ்வளவு நேரம் எங்கிருந்தாய்? என்று கூறத்தொடங்கியவர், சிறிது நேரத்தில் தமக்குள்ளே பொங்கியெழுந்த காதல் வெள்ளத்தைக் கரை செய்து, 'அவளே வந்துவிட்டமை யான் சிறிது மௌனஞ் சாதித்து விளையாட்டு அயரலாம், என்னும் எண்ணத்தால் வாய் வாளாமை மேற்கொண்டிருந்தார். அப்போது வாக்கின் செல்வி அவருக்கு அண்மையிற் சென்று, 'நின் வாயைத் திறக்க,' என்றனள். வரதர் மோகனாங்கிதானே இவ்வண்ணஞ் செப்புகின்றாள்

என்று நினைந்து அவள் வெகுளுமேல் தமது விளையாட்டனைத்தும் பறந்துவிடுமென் உட்கொண்டு, உடனே தமது வாயை அகலத் திறந்தனர். அப்போது கலைமகளார் தமது வாயிலுள்ள தம்பலத்தைத் தம் பலத்தைத் தருவார்போல அவர் வாயில் துப்பினர். அதனால் வரதர் துப்பினர் ஆயினர். உடனே வரதர் தம்பலந் தந்தருளிய தலைவியைத் திரும்பி நோக்க, அத்தெய்வ வடிவம் துண்ணென மறைந்தது. வரதர் நான்கு பக்கங்களிலுஞ் சென்று தேடினர்; அப்பளிக்கு மேனியையும், விளிக்கும் ஓசையையுங் கண்டிலர். அப்பொழுது அவர், 'அந்தோ! ஈண்டுப் போந்தவள் என் அன்னையன்றே! ஆ கெடுவேன்! வலிய வந்து எளியேனை ஆண்ட என்னம்மையை அறியாது போனேனே! பாவியேன் அவள் பவளம் போன்ற தூய திருவடி மலரைத் தலைக்கணியாகச் சூடேனே! அவள் தூய சேவடிகளில் விழுந்து விழுந்து வணங்கேனே! அவள் அழகிய திருமேனிப் பொலிவை நோக்கி நோக்கி உள்ளங் குழையேனே! அவள் அருள் பொழியும் விழிக்கடையில் ஒழுகும் ஆனந்தத் தேனைப் பாவி விழிகளால் பருகி ஆரேனே!' எனப் பலவாறு நெஞ்சம் எரியிடைப்பட்ட இழுதுபோல உருகி, கண்ணீர் தண்மணற் கேணிபோலச் சுரப்ப, உடல் முழுதும் புளகம் போர்ப்ப, அழுதும் தொழுதும் அரற்றியும் தலையன்பிலே நிலைநின்றனர். இது காறும் அறுசுவையமுதம் பாகமுறச் சமைத்த பரிசாரகர் இதுமுதல் செந்தமிழ்த் திருச்சுவை அமுதம் பாகமுறச் சமைக்கும் பாவலரானார். கைவளம் படைத்த வரதர் நாவளம் படைத்த நாவலரானார். நாவிற்கு இனிமையூட்டி உடம்பை வளர்த்த வரதர் செவிக்கினிமை

ஊட்டி உயிரை வளர்ப்பவராயினர். புதுப் புதுப் பாகம் செய்து சோற்றுச்சுவை தெரிப்பார், புதுப் புதுப் பாகம் செய்து பாட்டுச் சுவை தெரிப்பார் ஆயினர். செந்தமிழ் அணங்கு புதுக்கலன் புனையும் நாள் வந்தது. அருந்தமிழ் மொழியில் ஒரு புத்தம் புதுச்சுவை தோன்றிற்று. வரதர் தம்மை மறந்தார்; தாம் ஏதோ பேராற்றல் வாய்ப்பப் பெற்றவராக நினைந்தார். தமக்குப் பாட்டுப்பாடும் வன்மையுண்டானதாக ஓருணர்வு அவருள்ளிருந்து உணர்த்திற்று. தமது நல்வினைப் பயனை எண்ணி இறும்பூதுற்றார். 'நான் இனிக் கவிமாரி பொழிவேன்!' என மகிழ் தூங்கி மெய் யெலாம் உணர்ச்சி வயப்பட்டுத் துள்ளினார்; குதித்தார்; கூத்தாடினார். அப்போது, 'நீ காளமேகம்போலக் கவி பொழிவாயாக,' என்றோர் உணர்ச்சி உண்ணின்றிசைத்தது. 'ஆம்; ஆம்; நான் காளமேகம்போலக் கவிமழை சொரிவேன்; என் பெயர் காளமேகப் புலவன்,' என்று கூறித் தலை தெரியாது களிப்புக் கடலுள் முழுகினார். பொழுது விடிந்தது; திருப்பள்ளியெழுச்சிக்காகக் கோயிலுட் புக்கனர் ஆதிசைவ அந்தணர். திருக்கதவந் திறக்கப்பட்டது; காலைச் சங்கம் முழங்கிற்று; அடியவர் அர அர வென ஒலித்தனர். காளமேகப் புலவரும் எழுந்து திருக்குளத்திற்குச்சென்று, நீராடிப் பூசைமுடித்து, அகிலாண்டேசுவரியின் திருமுன்னர்ச் சென்று தொழுது வணங்கி, மோகனாங்கியின் இல்லம் புகுந்து, நிகழ்ந்தவற்றையெல்லாம் சொல்லிச் சொல்லி உவகைக் கண்ணீர் சொரிந்தனர். மோகனாங்கியும் தன் தலைவரைப் பன்முறை தழுவி, அளவு கடந்த இன்பக் கடலுள் அமிழ்ந்தனள். அவள் பெருமகிழ்ச்சியைக் காண மேலும் மேலும் மகிழ்ந்தனர் காளமேகப் புலவர்.

அன்று முதல் காளமேகப் புலவர் செந்தமிழ்ப் பாக்களைப் பொழிதலையே தொழிலாகக் கொண்டு வாழ்ந்து வருவாராயினர். அவர் பாடும் பாட்டுக்கள் எல்லாம் நகைச் சுவை மலிந்து, இயற்சொற்களால் இயன்று, விநோத முடையனவாய், எளிதிற் பொருள் விளக்குவனவாய்ச் சொன்னயம் பொருந்தியிருந்தன. இதனால் அவர் செய்யுட்கள், கற்றார் கல்லாதார் ஆகிய இரு திறத்தினரையும் மகிழ்வித்தன. அவருக்குப் பேரும் புகழும் பெருகித் திகழ்ந்தன. எத்தகைய கவியையேனும் தட்டுத்தடையின்றிப் பாடிய காரணத்தானே அவர் ஆசு கவி எனப்பட்டனர்; எவரேனும் தகாத செயல் புரிவரேனும், தம்மைச் சிறிது இகழ்வரேனும் பொறாது அவரை வைது வசைக்கவி என வழங்கப்பட்டனர். வசைக்கவி செய்தலில் வல்லவராய் விளங்கியதனால் கற்று வல்ல பெருமக்களும் அவர் தம் பேராற்றலை வியந்து, 'வசைபாடக் காளமேகம்' எனப் புகழ்ந்துரைத்தனர். இங்ஙனம் கீர்த்தி பெற்று வாழ்ந்து வருங்கால், ஒருநாள் புலவர் திருவரங்கம் சென்றனர். அங்கிருந்த சைவர் சிலர் அவரை நோக்கி விளையாட்டாக, 'புலவரேறே, திருவரங்கம் பெரிய கோயிலில் பிள்ளையார் வருவானேன்?' என்றனர். அது கேட்ட கவிவாணர் உடனே,

'தந்தை பிறந்திறவாத் தன்மையினால் தன்மாமன்
அந்தம் பிறந்திறக்கு மாதலால்—முந்துமளி
நாணிக்கு வில்வேளும் மாய்தலால் நன்மாமன்
காணிக்கு வந்திருந்தான் காண்.'

என்றோர் அருங்கவி அறைந்தனர். அது, பிள்ளையார் தம் நன்மாமனாகிய திருமாலின் உரிமையை எய்துதற்குரிய மன்மதன் எரிந்தமையானும், தம் தந்தையார் இறவாத் தன்மையராதலின், அவர் பொருளை அடைதலென்றும்

தமக்கின்மையானும் அந்நன்மாமனார் உரிமையைப் பெறுவான் ஆங்கே போந்திருந்தனரென உலகவியலையொட்டி வேடிக்கையாகப் பொருள்படுதலைக் கேட்டார் அனைவரும், 'இதுபோல் கவி சொல்லுதல் யாவர்க்கும் அருமை அருமை!' என்று வியந்து சென்றனர். அப்போது அடிக்கடி சீரங்கத்து வைணவர்க்குந் திருவானைக்காச் சைவர்க்கும் வைராக்கியத்தால் மதச்சண்டை நேர்தல் உண்டு. அவ்வாறு அவ்விருதிறத்தாரும் ஒரு பகல், 'அரியதிகன்,' 'அரன் அதிகன்,' என வாக்கு வாதம் செய்திருக்கையில் ஆண்டுச் சென்ற காளமேகப் புலவர், அவர்தம்மை நோக்கி,

'சீரங்கத் தார்க்குந் திருவானைக் காவார்க்கும்
போரங்க மாகப் பொருவதேன்—ஓரங்கள்
வேண்டா விதெல்லாம் விகற்பந் தெரியாதோ
ஆண்டாருந் தாசருமா னல்.'

என்று சைவப் பரதேசிகள் ஆண்டிகளெனவும், வைணவப் பரதேசிகள் தாசரெனவும் உலகத்தில் அழைக்கப்படுதலைத் தலைக்கீடாகக் கொண்டு சொல் வழக்காறே பெருமை சிறுமை இனிதுணர்த்தலை உணர்தல் அரிதன்று என்னும் உட்கோள் தோன்ற நன்கு விளக்கினர். அஞ்ஞான்று சீரங்கத்தே வாழும் தமிழறிந்த பாகவதர் ஒருவர் துண்ணெனப் புலவரை விளித்து, "தமிழ்ப்புலமையில் மிக்கோம் எனத்தருக்கித் திரியும் காளமேகமே, 'என்னை இடுக்கடி பாயைச் சுருட்டடி ஏறடி அம்பலத்தே,' என்றமைத்து ஒரு கவி விரைவில் பாடுதிர்," எனச் சமுத்தி கொடுத்தனர். கொடுத்ததும் புலவர் பெருமான்,

'தடக்கட விற்பள்ளி கொள்ளுவம் யாமதைச் சங்கரனார்,
அடற்புலிக் குட்டிக் களித்தன ரால்அது கேட்டுநெஞ்சம்

நடுக்கவ துற்றது கைகா லெழாநளி னத்தியென்னை
இடுக்கடி பாயைச் சுருட்டடி ஏறடி அம்பலத்தே.'

என்றொரு பாட்டிசைத்துப் பாகவதர் திடுக்கிடச் செய்தனர். அவர் வைணவ சமயத்தை விடுத்துச் சைவ சமயத்திற் புகுந்தமையான், வைணவர் அவரை வெறுத்து அவ்வப்போது அவரை இடர்ப்படுத்துவாராயினர். ஆகவே, சிவபரத்துவம் தோன்ற அன்னோர்க்குக் கவி புனைந்து, காட்டுவர்; எனினும், மதத்துவேஷம் வாய்ந்தவரல்லர். அவர் கள்ளங்கபடு இல்லாதவராயுஞ் சிறிது முன்கோபம் உள்ளவராயும் இருந்தமையான், சிலர் அவரை வெறுத்தனர். அதனாலும் அவருக்குப் பல வேலைகளில் இடர்ப்பாடுகள் நிகழ்ந்தன. ஞானவரோதயர் என்னும் புலவர் மதுரைக்குச் சென்றகாலை அவருக்குப் பின்வருமாறு ஒரு கவிதை எழுதியனுப்பினர்.

'முதிரத் தமிழ்தெரி நின்பாடல் தன்னை முறையறிந்தே
எதிரொக்கக் கோப்பதற் கேழெழு பேரில்லை இன்தமிழின்
பதரைத் தெரிந்தெறி கோவில்லை யேறப் பலகை இல்லை
மதுரைக்கு நீசென்ற தெவ்வாறு ஞான வரோதயனே.'

ஒருகால் காளமேகப் புலவர் ஒரு பந்தியில் அமர்ந்து உண்ணும்போது சவையப்ப நாயன் என்பவன் பக்கத்தில் இருந்து உண்டான். அவன் நீண்ட குடுமி உடையவன். அவன் குடுமி இலைச்சோற்றில் அவிழ்ந்து விழுந்தது; அதனை அவன் எண்ணாது உதறினன். உதறியதனால் குடுமியிலேயே பற்றியிருந்த சோற்றுப் பருக்கை கவிவாணர் பரிகலத்தில் தெறிக்க, புலவர் பெருஞ்சினங் கொண்டு, அவனது ஒழுக்கின்மையை எள்ளி,

'சுருக்கவிழ்ந்த முன்குடுமிச் சோழியா, சோற்றுப்
பொருக்கெழுந்த வாயா, புலையா,—திருக்குடந்தை

நாயா நரியாஉன் நாய்முகமுஞ் சேய்வடிவுந்
தாயார்தான் கண்டிலளோ தான்.'

என ஒரு வெண்பாவைச் சொற்றனர்.

பின்னுட் சென்றதும் புலவர், 'திருவாரூர்ப் பிறந்தார்கள் அனைவர்க்கும் அடியேன்' என்று நம்பியாரூரர் ஆகிய சுந்தரமூர்த்தி சுவாமிகளால் சிறப்பித்துக் கூறப்பட்ட திருவாரூரைத் தரிசிக்க விரைந்து சென்றனர். ஆங்குத் தியாகராயப் பெருமான் திருக்கோலத்தைக் கண்டு வணங்குகையில், அம்மையப்பர் திருமார்பிலே வயிரப் பதக்கம் இலங்குதலை அவர் கண்டார். கண்டதும் சதுரம் பட மதுரம் பொருந்திய,

'அன்னவயல் சூழ்ந்திருக்கும் ஆரூரா, நெஞ்சத்தில்
இன்னம் வயிரம் இருப்பதா?—முன்னமொரு
தொண்டன்மக னைக்கொன்றும் சோழன்மக னைக்கொன்றுஞ்
சண்டன்மக னைக்கொன்றுந் தான்.'

என்னும் இனிய செய்யுளை இசைத்தனர். பின்னர்ப் பன்னுள் அங்கே வதிந்து, முப்போதும் வீதி விடங்கனை வழிபட்டு வந்தனர். ஒருநாள் திருக்கோயில் திருமதிலைச் சுற்றி வலம் வரும்போது, 'இதுதான் பரவையார் மாளிகை,' என்று அன்பர் சிலர் கூறக்கேட்டனர். அது செவி புக்கதும் அவ்வம்மையாரின் அன்பின் பெருக்கும், சுந்தரருக்கும் அந்நாச்சியாருக்கும் இருந்த காதற்சிறப்பும், அந்நங்கையார்பால் சிவபரம்பொருளே சுந்தரனார் பொருட்டு ஒரு காலைக்கிருகால் திருவடி நோவச் சென்றமையும் நினைவிற்கு வந்தன. உடனே சிவபெருமான் அடியார்க்கெளியர் என்பதும் மற்று எத்தகைய கடவுளர்க்கும் அரியர் என்பதும் தோன்ற,

'ஆனார் இலையே அயனும் திருமாலும்
கானார் அடிமுடிமுன் காண்பதற்கு—மேனாள்

இரவுதிரு வாரூரில் எந்தைபிரான் சென்ற
பரவைதிரு வாயிற் படி.'

என்றும் வெள்ளைக் கவி விளம்பினர்; பின் அவ்வூரை விட்டு நாகைக்குச் செல்லப் புறப்பட்டனர். அப்போது விகடராமன் என்னும் ஆயக்காரன் ஒருவன் சண்டிக் குதிரை ஒன்றைப் பூட்டி வண்டி ஊர்ந்து செல்வானுயினன். அவ்வண்டிக்கு முற்போந்து குதிரையைப் பற்றிச் சிலர் இழுப்பவும், பின்னே சிலர் வண்டியை உந்தித் தள்ளவும், அப்பரி பரிதபித்தது கண்ட காளமேகப் புலவர் அக்குதிரையை இகழ்ந்து,

'முன்னே கடிவாளம் மூன்றுபேர் தொட்டிழுக்கப்
பின்னே இருந்திரண்டு பேர்தள்ள—எந்நேரம்
வேதம்போம் வாயான் விகடரா மன்குதிரை
மாதம்போம் காத வழி.'

என்றியம்பினர். பின்னொருகால் ஆமூரின்கண் வேங்கட்டன் குதிரையைப் பார்த்து, அது வடிவு, ஓட்டம், பெருமிதம் முதலிய எவ்வாற்றானும் பரிமாவிற்குரிய இலக்கணம் முற்றும் வாய்ந்து சிறந்திருந்ததா லதனைப் புகழ்ந்து,

'ஆறும் பதினறும் ஆமூரில் வேங்கட்டன்
ஏறும் பரிமாவே ஏற்றமா—வேறுமா
வெந்தமா சும்மா வெறுமா களிகிளற
வந்தமா சந்தமா மா.'

என்று விகடமாக ஒரு யாப்பு உரைத்தனர். பின்பு அவர் நாகையின்கண் காத்தான் சத்திரத்திலே உண்டு இளைப்பாற வந்தனர். அங்கே பரிசாரகப் பிராமணன் ஒருவன் அவருக்கு அன்னம் விரைவில் தருவதாகக் கூறி, நெடுநேரம் பசிப்பிணியால் பெரிதும் வருந்துமாறு விடுத்தனன். அப்பொழுது,

‘கத்துகடல் சூழ்நாகைக் காத்தான்தன் சத்திரத்தில்
அத்தமிக்கும் போதில் அரிசிவரும்—குற்றி
உலையிலிட ஊரடங்கும் ஓரகப்பை அன்னம்
இலையிலிட வெள்ளி யெழும்’

என்று ஒரு வசைக்கவி இசைத்தனர். பின்னர் அவர், அந்நகரத்திற் சிறிது காலம் தங்கிக் காரோணரைத் தரிசித்து மீள்கையில், தாசி ஒருத்தி பாடினாள். அவள் குரல் இனிமையின்றி இன்னாததாய் இருப்பக் கவிஞர்,

‘வாழ்த்து திருநாகை வாகான தேவடியாள்
பாழ்த்த குரலெடுத்துப் பாடினாள்—நேற்றுக்
கழுதைகெட்ட வண்ணான்கண் டேன்கண்டேன் என்று
பழுதைஎடுத் தோடிவந்தான் பார்.’

என்று பாடினர். மற்றொரு நாள் நெடுந்தூரஞ் சென்று பசியாலும், வழி நடந்த வருத்தத்தாலும் இளைத்துக் களைத்துப் போய் ஒரு வீதியை அடைய அங்கே சிறு பிள்ளைகள் பாக்கு விளையாட்டை ஆடிக்கொண்டிருந்தனர். அவர்களைப் பார்த்து அருந்தமிழ் வாணர் கண் பஞ்சடைந்து, மெய் சோர்ந்து, நாவுலர்ந்து, வாய் சோர, ‘சோறு எங்கே விக்கும்?’ என்று வினவினர். அவர்கள், ‘கற்றோர் வாழ் நாகை’க் காளைகளாதலால், புலவர் ‘விக்கும்’ என்று கூறியதை உட்கொண்டு, ‘சோறு தொண்டைக் குழியில் விக்கும்,’ என்றுரைத்துப் பெருநகை செய்தனர். புலவரோ, முன்கோபம் உடையவர்; அதனோடு பசியோ, காதடைக்கிறது; அவருக்குக் கோபம் பொங்கி எழுந்தது. உடனே அவர், ‘இவர்களை அறம்பாடித் தொலைத்து விடுவேன்!’ என்றெண்ணி, ஏடு இன்மையால் ஒரு சுவரை அடைந்து, தமது கைக்குக் கிடைத்த கரித் துண்டு ஒன்றை எடுத்து,

‘பாக்குத் தறித்து விளையாடும் பாலகர்க்கு’

என்றோர் அடியை எழுதினர்; அதன்மேல் பாட்டு நடக்கவில்லை; பசியால் ஆசுகவித் திறமும் அகலப் பறந்தது கண்டு, அவர், 'நன்று, நான் சென்று சோறுண்டு மீண்டு கவிதையை முடிப்பேன்,' என்றுன்னி, விடுதி நாடி விரைந்தனர். இறைவன் திருவருளால் இனிமையான விடுதி அவருக்குக் கிடைத்தது. அங்கே சைவ வேதியர் ஒருவர் அவர் பசியையறிந்து பரிகலம் முதலியன திருத்திப் பலவகை உபசாரங்களுடன் அறுசுவையுண்டி அமர்ந்து ஊட்டினர். அவர் முனை முறியாது பதமுற வெந்த சோறும், தீம்பருப்பும், புத்துருக்கு நெய்யும், காயம் கலந்து கடைந்த தீம்புளிக் கீரையும், கார்ப்புத் துவையலும், இன்சுவைக் குழம்பும், கடலை நீரில் பாக முறச் சமைத்த மிளகு நீரும், வாழை இளம்பிஞ்சு, கத்தரி, முருங்கை முதலியவற்றுற் பலவகைப் பாகமுறச் சமைத்த கறியும் கனிவுடன் படைக்கப் புலவர் உண்டு தேக்கெறிந்தார்.

கவிராயர் சுவரின் அருகே சென்றதையும் ஏதோ எழுதியதையும் அச்சிறுவர்களுள் ஒருவன் கூர்ந்து பார்த்துக்கொண்டிருந்தான். அவன் அவர் சென்றதும் சுவருக்கு அண்மையிற்சென்று அவண் தீட்டப்பட்டிருக்கும் பாவடியைக் கண்ணுற்றுப் பலர்க்கும் காட்டினன். அவர்கள் அனைவரும் அதனைப் பார்த்து, 'அடடா! அவன் புலவன் போலும்! அவனுக்குப் பாட்டு ஓரடிக்குமேல் ஓடவில்லை; நம்மேல் அறம் பாடத் தொடங்கினன். நாம் சொன்னது அவனைச் சுட்டது போலும்! ஆயினும், நாம் அப்பாட்டை முடிப்போம்; வாருங்கள்,' என்று மொழிந்து, அதனோடு ஓரடியை மட்டும் சேர்த்தெழுதிப் பின் வருமாறு விட்டு வைத்திருந்தனர்,

'பாக்குத் தறித்து விளையாடும் பாலகர்க்கு
நாக்குத் தமிழ் உரைக்கும் நன்னைகை'

புலவர், உண்ட இளைப்புத் தீரப் படுத்துச் சிறுதுயில் கொண்டார். சிறிது நேரம் தாழ்ந்ததும் அவர், பிள்ளைகளைக் கண்ட இடம் சென்று, சுவரிலுள்ள பாட்டைப் பார்த்தார்: அப்பாட்டு மற்றோர் அடி வளர்ந்திருத்தலைக் கண்டு, அவ்வடியின் பொருளைச் சிந்தித்தனர். அஃது உண்மையேயென அவருக்குப் புலப்படலும் வெகுளி தணிய வாளா சென்றனர்.

பின்னொருகால் புலவர் பெருமான், கோண்டத்தூர் என்னும் ஊருக்குச் சென்று, ஆங்கு அன்போடு குழைத்து இனியவமுதூட்டிய அருமைப் பெண்மணியையும், அவள் அளித்த பூசுணைக் காய்க்கறியையும் வியந்து,

'கண்டக்கால் கிட்டுங் கயிலாயங் கைக்கொண்டுள்
கொண்டக்கால் மோட்சம் கொடுக்குமே-கொண்டத்தூர்த்
தண்டைக்கால் அம்மை சமைத்துவைத்த பூசுணைக்காய்
அண்டர்க்காம் ஈசருக்கும் ஆம்.'

என்று ஒரு வெள்ளைக் கவிதை விளம்பினர்.

கவிஞர் மற்றொரு முறை ஆழூர் என்னும் அரும் பதியை அடைந்து, அங்கே செல்வத்தாற் சிறந்து திகழ்ந்த வேளாண் குலத்தலைவரைக் கண்டனர். அவர் தமிழ் மொழியைத் தமது குல தெய்வமாக வழிபடும் கொள்கையினர்; செந்தமிழ் வாணர் எவரேனும், அவர்க்கு மெய்யடிமை பூண்டு ஒழுகுபவர். அத்தகைய பெரியார் ஆசு கவிச் சிங்கமாகிய காளமேகப் புலவரை எங்ஙனம் ஏற்றுக் கொள்வார் என்பது கூறலும் வேண்டுமோ! அவர் இவரை எதிர்கொண்டழைத்து, முகமன் கூறி, வேண்டும் குறை முடித்து அனுப்பினர். அப்போது புலவர் அவர் அருமையைச் சிறப்பித்து,

'உள்ளங்கால் வெள்ளெலும்பு தோன்ற ஒருகோடி
வெள்ளங்கா லந்திரிந்து விட்டோமே—உள்ளபடி
ஆழூர் முதலி அமரர்கோன் இங்கிருக்கப்
போழூர் அறியாமற் போய்.'

என்று ஒரு செய்யுள் செப்பினர்.

வேறொரு சமயம் புலவர், கயத்தாறு என்னும் திருமால் திருப்பதியை அடைந்தனர். அப்போது திருக்கோயிலின்கண் திருவிழா நடைபெற்று வந்தது. அன்று கருடவாகன சேவைக்காகச் சுவாமி அலங்காரம் செய்யப்பட்டு மிகச் சிறப்பாக பெரிய திருவடியின்மேல் எழுந்தருளும் வேளையில் சுவாமியைத் தூக்கிச் செல்லும் ஆட்கள் குறைபட்டனர். அவ்வேளை கோயிலதிகாரி சுற்று முற்றும் பார்க்கையில் காளமேகத்தைக் கண்டான். காளமேகமோ, பருத்த உடலும், மாசுண்ட ஆடையும் வாய்ந்து காணப்பட்டார். கோயிலதிகாரி இவரைப் புலவரென மதியாது, சுவாமி தூக்கும் ஓர் ஆளாக எண்ணி இவரைத் தண்டைத் தோளிலே தூக்கக் கூறினன். புலவரோ, இது யாதோ திருவருள் செய்கை என்றெண்ணி வாளாது தண்டைத் தூக்கிச் சென்றனர். பின்பு சுவாமி திரு வீதி வலம் வந்து ஆலயத்தை அடைதலும், புலவர் ஏதேனும் பிரசாதம் கிடைக்கும் என்று எதிர் பார்த்திருந்தனர். யாதும் கிடைத்திலது. எல்லாரும் பிரசாதத்தை விழிப்பாய் இருந்து முன்னரே பங்கிட்டுக்கொண்டனர். 'சும்மா இருந்த சுவாமிக்குச் சோற்றுப்பட்டை இரண்டு,' என்றவாறு ஒரு வேலையும் செய்யாதவர்கள் தளிகையில் முக்காற் பங்கைக் கவளீகரிக்க, முதுகிலுள்ள என்பொடியச் சுவாமியைச் சுமந்த பாவலர் பசியால் வருந்த நேர்ந்தது. வேளையோ, பதினறு நாழிகைக்கு மேலாயிற்று. இனிச் செல்லுமிடமும் இல்லை. சுவாமியைச் சுமந்ததே

அன்றிக் கோயில் நம்பியையும் சுமக்க நேர்ந்ததே! என்றெண்ணிக் கவிஞர் வயிறெரிந்தார். அவருக்குக் கோபத்தீ கொழுந்துவிட்டெழுந்தது. அப்பொழுது அவர் பெருமானை முன்னிலைப்படுத்தி,

'பாளைமணங் கமழ்கின்ற கயத்தாற்றுப் பெருமானே,
பழிகா ராகேள் :
வேளையென்றால் இவ்வேளை பதினாறு நாழிகைக்கு
மேலா யிற்றென்
தோளைமுறித் ததுமின்றி நம்பியா னையுங்கூடச்
சுமக்கச் செய்தாய்
நாளை இனி யார்சுமப்பார் எந்நாளும் உன்கோயில்
நாசந் தானே.'

என்றொரு வசைக்கவி வகுத்தனர்.

சிறிது காலஞ் சென்றபின் கவிஞர் திருப்பனந்தாளுக்குச் சிவதரிசனஞ் செய்யச் சென்றனர். அக்காலம் மழை மாறிக் கருப்புக் காலமாய் இருந்தது. உண்ண உணவும் பருகத் தண்ணீரும் இன்றி மாந்தர் வாடினர். பிறர் கையையே என்றும் எதிர் நோக்கி நிற்கும் புலவர் நிலை பெரிதும் இரங்கற் பாலதா யிருந்தது. அப்பொழுது அத் திருப்பதியில் வாழும் பட்டர் ஒருவர் இவரை வரவேற்று இன்னுரை வழங்கித் தண்ணீரும் சோறும் உபசரித்திட்டனர். தமக்கு அன்னமிட்டமையை நயந்து வியந்து பாவாணர்,

'விண்ணீரும் வற்றிப் புவிநீரும் வற்றி விரும்பியுணத்
தண்ணீரும் வற்றிப் புலவோர் தவிக்கின்ற காலத்திலே
உண்ணீர்உண் ணீர்என் றுபசாரஞ் சொல்லி உபசரித்துத்
தண்ணீருஞ் சோறுந் தருவான் திருப்பனந் தாட்பட்டனே.'

என்று கட்டளைக் கலித்துறை ஒன்று யாத்தனர்.

அவ்வாறு ஆசுகவிராயர் ஓரிடத்தே நிலையாய்த் தங்குதல் இன்றிப் பலவிடங்களுக்குஞ் சென்று ஆங்காங்குத்

தம் மனம் சென்றவாறு செய்யுள் பாடிச் சிலரை வைதும், சிலரை வாழ்த்தியும் வருவராயினர். அப்பொழுது புலவர் காதற்கிழத்தியாகிய மோகனாங்கி தனக்கு விலையுயர்ந்த முத்துக்கள் வேண்டுமென்றும். அத்தகையன மதுரைமா நகரிலே எளிதிற்கிடைக்குமென்றும், அதனால் இவர் அந் நகருக்குச் சென்று முத்து வாங்கி வருதல் வேண்டு மென்றும் இவருக்குத் தெரிவித்தாள். அன்றியும், புலவருக்கு மதுரைக்குத் தாம் சென்று அங்குச் செங்கோல் செலுத்துந் திருமலை ராயனைக் காணவேண்டுமென்றும், அங்குச் செருக்கித் திரியும் அறுபத்துநான்கு தண்டிகைப் புலவருடன் வாதுபுரிய வேண்டுமென்றும் பன்னெடு நாட்களாக விருப்பம் உண்டு. உடனே செந்தமிழ் வளநாடாகிய பாண்டி நாட்டை நோக்கிப் புறப்பட்டு, இடையிலே உள்ள திருப்பதிகளைத் தரிசித்துக்கொண்டு, மதுரையம் பதியை அடைந்தனர். அடைந்தவர், ஆவண வீதியில் ஒரு கூல வாணிகன் கடையில் அமர்ந்திருந்தனர். அவ்வேளையில் திருமலைராயன் சமஸ்தான வித்துவான்களுக்குள் தலைவரான அதிமதுர கவிராயர் என்பவர் தண்டிகையின் மீது சென்றுகொண்டிருந்தனர். அவர் பல்லக்கின் முன்பு கட்டியங் கூறுவோர் சிலர், 'அதிமதுரக் கவிராயர் வருகிறார், பராக்கு-பராக்கு,' என்று எச்சரிக்கை செய்த வண்ணஞ் சென்றனர். அவ்வீதியிலுள்ளார் அனைவரும் அவரைக் கண்டவுடன் எழுந்து, கைகுவித்து அவருக்கு வணக்கஞ் செய்தனர். அது கண்ட காளமேகப் புலவர் அக்கவிராயர் செருக்கை அடக்க எண்ணிக் கட்டியங் கூறுவோனைப் பார்த்து, உரத்த குரலால்,

'அதிமதுரம் என்றே அகிலம் அறியத்
துதிமதுர மாயெடுத்துச் சொல்லும்—புதுமையென்ன

*காட்டுச் சரக்குலகிற் காரமில்லாச்சரக்குக்*
*கூட்டுச் சரக்கதனைக் கூறு.'*

என்றொரு கவி கூறி, அதிலே, அதிமதுரம் என்பது குன்றி வேருக்குப் பெயராகும் என்று எள்ளி நகையாடினர். அன்றியும் யாவரும் எழுந்து வணக்கஞ் செய்தபொழுதும் இவர் தம் நிலையை விட்டு அசைந்திலர். இதனைக் கண்ட அதிமதுர கவி வெகுண்டு, 'அவ்வாறு செய்தவர் யார்?' என்பதை அறியும்பொருட்டுத் தம் மாணவன் ஒருவனை விளித்து, "நீ ஆவண வீதி சென்று வெளியூரான் ஒருவன் அமர்ந்துள்ள கூலக் கடையிலே இருக்கும் வணிகரை, 'மேகம், பசு, இரத்தினம், வேண்டுமென்று கேள். அங்ஙனம் கேட்கும்போது அப்புதியவன் செயலையெல்லாம் உற்று நோக்கி அவைகளை என்னிடம் வந்து இயம்பு,' என்றனர். அவ்வாறே அம்மாணவன் அந்தக் கடையினிலுள்ள வணிகரைக்கேட்டான்: வணிகர் விழித்தனர். அது கண்ட புலவர் இகழ்ச்சி நகைபுரிந்து, வணிகரைப் பார்த்து, ஐயா வணிகரே, இது நம்மைச் சோதிப்பதாகும்; கேட்கும் பொருள் வேறொன்றுமன்று; காராமணியே ஆகும். ஆகையால், அதனைத் தந்தனுப்புக,' என்றனர். வணிகர், புலவரை அஃதெப்படியெனக் கேட்க, அவர், 'மேகம் என்பதற்குக் கார் என்று பெயர் உண்டு; பசு என்பதன் மற்றொரு பெயர் ஆ; இவ்விரண்டையும் கூட்டிப்பார்க்கக் காரா என்றாகும்; இதனோடு இரத்தினத்தின் பரியாயப் பெயராகிய மணியைச் சேர்க்க காராமணி என்றாகும்,' என்றனர். வணிகர், கேட்டபொருள் இன்னது தான் எனத் தெளிந்து, அவ்வாறே அந்த மாணவனிடம் காராமணி கொடுத்தனுப்பினர். மாணவன் இதனைக் கொண்டுபோய் அதிமதுர கவியிடம் ஈந்து, நிகழ்ந்தவற்றைக் கூறினான்.

அதிமதுரகவி மீண்டும் மற்றொருவனைக் காளமேகப் புலவரிடம் விடுத்து, அவரை இன்னாரென அறிந்து வருமாறு விடுத்தனர். அவன் புலவரைக்கண்டு அவர் பெயர் முதலியவற்றைக் கேட்டான். அப்போது காளமேகப் புலவர் பின் வரும் பாட்டை எழுதி அவன்பால் தந்தனர் :

'தூதைந்து நாழிகையில் ஆறுநா ழிகைதனிற்
சொற்சந்த மாலைசொல்லத்
துகளிலா அந்தாதி எழுநா ழிகைதனிற்
றொகைபட விரித்துரைக்கப்
பாதஞ்செய் மடல்கோவை பத்துநா ழிகைதனிற்
பரணியொரு நாள்முழுதுமே
பாரகா வியமெலாம் ஓரிரு தினத்திலே
பகரக்கொ டிக்கட்டினேன் ;
சீதஞ்செ யுந்திங்கள் மரபினான் நீடுபுகழ்
செய்யதிரு மலைராயன்முன்
சீறுமா றாகவே தாறுமா றுகள்சொல்
திருட்டுக்க விப்புலவரைக்
காதங் கறுத்துச் செருப்பிட் டடித்துக்
கதுப்பிற் புடைத்துவெற்றிக்
கல்லணையி னொடுகொடிய கடிவாளம் இட்டேறு
கவிகாள மேகம்நானே.'

அவன் சென்று அதிமதுர கவியினிடம் அதனைக் காட்டினான். அக்கவியைக் கண்ட அதிமதுரகவி வெகுளி பொங்கினவராய், 'நல்லது! இவன் ஆணவத்துக்கு ஓர் அளவே இல்லை. எங்ஙனமேனும் இவன் அரசனைக் காண வருவான் ; அப்பொழுது இவன் கொட்டத்தை அடக்க வேண்டும்,' என்று எண்ணி, அற்றம் நோக்கி இருந்தார்.

காளமேகப் புலவர் திருமலைராயனைக் காண்பதற்கு அவன் சமஸ்தானத்துக்குச் சென்றனர்.

அங்கே இருந்த புலவர் அனைவரும் இவரைப் பொருட்படுத்தாமல் புறக்கணித்திருந்தனர். அரசனும் சும்மாவிருந்தான். அப்போது காளமேகப் புலவர் தாம் கொணர்ந்து வந்த எலுமிச்சம்பழத்தை அரசன் திரு முன்னர் நீட்டி அவனை வாழ்த்தினர். அப்பொழுது அரை யன் அப்பழத்தை வாங்கத் தன் பொற்கரம் நீட்டினுன். அது கண்ட புலவர்கள் சிறிது ஒதுங்கினூர்கள். ஒதுங்கவே, காளமேகம் வேந்தனைக் குறுகிக் கனியை அவனிடம் கொடுத்தனர். மன்னனும் பெற்றுக்கொண்டான். பின் னரும் காளமேகம் அமர இடம் பெறுமையினல் மனம் நொந்து, கலை மகளார் கமலச் சேவடியைக் கருத்திருத்தி, முப்பது வெண்பாக்கள் பாடிக் கனிந்துருகுவாராயினர். உடனே அரசன் சிங்காதனம் வளரப் புலவர் அவ்விருக் கையின் மீது நன்கு அமர்ந்து,

'வெள்ளைக் கலையுடுத்தி வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்தில் வீற்றிருப்பாள்—வெள்ளை
அரியா சனத்தில் அரசரோ டென்னைச்
சரியா சனம்வைத்த தாய்.'

என்று பாடித் தமக்கு இன்னருள் புரிந்த இறைவி இன்னு ளென இசைத்து, ஆங்கு அச்சமும் வியப்பும் குடிகொண் டிருந்த புலவரை நோக்கி, 'ஐயன்மீர், நீவிர் யாவர்?' என்று வினவினர். அவர்கள், அதற்கு உத்தரமாக, 'நாங்கள் கவி ராயர்கள்,' என்றூர்கள். அதுகேட்ட காளமேகம் வேருேர் குறிப்பை உட்கொண்டு நகைத்து, ஓ! ஓ! அப்படியா? நீங்கள் கவிராயர்களா?

'வாலெங்கே நீண்ட வயிறெங்கே முன்னிரண்டு
காலெங்கே உட்குழிந்த கண்ணெங்கே—சாலப்

புவிராயர் போற்றும் புலவீர்காள் நீவிர்
கவிராயர் என்றிருந்தக் கால்.'

என்று பாடி இகழ்ந்தனர். அது கேட்ட அதிமதுர கவி ராயர் காளமேகத்தைப் பார்த்து, 'நீர் காளமேகம் ஆனால் பொழிய வேண்டுமே!' என்று இகழ்ச்சிக் குறிப்பாய் வினவினர். உடனே புலவர், 'ஆம்; பொழியத்தான் இங்கு வந்திருக்கின்றோம்,' என்றுரைத்து,

'கழியுந் தியகடல் உப்பென்று நன்னாற் கடலின்மொண்டு
வழியும் பொதிய வரையினிற் கால்வைத்து வண்கவிதை
மொழியும் புலவர் மனத்தே இடித்து முழங்கிமின்னிப்
பொழியும் படிக்குக் கவிகாள மேகம் புறப்பட்டதே.'

என்றோர் அருங்கவியுஞ் சொற்றனர். இப்பாட்டைச் செவியுற்ற அதிமதுரகவி, 'இனிச் சும்மா இருந்தால் இவன் ஏறுவான்; ஆதலால், நாம் நமது பாவன்மையைக் காட்டி இவனது ஆணவத்தை அடக்கவேண்டும்,' என எண்ணிக் காளமேகத்தைப் பார்த்து,

'மூச்சு விடுமுன்னே முந்நூறும் நானூறும்
ஆச்சென்றால் ஐந்நூறும் ஆகாதோ !—பேச்சென்ன
வெள்ளைக் கவிகாள மேகமே உன்னுடைய
கள்ளக் கவிக்கடையைக் கட்டு.'

என்று விரைவாக ஒரு வெண்பாக் கூறினர். அவர் அங்ஙனம் கூறி வாய் மூடுமுன் புலவர், 'இவ்வளவுதானா! நான் மலைத்தேன்!' என்றுரைத்து,

"இம்மென்னும் முன்னே எழுநூறும் எண்ணூறும்
அம்மென்றால் ஆயிரம்பாட் டாகாதா ?—சும்மா
இருந்தால் இருப்பேன் எழுந்தேனே யானால்
பெருங்காள மேகம் பிளாய் !"

என்று தமது பாவன்மையை மீதுயர்த்தி, அதிமதுரகவி கவிபுலகத்தில் சின்னஞ் சிறு பிள்ளையே என்பது தோன்ற ஒரு பாட்டைக் கூறினர். பிறகு ஆங்கிருந்த புலவர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு சமுத்தி கொடுத்துக் காளமேகப் புலவரைத் தேர்ச்சி செய்யலாயினர். ஒருவர், 'திருமலை ராயன் வாளைச் சிறப்பித்து ஒரு செய்யுள் கூறுக,' என்னலும் புலவர்,

'செற்றலரை வென்ற திருமலைரா யன்கரத்தில்
வெற்றிபுரி யும்வாளே வீரவாள்—மற்றையவாள்
போவாள் வருவாள் புகுவாள் புறப்படுவாள்
ஆவாள் இவாள்அவாள் ஆம்.'

என்று பாடினர். மற்றொருவர், 'அரசன் கீர்த்தியைப் புகழ்க,' என்று கேட்க, கவிஞர்,

'வீமனென வலிமிகுத்த திருமலைரா யன்கீர்த்தி
வெள்ளம் பொங்கத்
தாமரையின் அயன்ஓடிச் சத்தியலோ கம்புகுந்தான்;
சங்க பாணி
பூமிதொட்டு வானமட்டும் வளர்ந்துநின்றான், சிவன்கைலைப்
பொருப்பில் ஏறிச்
சோமனையுந் தலைக்கணிந்து வடவரைத்தண் டால்ஆழஞ்
சோதித் தானே.'

என்று பாடினர். பின்பொருவர், அவரை நோக்கிக் 'கங்கை குடத்திலே அடங்கப் பாடுக,' எனப் புலவர்,

'விண்ணுக் கடங்காமல் வெற்புக் கடங்காமல்
மண்ணுக் கடங்காமல் வந்தாலும்—பெண்ணை
இடத்திலே வைத்த இறைவர் சடாம
குடத்திலே கங்கையடங் கும்.'

என்று பாடினர்.

இவ்வாறு புலவர், கண்டிகைப் புலவர் அறுபத்து நால்வரும் கொடுத்த சமுத்திகள் பலவற்றிற்கும் மிக விரைவிலே உத்தரஞ் சொல்லித் தமது ஆசு கவி வன்மையை நிலைநாட்டினர். அப்போது இவர் பாடிய பாடல்களுள் பல, சிலேடை அணி பொருந்தியன. அவற்றுள் இரண்டொன்று இங்கே காட்டப்படும்.

### பாம்பும் எலுமிச்சம்பழமும்

'பெரியவிட மேசேரும் பித்தர்முடி யேறும்
அரியுண்ணும் உப்புமே லாடும்—எரிகுணமாம்
தேம்பொழியுஞ் சோலைத் திருமலைரா யன்வரையில்
பாம்புமெலு மிச்சம் பழம்.'

### விநாயகர்; முருகன், சிவன் ஆகிய மூவருக்கும்

'சென்னிமுக மாறுளதாற் சேர்கரமுன் னாலுகையால்
இந்நிலத்திற் கோடொன் றிருக்கையால்—மன்னுகுளக்
கண்ணுறுத லானுங் கணபதியுஞ் செவ்வேளும்
எண்ணரனும் நேராவ ரே.'

பின்னர்ப் புலவரும் திருமலைராயனும் காளமேகப் புலவரைக் கொண்டாடினர். அரசனும் இவருக்குப் பல வரிசைகளையும், அளவிறந்த முத்துக்களையும் வழங்கினான். அப்போது பாவலர் மனமகிழ் பூத்துத் திருமலைராயனைப் பின்வருஞ் செய்யுளால் புகழ்ந்து கொண்டாடினர்.

'இந்திரன் கலையாய் என்மருங் கிருந்தான்
அக்கினி உதரம்விட் டகலான்
யமனெனைக் கருதான் அரனெனக் கருதி
நிருதிவந் தென்னையென் செய்வான்?
அந்தமாம் வருணன் இருகண்விட் டகலான்
அகத்தினில் மக்களும் யானும்
அநிலம தாகும் அமுதினைக் கொள்வோம்
ஆரெதிர் எமக்குளார் உலகிற்

சந்ததம் இந்த வரிசையைப் பெற்றுத்
தரித்திர ராசனை வணங்கித்
தலைசெயும் எம்மை நிலைசெய்சற் கீர்த்திச்
சாளுவ கோப்பையன் உதவும்
மந்தரப் புயத்தான் திருமலை ராயன்
மகிழ்வொரு விலையிலா வன்னோன்
வாக்கினாற் குபேரன் ஆக்கினான் அவனே
மாசிலீ சானபூ பதியே.'

பின்னர்க் கவிவாணர் மதுரையை விட்டகன்று தமது இருப்பிடமாகிய திருவானைக்காவை அடைந்து மோகனாங்கிக்குத் தாம் கொண்டுவந்த முத்துக்களை அளித்து, இனிதிருந்தனர். இவ்வாறு வாழ்ந்துவருங்கால் ஒரு நாள் திருவானைக்காவின் வீதியிலே புலவர் சென்றுகொண்டிருக்கையில் குப்பையைப் பெருக்கிக்கொண்டிருக்கும் செருக்குடைய மாது ஒருத்தி அவரைப் பார்த்து, 'காளமேகம் என்னும் கட்டை விளக்குமாறு நீதானா?' என்றாள். அதற்கவர், 'பெருக்கப் பெருக்கத் தெரியும்,' என்றனர். அவ்வாறு அவர் சொன்னதனால் அவள் எவ்வளவு நேரம் பெருக்கினாலும் குப்பை அகலாது மீண்டு மீண்டு வருதலைக் கண்டு கையோய்ந்தாள். பிறகு அவள் அஞ்சி நடுநடுங்கிப் புலவர் அகஞ் சென்று, அவரைத் தான் அறியாமையால் செய்த பிழையை மன்னித்தருளுமாறு வேண்டிக்கொண்டனள். அவரும் இரங்கி அவ்வாறே மன்னிக்கக் குப்பையும் நீங்கிற்று.

பின் சிறிது காலஞ் சென்றதும், காளமேகப் புலவர் காஞ்சிமா நகரஞ் செல்ல வழிக்கொண்டனர். கொண்டவர் இடையிலே தில்லையிலே தங்கித் திருச்சிற்றம்பலத்தை வணங்கிச் சில நாள் அங்கே வதிந்தனர். அங்கே அம்பலவாணனைக் குறித்து அவர் பல செட்யுட்களைப் பாடி இன்புற்றனர்.

'தாண்டி ஒருத்தி தலையின்மேல் ஏறுளோ
பூண்டசெருப் பால்ஒருவன் போடானோ—மீண்டொருவன்
வையானோ வில்முறிய மாட்டானோ தென்புலியூர்
ஐயாநீ ஏழையா னால்.

பொன்னஞ் சடையறுகம் புல்லுக்கும் பூம்புனற்கும்
தன்னெஞ் சுவகையுறத் தாவுமே—அன்னங்கள்
செய்க்கமலத் துற்றாலவுந் தில்லை நடராசன்
கைக்கமலத் துற்றமான் கன்று.'

இங்ஙனம் இவர் வழியிலேயுள்ள திருப்பதிகளையெல்லாம் தரிசித்துக்கொண்டும், தொண்டை நாட்டின் வளத்தை உற்று நோக்கியும் அவ்வழகுகளிலே ஈடுபட்டுஞ் சென்றார். பின் இவர் கச்சி நகரை அடைந்த போது, வரதராஜப் பெருமாள் கருட வாகனத்தின்மேல் திருவீதியில் வருதலைக்கண்டு, அவர்மேல் புகழாப் புகழ்ச்சியாக,

'பெருமாளும் நல்ல பெருமாள் அவர்தம்
திருநாளும் நல்ல திருநாள்—பெருமாள்
இருந்த இடத்தில் இராமையினால் ஐயோ !
பருந்தெடுத்துச் செல்கிறதே பார்.'

என்று பாடினர். பின்பு ஏகாம்பரநாதர் பிக்ஷாடன மூர்த்தியாய்த் திருவீதியில் எழுந்தருள்வதைப் பார்த்த கவிவாணர்,

'நச்சரவம் பூண்டதில்லை நாதரே தேவரீர்
பிச்சையெடுத் துண்ணப் புறப்பட்டும்—உச்சிதமாம்
காளமேன் குஞ்சரமேன் கார்க்கடல்போ லேமுழங்கும்
மேளமேன் ராசாங்க மேன்?'

என்று பாடித் துதித்தனர். சின்னாட் சென்றபின்னர்ப் புலவர் பெருமான் திருவேகம்பத்தை நீங்கித் தமது பதியை அடைந்து, பல்லாண்டு இன்புற்று வாழ்ந்திருந்து சிவபெரு

மான் திருவடி நீழலில் இரண்டறக் கலந்து நித்தியானந்தப் பெருவாழ்விலே திளைத்தார்.

கம்பரைக் குறித்தது

'நாரா யணனை நராயணனென் றேகம்பன்
ஓராமற் சொன்ன உறுதியால்—நேராக
வாரென்றால் வர்என்பேன் வாளென்றால் வள்ளென்பேன்
நாரென்றால் நர்என்பேன் நான்.'

திம்மியென்னுங் கணிகையை இகழ்ந்தது

'எமிரா வோரி என்பாள் எந்துண்டி வஸ்தி யென்பாள்
தாமிராச் சொன்ன தெல்லாந் தலைகடை தெரிந்த தில்லை
போமிராச் சூழுஞ் சோலை பொருகொண்டைத் திம்மிகையில்
நாமிராப் பட்ட பாடு நமன்கையிற் பாடு தானே.'

திருவொற்றியூர்த் தியாகர்மீது பாடியது

'ஆடுந் தியாகரே ஆட்டமேன் தானுமக்கு
வீடுஞ் சமுசாரம் மேலிட்டுக்—கூடிச்
செருக்கிவிளை யாடச் சிறுவர் இரண் டாச்சே
இருக்குமூர் ஒற்றியாச் சே.'

முருகன் வள்ளியை மணந்ததைக் குறித்தது

'மருவிருக்கும் வேளூரின் வயித்திமகன் குறமகளை
மணந்தா னென்றே
உருகியரன் நஞ்சுண்டான்; உமையவளும் தவம்புரிந்தாள்;
உயர்மால் மேனி
கருகிமுகம் மண்தின்றான்; கமலன்முகம் நாலானான்;
கடவு ளோர்கள்
இருவிழியும் இமையாமல் இரவுபகல் உறங்காமல்
இருக்கின் றாரே.'

### எண் அமைத்துப் பாடியது

'முக்காலுக் கேகாமுன் முன்னரையில் வீழாமுன்
அக்கா லரைக்கால்கண் டஞ்சாமுன்—விக்கி
இருமாமுன் மாகாணிக் கேகாமுன் கச்சி
ஒருமாவின் கீழரையின் றோது.'

### நஞ்சுண்டதைக் குறித்தது

'கல்லா லடித்ததற்கோ காலால் உதைத்ததற்கோ
வில்லால் அடித்ததற்கோ வெட்கினீர்—சொல்வீரால்
மஞ்சுதனைச் சூழும் மதிலானைக் காவாரே
நஞ்சுதனைத் தின்றதென்முன் றுள்?'

### குலம் அமைத்துப் பாடியது

'வாணியன் பாடட வண்ணான் சுமக்க வடுகன் செட்டி
சேணியன் போற்றக் கடற்பள்ளி முன்னெழுத் தீங்கரும்பைக்
கோணியன் வாழ்த்தக் குருமான் துகிறனைக் கொண்டணிந்த
வேணிய ஞனவன் தட்டான் புறப்படல் வேடிக்கையே.'

### வைத்தியநாதரைப் பற்றியது

'வாதக்கா லாந்தமக்கு மைத்துனர்க்கு நீரிழிவாம்
போதப் பெருவயிறும் புத்திரருக்—கோதக்கேள் :
வந்தவினை தீர்க்க வகையறியார் வேளூரார்
எந்தவினை தீர்ப்பா ரிவர் ?'

### கடை மொழி மாற்று

'மாடுதின்பான் பார்ப்பான் மறையோது வான்குயவன்
கூடிமிக மண்பிசைவான் கொல்லனே—தேடி
இரும்படிப்பான் செக்கான்எண் ணெய்விற்பான் வண்ணான்
பரும்புடவை தப்பும் பறை.'

## 5. படிக்காசுத் தம்பிரான்

"வையகம் எல்லாம் கழனியா வையகத்தின்
செய்யகமே நாற்றிசையின் தேயங்கள்—செய்யகத்து
வான்கரும்பே தொண்டை வளநாடு."

எனச் செந்நாப் புலவரால் பாராட்டப்பட்ட தொண்டை மண்டலத்திலே அருந்தமிழ் வாணர் பலர்க்குப் பிறந்தக மாகச் சிறந்திலங்கும் பொற்களந்தைப்பதி என்னும் தேன் களத்தூர். அவ்வூரின் நில வளத்தை வியந்து, 'பொன் னிட்டாற் பொன்விளையும்,' என யாவரும் புகல்வர். அத னால் பொன் விளைந்த களத்தூர் என அதற்குப் பெயர் வழங்கலாயிற்று. அன்றியும், அப்பதியின்கண் ஒரு காலத் திலே நெற்கதிர் பொற்கதிராய்த் திகழ்ந்ததென்றும், அக் கதிர் இன்றும் அவ்வூர்க் கோயிலகத்தே தூங்குகின்ற தென்றும் கண்ணிற்கண்டார் போலக் கூறித் தங்கூற்றை மெய்ப்பிக்க முயல்வாரும் உளர். இத்தகைய செழுமை மிக்க ஊரிலே செங்குந்தர் குடி சிறந்து விளங்கிற்று. அக் குடியினருள் இற்றைக்குச் சிறிதேறத்தாழ இருநூற்றைம் பது ஆண்டுகட்கு முன்னர்க் கல்வியும் ஒழுக்கமும் சிறந்து சிவபக்தி மிகுந்த ஒருவருக்குத் தாம் இயற்றிய தவமே ஓர் உருக்கொண்டாற்போலப் படிக்காசுப் புலவர் பிறந்தனர்; பிறந்து உரிய பருவத்தே கல்வி கற்கத் தொடங்கித் திவா கரம், அந்தாதி, கலம்பகம், உலா, பிள்ளைத்தமிழ் முதலிய நூல்களைக் கற்று மாணவர் எல்லாரினும் மேம்பட்டு விளங் கினர். அவர் கற்குந் திறனைக் கண்ட கணக்காயர் நனி மகிழ்ந்து, பிற்காலத்தே அவர் பெரும்புலவராக வீறுவ ரெனப் பன்முறையுங் கூறிப் பாராட்டுவார்.

அவர் அப்பள்ளியிற் கற்கத்தக்க நூல்களைக் கற்று வல்லவரானபின் மேன்மேலும் புலமையிற் சிறக்க விழைந்து தொல்லாணை நல்லாசிரியரைத் தேடிப் பலரையும் உசாவுவாராயினர். அக்காலை, பிறக்க முத்திதருந் திருப்பதியாகிய திருவாரூரிலே, வைத்தியநாத நாவலர் என்னும் சான்றோரது அகன்ற புலமையையும் தெளிவையும், அவர் தொல்காப்பியம் முதலிய இலக்கண நூல்களை எழுத்தெண்ணிப் படித்தவர் என்பதையும், அக்கல்விப் பொலிவு தோன்ற இலக்கண விளக்கம் எனப் பெயரிய சீரிய கூரிய நூலை இயற்றியுள்ளார் என்பதையுங் கேள்வியுற்று,

> "எழுத்தறியார் கல்விப் பெருக்கம் அனைத்தும்
> எழுத்தறிவார் காணின் இலையாம்."

என்னும் உண்மையை எண்ணி, அவர்பாலேகிக் கற்கத் துணிந்தனர்.

துணிந்த புலவர், நன்னாள் கொண்டு, நன்னிமித்தம் நோக்கித் திருவாரூர் என்னும் கமலாலயத்தை அடைந்து, நாவலர் பெருமானைக் கண்டு தமது அவாப் பெருக்கை வெளியிட, அவரும் புலவரை மாணவராக ஏற்றுக்கொண்டனர். படிக்காசுப் புலவரும் நன்னூல், தொல்காப்பியம், யாப்பருங்கலம் முதலிய இலக்கண நூல்களையும், சிவஞான போதம், சிவஞான சித்தியார் முதலான மெய்கண்ட சாத்திரங்களையும் ஐயந்திரிபறக் கற்றுத் தெளிந்தார். அவருக்குச் சந்தக்கவி பாடவேண்டும் என்னும் வேட்கை மீதூர்ந்தமையாற் சந்தக் கவிகளிலே பெரிதும் பயின்று, அக்கவிகளை அப்பொழுது தொடங்கியே பாடிப் பழகுவாராயினர். சீட்டுக் கவி செய்வதிலும் நம் புலவருக்கு விருப்பம் அதிகம்; இவையெல்லாவற்றினும் முனைத்துத் தலை சிறந்திருந்

தது வசை பாடும் கருத்து. காளமேகப் புலவரின் வசை பாடல்களைப் பல்காற்பயின்று கற்றதனாலும், அவர்தம் செய்யுட்களை வியந்ததனாலும் இவ்வெண்ணம் அவருக்கு ஊறுவதாயிற்று. இதனை அவர் ஆங்காங்குத் தம் செய்யுட்களில் குறிப்பிட்டும் இருக்கின்றனர். அவ்வற்றுள்,

‘ காளமேகம் போலவே வசைபாட யாமும்இக்
காசினியில் அவதரித்தோம்.’

என்று கூறியிருத்தலும் ஒன்று. இவ்வாறே பல்காற்பழகிப் பழகிச் சந்தப்பாச் செய்வதினும், வசைக்கவி இயற்றுதலினும் கைவந்தவராய்ப் பொலிந்தனர்.

‘ காரிகை கற்றுக் கவிபா டுதலிற்
பேரிகை கொட்டிப் பிழைப்பது நன்றே.’

என்ற முதுமொழிப்படி இயற்கையிலேயே பாடுந் திரு அமையப் பெறுதார் பாவலர் ஆதல் என்றும் இல்லை. அவர் தம் செய்யுட்களும் நீடு வாழா; காலக்கோட்பட்டுக் கடிதின் ஒழியும். அங்ஙனமின்றிப் படிக்காசுப் புலவர், பாடுந் திறன் கருவிலே வாய்ப்பப் பெற்ற திருவாளர் ஆதலின், அவருக்கு இனிமை மிக்க பாக்கள் இயற்றுதல் எளிதான செயலாயிற்று.

பின்னர்ப் படிக்காசு, ஆசிரியர்பால் விடைபெற்றுத் தமதூரை அடைந்து, தம்மரபிற்கொத்த மங்கை ஒருத்தியை மணந்து, இல்லறத்தைக் கைக்கொண்டார். கணவனும் மனைவியும் மனமொத்து வாழும் இல்லறம் நல்லறமாகும் என்பதில் ஐயமுண்டோ? இவ்வாறு உடலும் உயிரும் போலவும், மணமும் மலரும் போலவும் காதற்கிழமையிற் சிறந்து வாழுங்கால், பாவாணர் மனைவி, ‘கற்றுத் துறைபோய காதலர்க்குத் தலைமகனைப் பெற்றுக் கொடுத்

தாள்.' புலவர் அம்மகவைப் பெரும்பேருக எண்ணிச் செல்வமாக வளர்த்து வருவாராயினர்.

அருங்கலை கற்ற பெரும்புலவாணருக்கு வறுமை என்னும் கொடுந்தீப் பற்றுதல் அவர்தம் பெருமையை வெளிப்படுத்துதற்குப் போலும்! நல்குரவு என்னும் நெருப்பிலே இட்டுப் பொன்போலும் நன்மக்களை ஆராய்ந்து தெரிதல் அருட்பெருஞ்செல்வன் திருவுளப்பான்மையோ? அன்றியும் புலவர் பெருமக்கள் சதா சருவதா தமிழ்ச்சொல் அருமையையும், கருத்தருமையையும் ஆய்ந்தாய்ந்து பொருள் வருவாயைச் சிறிதும் நினையாது நிற்றலினால் இன்மையென்னும் இன்னலிற்சிக்கி அல்லலுழப்பர். அந்தோ! 'முகம் பார்த் தருள்நோக்கி முன்னிரந்து செல்வர் அகம்பார்த்து நிற்றல்' எத்துணைக் காலம் ஆகும்! தாம் தாம் யாதேனும் பண்டைத் தண்டமிழ்ச் சான்றோர் பலர் போல ஒவ்வோர் தொழிலை மேற்கொண்டு தமது வாழ்க்கையைச் செலுத்தி ஒழிந்த வேளைகளில் உலக மன்பதைகளின் பெரும்பயன் ஒன்றே கருதித் தமது புலமையையும் மதியையும் பயன்படுத்தல் நேரிதன்றோ? இவ்வாறு தமக்கென ஒருதொழிலை மேற்கொள்ளாமையான் புலவர் அவ்வப்போது வறுமையான் நொந்து மெலிந்தமையேயன்றித் தம் பெருமையையும் ஒரோவொருகால் இழந்தும் பரிசில் வாழ்க்கையைச் செலுத்துவாராயினர்.

இங்ஙனமே எந்நாட்டினும் கல்வியாளர் இலம்பாட்டால் இன்னற்பட்டிருக்கின்றனர். ஆங்கிலப் புலவருள்ளும் கோல்டுஸ்மித்து (Goldsmith) என்பவர் கடன்காரரால் பற்றப்பட்டதும், ஷெரிடன் (Sheridan) என்பவர் கடனில் முழுகி அதனின்றும் மீட்சியடையமாட்டாது

கடன்காரர்களுக்குப் பயந்து வீட்டிற்கு நள்ளிரவில் வந்து வெள்ளி முளைக்குமுன் பள்ளியெழுந்து வெளிச்சென்று கரந்து வாழ்ந்ததும், ஸர் வால்டர் ஸ்காட்டு (Sir Walter Scott) என்பவர் கடன் தீர்க்கும் பொருட்டுத் தமது வாழ் நாள் முழுதும் எழுதுகோலுடன் இருந்ததும் அனைவரும் அறிவர் அன்றோ? நவரசப் புஞ்சமாகிய இராமாயணம் போன்ற பார காவியத்தைப் பாடிய கம்பரும் வறுமை யாற்பட்ட அல்லலை அறியாதார் யார்? இவருங் கடன் பட்டுக் கடன்காரர்களால் நெருக்கப்பட் டிருந்தமையா னன்றோ அக்கொடுந்துன்பத்தைத் தாம் பாடிய இராமா யணத்தில் இடம் பார்த்துப் பின்வரும் பாட்டில் விளக்குவாராயினர்!

'விடங்கொண்ட மீனைப்போலும், வெந்தழல் மெழுகுபோலும்,
படங்கொண்ட பாந்தள் வாயிற் பற்றிய தேரை போலும்,
திடங்கொண்ட ராம பாணஞ் செருக்களத் துற்ற போழ்து
கடங்கொண்டார் நெஞ்சம் போலக் கலங்கினன் இலங்கை
[வேந்தன்.'

இது மட்டுமோ? வறுமைப்பட்டார் கல்வியும் அன்றோ கவினழிந்து நிற்கின்றது! இதனைத் தெய்வப் புலவரும்,

'எனைத்துணைய வாயினும் இலம்பாட்டார் கல்வி
தினைத்துணையுஞ் சீர்பா டிலவாம்.'

என்றருளிச் செய்தனர் அன்றோ?

இத்தகைய வாழ்வையே நடாத்தி வந்த படிக்காசுப் புலவர் மிடியென்னும் பிணியாற் பிணிப்புண்டு பெரிதும் வருந்தினர் என்பது சொல்லவும் வேண்டுமோ? அவர் இல்லறமாகிய சகடம் அடிக்கடி முட்டுப்பட்டுத் தட்டுத் தட்டு நடக்கும். மைந்தனைக் கருவுயிர்த்த மனைக்கிழத்தி கொழுமையான உணவு இன்மையால் உடல் மெலிந்

தனள் ; அவளுக்குப் பால் சுரப்பும் அற்றது ; அருமைக் குழவியும் அன்னை மார்பிலே சுவைத்தொறும் சுவைத் தொறும் பால் காணாமையால் அவள் முகம் நோக்கி அழுவதாயிற்று. அந்நங்கை யாது செய்வாள் பாவம் ! தன் கொழுநன் முகம் நோக்கி வாடுவாள். புலவரும் இதனை அறியாதவரல்லர் ; அறிந்திருந்தும், பாற்பசு கொள்ளும் வலியிலராய், எவரை அடுத்திரப்பது என்று எண்ணி,

" இரப்பினை உள்ளுங்கால் உள்ளம் உருகுமால்."

என்றவாறு உருகிச் சோர்வார். புதல்வன் துயர் பொறாத மனைவி வாய் விட்டுத் தன் கணவரை வற்புறுத்தியதனால் அவர் ஒருவாறு தேறி வல்லமாநகர் சேர்ந்து, ஆங்குச் செல்வத்தாற் சிறந்து வாழ்ந்த காளத்தி பூபதி என்பவரைக் கண்டு, கல்லுமுருகுமாறு தமது துன்பத்தை உள்ளவாறே சித்திரத்தில் எழுதிக் காட்டியதுபோல,

பெற்றாள் ஒருபிள்ளை என்மனை யாட்டிஅப் பிள்ளைக்குப்பால்
பற்றாது; கஞ்சி குடிக்குந் தரமல்ல; பால்இரக்கச்
சிற்றாளும் இல்லை; இவ் வெல்லா வருத்தமுந் தீரஒரு
கற்றா தரவல்லை யோவல்ல மாநகர்க் காளத்தியே!'

என்னும் பாட்டைப் பாட, அப்பெரியார் உள்ளமுவந்து பாற்பசுக்களையும், அவற்றைக் காப்பதற்கு வேண்டிய பொருளையும் அளிக்கப்பெற்று, 'இரத்தலும் ஈதலே போலும்,' என்னும் பொய்யில் புலவர் பொருளுரையைச் சிந்தித்து அப்பொருளாளர் அன்பு பழுத்த உள்ளத்தைக் கண்டு களி மகிழ்வெய்தி,

' வழிமேல் விழிவைத்து வாடாமல் என்மனை யாளைமற்றோர்
பழியாமற் பிள்ளையும் பால்என் றழாமற் பசிரெனுஞ்சொல்
மொழியாம லேவிட்ட பாவை முசித்துச் சதையதனைக்
கழியாமல் ஆஅளித் தாய்வல்ல மாநகர்க் காளத்தியே!'

என்னும் பாவால் தமது துயரத்தையெல்லாம் எடுத்திசைத்து, அவை அனைத்தும் ஒழியுமாறு அவர் கொடுத்த கொடையைச் சிறப்பித்துப் பாடித் தம்மூர் மீண்டு, துன்பின்றிச் சின்னாள் வாழ்ந்து வந்தனர்.

பின்னர்ப் புலவர் மாவண்டூர் என்னும் ஊரிலே திருவாளராகத் திகழ்ந்திருந்த கத்தூரி முதலியார் அருமைப் புதல்வராகிய கறுப்ப முதலியார் என்பவர் வேண்டுகோளுக்கிணங்கி, 'தொண்டை மண்டல சதகம்' எனப் பெயரிய அரிய நூலைப் பாடி அரங்கேற்றுவித்தனர். அச்சீமான் புலவருக்குப் பரிசு பல மகிழ்ந்து வழங்கியதேயன்றி, அவர் ஊர்ந்து செல்லுஞ் சிவிகையையுஞ் சுமந்து அவரைப் பெருமைப்படுத்தினர். அப்போது புலவர் பெருமான் உவகை கூர்ந்து,

'ஓர்கறுப்பு மில்லாத தொண்டைவள நன்னாட்டில்
உசித வேளைச்
சீர்க்கறுப்பொன் றில்லாத கத்தூரி மன்னன் அருள்
சேயைப் பார்மேல்
ஆர்கறுப்பன் என்று சொல்லி அழைத்தாலும் நாம்அவனை
அன்பி னாலே
பேர்கறுப்பன் நிறஞ்சிவப்பன் கீர்த்தியினால் வெளுப்பனெனப்
பேசு வோமே.'

என்றும்,

'செல்வத்தம் பியினுடனே கத்தூரி மகன்கறுப்பன்
தெருவீ திக்கே
பல்லக்குத் தான்சுமந்தான் அதுநமக்கோர் ஆயிரம் பொன்
பரிசு தானே.'

என்றும் முதலியாரின் இனிய பண்பையும், அவர் செல்வத் தம்பிமார் தமையன் கருத்துவழி ஒழுகும் மேன்மையையும் அமைத்துப் பாடினர். தொண்டை மண்டல சத

கம், அந்நாட்டிலே தோன்றிய புலவர், வள்ளல்கள், அரசர் முதலிய அனைவருடைய பெரும் புகழ்களையும் செழும்பிரசம் ஒழுகிய செஞ்சொற்களால் இனிது தெளித்துக் காட்டுதலைக் கண்டு பலரும் பாவலரை வியந்து நனி கொண்டாடினர்.

தொண்டை மண்டல சதகம்

'சீருறும் பாடல்பன் னீரா யிரமுஞ் செழுந்தமிழ்க்கு
வீரர்தஞ் சங்கப் பலகையில் ஏற்றிய வித்தகனுர்
பாரதம் பாடும் பெருந்தேவர் வாழும் பழம்பதிகாண்
மாருதம் பூவின் மணம்வீசி டுந்தொண்டை மண்டலமே.'

'நன்றாய் விளைந்ததை வேதியர்க் கீந்தந்த நன்மையினுற்
பொன்றான் விளைந்திட நெற்போல வேஅதைப் போர் அடித்துக்
குன்றாக்கு வித்ததை நெற்பரி மாற்றங் கொடுத்தளித்தான்
மன்றார் களந்தைக் குடிதாங்கி யுந்தொண்டை மண்டலமே.'

இங்ஙனம் சிறிது காலஞ் சென்றபின் கவிஞர்,

'கரத்தால் தொழுதிடினும் கண்டிறைஞ்சி னுலுஞ்
சிரத்தால் வணக்கஞ் செயினும்—உரைத்திடினுந்
தில்லைக்கப் பால்நின்று சேவித்தா லுஞ்சனனம்
எல்லைக்கப் பால்நிற்கு மே.'

என்று புகழ் பெற்ற தில்லையம்பதியை அடைந்து ஆங்கு ஞானப் பெருவெளியிலே ஐந்தொழில் நடனம் புரியும் ஆனந்த வள்ளலையுஞ் சிவகாம வல்லியையுங் கண் குளிரக் கண்டும் அமையாத காதலையுடையராய் வாய் மணக்கப் பாடுவாராயினர் :

'பொல்லாத மூர்க்கருக் கெத்தனை தான்புத்தி போதிக்கினும்
நல்லார்க்குண் டான குணம்வரு மோ?நடு ராத்திரியிற்
சல்லாப் புடவை குளிர்தாங்கு மோ?நடுச் சந்தைதனிற்
செல்லாப் பணஞ்செல்லு மோ?தில்லை வாழும் சிதம்பரனே.'

என மூர்க்கர் செய்தி உள்ளத்தே முனைத்திருந்தமையான் அவரைக் குறித்தே பாடுவாராகிப் பின் தேவியின் கருணை லகரியில் ஈடுபட்டு அதனை எடுத்துப் புனைந்து,

'வேல்கொடுத் தாய்திருச் செந்தூரர்க் கம்மியின் மீதுவைக்கக்
கால்கொடுத் தாய்நின் மணவாள னுக்குக் கவுணியர்க்குப்
பால்கொடுத் தாய்மத வேளுக்கு மூவர் பயப்படச்செங்
கோல்கொடுத் தாய்அன்னை யேஎனக் கேதுங் கொடுத்திலையே'

என்னுங் கவி கூறினர். கூறலும், பரவுவார் பற்றாய்நிற்கும் பரம்பொருள் அருளால் பஞ்சாக்கரப் படியின்மேல் ஐந்து பொற்காசு இலங்குதலைக் கண்டு, அவற்றைக் கைக்கொண்டு, இன்புற்றுச் சிறிது காலம் ஆண்டு வதிவாராயினர். அதன்முதல் அவருக்குப் படிக்காசுப் புலவர் என்று பெயர் வழங்கலாயது.

அக்காலை, இராமநாதபுரம் தமிழ் நங்கை நடம் புரியும் தாமரை மண்டபமாகத் துலங்கிற்று. இரகுநாத சேதுபதியோ, தமிழ்ச்சுவை தெரியுந் தனிவேந்தராய் விளங்கினர். ஆங்குப் புலவர் ஒருங்குகூடி நாடோறும் நாட்கவி பாடி வருவர். அவர்க்குக் குடும்பம் என்னும் நெடுந்தேரை இழுக்கும் தொல்லையே இல்லை. அவருக்கு வேண்டும் பொருள்களையெல்லாம் சேது பதி முட்டின்றி அளித்து, அவர்தமக்கு யாதொரு குறையும் வாரா வண்ணம் பாதுகாத்து வந்தமையால் தமிழும் ஓங்கி வளர்வதாயிற்று. இத்தகைய சேதுமன்னரைப்போலப் பலரும் தமிழை வளர்க்க முன் வருவாராயின், நந்தமிழ் நங்கை தன் இயற்கை நலத்தாலும், செயற்கையணியாலும் தமிழ் நாட்டையே அன்றித் தண்கடல் வரைப்பையே தன்னடிப் படுத்துவள் என்பதற்கு ஐயமுண்டோ? மேன்மையினும், இயற்கை நெறி வழா ஓசையின்பத்தினும், இயல்வரம்பினும், தனித்து நிற்

கும் ஆற்றலினும், கன்னித் தன்மையினும் தமிழைப் பொருவும் மொழியும் உளதோ?

சேது மன்னர் மரபாகிய பாற்கடலில் திங்களைப் போலத் தோன்றிய பாஸ்கர மன்னர் தமிழை வளர்த்த தன்மையினை யாவரே அறியார்? அவர் தாமே தமிழ்ப் புலமை நிரம்பியவராய் இருந்தும், நவம்பாடும் நாவலர் பலரையும் தமது சமஸ்தானப் புலவர்களாக அமைத்து ஆதரித்தும், தம்மை அடைந்த புலவாணருக்குப் பொன்னுந் துகிலும் வழங்கியும் வள்ளலாய்த் திகழ்ந்தனர். அம் மட்டோ! அப்பெருந்தகையாளர் தமது செல்வத்தை ஒரு பொருட்படுத்தாது வரையாது அளித்துக் கோடைமடம் கொண்டவராயும் குலவினரன்றோ? அவரானன்றோ விவேகாநந்தர் அமெரிக்காத் தேசம் சென்று நமது இந்திய சமயத்தின் ஏற்றத்தை விளக்கினர்? அதனானன்றோ மேனாட்டார் நம்மைப் பெருமைப் படுத்துவாராயினர்? நம்மவரும் கண்விழித்தனர். இத்தகைய நகரத்தைச் சேர வேண்டும் என்னும் வேணவாப் பிடர் பிடித் துந்தியதால், படிக்காசுப் புலவர் இராமநாதபுரஞ் சென்று, அந்நகரை ஆண்டு வந்த இரகுநாத சேது பதியைக் கண்டு,

'மூவேந் தரும்அற்றுச் சங்கமும் போய்ப்பதின் மூன்றொடெட்டுக்
கோவேந் தரும்அற்று மற்றொரு வேந்தன் கொடையும்அற்றுப்
பாவேந்தர் காற்றில் இலவம்பஞ் சாகப் பறக்கையிலே
தேவேந்த்ர தாருஒத் தாய்ரகு நாத செயதுங்கனே!'

என்று அவர் தமிழ்ப்புலவரை ஆதரிக்கு மாற்றைப் பாராட்டிப் பாடினர்.

சேது பதியும் நம் செந்தமிழ்ச் செல்வர் பாட்டின் விஞ்சிய சுவையை நாடோறும் நுகர விரும்பி அவரைத்தம்

சமஸ்தான வித்வான்களுள் ஒருவராக ஏற்படுத்தி மேன்மைப்படுத்தினர். எனினும், ஓரிடத்தே தங்கித் தரித்து, சமஸ்தான சட்ட திட்டங்களுக்கு அடங்கி ஒழுகும் வாழ்க்கை புலவர் மனத்துக்குப் பொருந்தவில்லை. அதனால், அவர் மெல்லெனவே அத்தலை விட்டகன்று, காயற்பட்டணம் போய்ச் சேர்ந்தனர்.

அங்கே சீதக்காதி என்னும் வள்ளல் ஒருவர் பெருஞ் செல்வத்துடன் வாழ்ந்திருந்தனர். அவர் மதத்தால் முகம்மதியரெனினும் தமிழமுதம் பருகுஞ் செவியுடையராய்த் தமிழ்ப் புலவருக்கெல்லாம் வரையாது வழங்கும் வள்ளலாய் விளங்கினர். அவர் விரிந்த உள்ளச் செவ்வியையும், கொடைத்திறத்தையும், குணநலத்தையும் நாவலர் பலரும் நனிபுகழ்ந்து நற்றமிழ்ச் செய்யுள் இயற்றுவர். படிக்காசுப் புலவர் அவருடைய பொன் போன்ற இன்குணத்தைக் கேட்டு அளவற்ற மகிழ்ச்சி அடைந்து, அவரைக் காணுமாறு சென்றனர். செல்லலும், சீதக்காதிப் பிரபு முகமும் அகமுமலர்ந்து. அவர் வரவை நல்வரவாகக் கொண்டாடி, முகமனுரைத்து, உயரிய ஆதனத்தில் இருத்தினர். அப்போது புலவர் பெருந்தகை,

‘ ஓர்தட்டி லேபொன்னும் ஓர்தட்டி லேநெல்லும் ஒக்கவிற்கும்
கார்தட் டியபஞ்ச காலத்தி லேதங்கள் காரியப்பேர்
ஆர்தட்டி னுந்தட்டு வாராம லேஅன்ன தானத்துக்கு
மார்தட் டியதுரை மால்சீதக் காதி வரோதயனே.’

‘ ஈயாத புல்லர் இருந்தென்ன போயென்ன எட்டிமரம்
காயா திருந்தென்ன காய்த்துப் பலன்என்ன கைவிரித்துப்
போயாச கம்என் றுரைப்போர்க்குச் செம்பொன் பிடிபிடியாய்
ஓயாமல் ஈபவன் வேள்சீதக் காதி ஒருவனுமே.’

என்னும் செம்பாகம் அமைந்த செய்யுட்களால் அவர்

மீக்கூற்றை மேம்படுத்துரைத்தனர்; அவ்வள்ளியோர் ஆதரவிணயில் பன்னாள் ஆண்டு நன்றுரைந்தனர்.

சிறிது காலஞ் சென்றபின் பாவலர் சிவிகையூர்ந்து, எக்காளம் முழங்க, பலர் விருதுகூறிவரப் புவிராயர்போற் றுங் கவிராயராய்ச் சிவகங்கை என்னும் திருநகரைச் சேர்ந்து, திருமலைத்தேவர் என்னும் பிரபு சிகாமணியைப் போய்க் கண்டார். அவர் புலவர் பெருமிதத்தைக் கண்டு பொறாராய், அவர் செருக்கை அடக்கவெண்ணிக் கிளிக் கூடு போன்ற ஒரு சிறையின்கண் அவரை அடைப்பித்தார்.

செருக்குடையவர்க்குப் பிறர் பெருமிதமும் செருக்கா கவே தோன்றுதல் இயல்பு. அவர் பிறர் ஆடை அணிகள் சிறக்கத் தரித்தலையும் காணப்பொறார்; காரணமில்லா மலே எவரையும் குற்றங் கூறுவர்; அவரைக் குறித்தே,

'உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல்
வடுக்காண வற்றாகுங் கீழ்.'

என்று ஒள்ளிய அறிவின் தெள்ளியருங் கூறினர்.

அச்சிறை மிகக் குறுகிப் புலவர் செவ்வே இருந்தற் கும் இடமின்றி இருந்தது. அதன்கண் அமைக்கப்பட்ட அருந்தமிழ் வாணர் பண்டை வினையின் பயனை எண்ணி உள்ளம் உருகினர்; இறைவன் அழகிய அருளை உன்னித் தயங்கினர்; ஊழ்வினை உறுத்து ஊட்டின் மக்கள் செய்ய லாவது யாதெனக் கூர்ந்து நினைந்து அயர்ந்தார். சிறை யிட்டவர் உண்ணுஞ் சோறும் பருகும் நீருங்கூட அளித்தா ரில்லை. அவர் நெஞ்சம் கல்லோ, மரமோ, வல்லிரும்போ, யாதோ அறிகிலம்! இவ்வாறு சின்னாட்கள் சென்றன.

அச்சிறைக்கருகே ஓர் இளமரக்கா உளது. அங்கே செய்குன்று ஒன்று சிறக்க அமைக்கப்பட்டிருந்தது. அத

னைச் சுற்றி அகழி போன்று நீர் வாய்க்கால்கள் வெட்டப் பட்டிருந்தன. அவற்றின் கரை மருங்கில் பைம்புற்றரை மரகத மணியைப் பதித்து வைத்தாற்போல இலங்கிற்று. முல்லை, இருவாட்சி, மல்லிகை முதலிய திருமலர்கள் மலர்ந்து நறுமணங் கமழ்ந்தன. செந்தாமரை வாய் குவி யப் பகலெல்லாம் குவிந்து கிடந்த செங்குமுதம் தளைய விழ்ந்து இன்பக் கண்ணீரைச் சொரிந்து தனது தலைவ னாகிய தண்கதிர்ச் செல்வனை எதிர் நோக்கி நின்றது. அக் காலைத் திருமலைத் தேவரும், பெண்மை கனிந்து விளங்கும் அவர் தம் மனைவியும் பொழுது போக்காக அங்குப்போந்த னர். மனைவியும் கொழுநரும் நிலவு குவித்தன்ன வெண் மணற் குன்றின்மீது அமர்ந்து, இனிய மெல்லிய சொற் களைப் பேசிக்கொண்டிருத்தலைச் சிறைக் கோட்டத்திலே இருந்து நோக்கிய நாவலர் கண்டு, அதுதான் பதமென உட் கொண்டு, அவ்விருவோரும் கேட்கும் வண்ணம் காலத்துக் குத் தக்கவாறு,

> 'நாட்டிற் சிறந்த திருமலை யா, துங்க நாகரிகா,
> காட்டில் வனத்தில் திரிந்துழ லாமற் கலைத்தமிழ்தேர்
> பாட்டிற் சிறந்த படிக்காசன் என்னும் ஓர் பைங்கிளியைக்
> கூட்டில் அடைத்துவைத்தாய்இரை தாஎன்றுகூப்பிடுதே.'

என்னுங் கவியைக் கேட்டோர் இரங்குமாறு தாழ்ந்த குரலில் தெளிவாகப் பாடினர். அது செவியில் நுழைந்த தும் திருமலைத்தேவர், மனைவியின் மழலைச் சொல்லையும் நிறுத்திப் பாட்டினை முற்றும் உற்றுக்கேட்டு, அதிலமைந் துள்ள கருத்தை நோக்கி வியந்து உடனே புலவர் இருப் பிடங் குறுகி அவரைச் சிறைவீடு செய்து, தாம் இழைத்த பிழையைப் பொறுக்க வேண்டுமென்று பல்காற் பயின்

றுரைத்துக் கோயிற்கழைத்துச் சென்று, பரிசில் தந்து உப சரித்தனுப்பினர்.

பின், படிக்காசுப் புலவர் திருச்சேந்தூர் என்னுந் திப் பியப் பதியைத் தரிசிக்க ஆராக்காதலுடன் சென்றார். அங்கு அறுமுகப் பெருமான் ஆழியின் அலையெறி வாயி லில் திருக்கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் செவ்வி நோக்கி, நெஞ்சங் குழைந்து, உழுவலன்பு பொங்க, மயிர் முனை நிறுத்தித் தம்மை மறந்து அமுதுண்டவர் போலக் குமுதவாய் திறந்து பின் வருமாறு திராக்ஷா பாகமாகக் கவி பாடுவாராயினர் :

'முன்னம்நின் னன்னை முலையூட்டி மையிட்டு மூக்குச்சிந்திக்
கன்னமுங் கிள்ளிய நாள் அல்ல வேளென்னைக் காப்பதற்கே
அன்னமும் மஞ்ஞையும் போலிரு பெண்கொண்ட ஆண்பிள்ளை நீ
இன்னமுஞ் சின்னவன் தானேசெந் தூரில் இருப்பவனே!'

'முற்கரை அப்பரை ஏறவிட் டாட்கொள் முதல்வர் உள்ளக்
கற்கரைக் கும்படி போதித் திடுங்கரு ணைக்கடலைச்
சிற்பரைக் குட்டியை எங்கெங்குந் தித்திக்குஞ் செங்கரும்பின்
சர்க்கரைக் கட்டியைக் கண்டேன்செந் தூர்எனுந் தானத்திலே.

'சின்னஞ் சிறுபிள்ளை செங்கோட்டுப் பிள்ளை சிவந்தபிள்ளை
பொன்னன் மணிப்பிள்ளை பூலோகம் எங்கும் புகழும்பிள்ளை
சொன்னெஞ் சுழல்கின்ற சூரனைக்கொன்றசொக் கேசர்பிள்ளை
வன்னக் கிளிப்பிள்ளை செந்திற் குறத்திக்கு மாப்பிள்ளையே.'

'கல்லடிக்கும் உளியிரண்டு காதடிக்குள் அடிப்பதெனக்
கவிதை கேட்டுப்
பல்லடிக்கக் கிடுகிடெனப் பறையடிக்கும் நெஞ்சர்தமைப்
பாடு வேனே?
வில்லடிக்கும் பிரம்படிக்குங் கல்லடிக்கும் விரும்பிநின்ற
மெய்யன் ஈன்ற
செல்லடிக்குந் தடவரையிற் சேறடிக்க அலையடிக்குஞ்
செந்தி லானே!'

இப்பால் கவிஞர் தண்டலை நீணெறி என்னும் திருப்பதியைச் சார்ந்து, அவ்வூர் வாழ்நர் வேண்டியாங்குத் தண்டலையார் சதகம் என்னும் பழமொழி விளக்கத்தை, ஒவ்வொரு பழமொழியை ஒவ்வொரு செய்யுளின் ஈற்றிலும் அமைத்து அதனை விளக்கு முகத்தான், பல சிறந்த பொருட்கூறுகளையும் சரித்திரங்களையும் பெய்துரைத்துப் பாடினர்.

அவற்றுள் இரண்டொரு செய்யுட்கள் வருமாறு :

'மூக்கணர்தண் டலைநாட்டிற் கற்புடைமங் கையர்மகிமை
மொழியப் போமோ !
ஒக்கும் எரி குளிரவைத்தாள் ஒருத்திவில்வே டனைஎரித்தாள்
ஒருத்தி மூவர்
பக்கமுற அமுதளித்தாள் ஒருத்திஎழு பரிதடுத்தாள்
ஒருத்தி பண்டு
கொக்கெனவே நினைந்தனையோ கொங்கணவா என்றொருத்தி
கூறினளே.'

'செழுங்கள்ளி நிறைசோலைத் தண்டலைநீள் நெறியாரே
திருடிக் கொண்டே
எழுங்கள்ளர் நல்லகள்ளர் பொல்லாத கள்ளர்இனி
யாரோ என்றால்
கொழுங்கள்ளர் தம்முடன்கும் பிடுகள்ளர் திருநீறு
குழைக்குங் கள்ளர்
அழுங்கள்ளர் தொழுங்கள்ளர் ஆசாரக் கள்ளர்இவர்
ஐவர் தாமே.'

புலவர் அப்பதியிலே பன்னாள் தங்கிச் சிவதரிசனஞ் செய்துகொண்டிருந்தனர். பின்னர்ச் சீதக்காதிப் பிரபுவைக் காணவேண்டும் என்னும் அவா மேலீட்டால் அவ்வி

டம் விட்டகன்று, காயற்பட்டணம் அண்மினர். அங்குச் சென்றவளவில் சீதக்காதி வள்ளல் புகழுடம்பை நிறுத்திப் பூதவுடம்பை நீத்தார் என்னும் பொல்லா மொழியைக் கேட்டுப் பெருந்துன்பங்கொண்டு, அப்புண்ணிய சீலரின் கண்ணியத்தையும், செம்மனச் செவ்வியையும், வள்ளன்மையையும் எண்ணியெண்ணித் தாயை இழந்த சேய்போலப் புலம்பினர் ; அவர் தம் உருகிவழியும் அன்பை நினைந்து நினைந்து கதறினர். அப்பால் அவர் திருமேனியை அடக்கஞ் செய்திருக்குஞ் சமாதிக் குழியையேனுங் காணலாம் என்னுங் கருத்துடன் ஆண்டுச் சென்று மனமுருகி வாய்விட்டலறிப் பல இனிய செய்யுட்களைப் பின் வருமாறு பாடுவாராயினர் :

'பூமா திருந்தென்ன புவிமா திருந்தென்ன பூதலத்தில்
நாமா திருந்தென்ன நாமிருந் தென்னநன் நாவலர்க்குக்
கோமான் அழகமர் மால்சீதக் காதி கொடைமிகுந்த
சீமான் இறந்திட்ட போதே புலமையுஞ் செத்ததுவே.'

'தேட்டாளன் காயல் துரைசீதக் காதி சிறந்தவச்ர
நாட்டான் புகழ்க்கம்பம் நாட்டிவைத் தான்தமிழ் நாவலரை
ஓட்டாண்டி யாக்கி அவர்கள்தம் வாயில் ஒருபிடிமண்
போட்டான் அவனும் ஒளித்தான் சமாதிக் குழிபுகுந்தே.'

'மறந்தா கிலும்அரைக் காசுங்கொ டாமட மாந்தர்மண்மேல்
இறந்தாவ தென்ன இருந்தாவ தென்ன இறந்துவிண்போய்ச்
சிறந்தாளுங் காயல் துரைசீதக் காதி திரும்பிவந்து
பிறந்தால் ஒழியப் புலவோர் தமக்குப் பிழைப்பில்லையே.'

இப்பாடல்களைக் கவிவாணர் பாடியவுடன் சமாதிக் குழி திறக்கச் சீதக்காதி வள்ளல் திருவுருவந் தோன்றித் தன் சுண்டுவிரலிலே தரித்துள்ள வைர மோதிரத்தை நீட்

டிற்று. புலவர் அவ்வடிவங்கண்டு மனமிகமகிழ்ந்து பேசத் தொடங்குகையில், அது கையாழியை நீட்டிய வண்ணம் புன்னகை தவழும் இன்முகம் கோட்டியது. உடனே புலவர் அத்தெய்வப் படிவத்தின் உள்ளக் குறிப்பை உணர்ந்து, பேரொளி இமைக்கும் அச்சீராழியைத் திருவிரலினின் றுங் கழற்றிக்கொண்டனர். கொள்ளலும், அவ்வடிவம் மறைந்தது ; சமாதி மூடிற்று. இவ்வருஞ் செயலைக் கண்டு விம்மிதமுற்ற பாவலர் சற்று நேரம் அசைவற நின்று, "இது கனவோ! நனவோ ! கனவாயின் நம் கையில் ஆழி வாராதன்றோ !' என்றுள்ளிப் பலர்க்கும் இதனை எடுத் துரைத்தனர்.

பிறகு கவிவாணர் அப்பிரபுவின் குடும்பத்தினரைக் காணவேண்டும் என்னும் விழைவுதூண்ட ஆண்டுச்சென்று நிகழ்ந்தவற்றை யெல்லாம் திறம்பட மொழிந்தனர். அப் போது அவர்கள் செந்தமிழ்ச் செல்வரை நோக்கி, "அரும் பெரும்புலவீர், எம் சீதக்காதி ஐயர் உயிர்விடுங்கால் தமிழ்ப் புலவரைப் பற்றியே வருந்தி, 'இனி என்னைத் தேடி வரும் புலவர் எங்ஙனம் வாடுவரோ!' என்று கண்ணீர் சொரிய உருகிக் கூறிப் பின் எம்மை நோக்கி, 'என் சிறு விரல் மோதிரத்தைக் கழற்றாமல் சமாதியில் அடக்கஞ் செய்ம்மின்,' என்றனர். அவர் உட்கோள் எமக்கு அன்று தெரிந்திலது ; இன்று வெளியாயிற்று," என்றுரைத்துப் படிக்காசுப் புலவரைப் பலவாறு போற்றினர். புலவரும் அங்குச் சின்னாள் வைகி, 'இருந்துங் கொடுத்தான், இறந் துங் கொடுத்தான் சீதக்காதி,' என்னும் பழமொழி எங் கும் வழங்க அவர்தம் மெய்ப்புகழை யாண்டும் பரப்பி, அவண் விட்டகன்றனர்.

சிறிது காலஞ்சென்ற பின்னை, புலவர் தமது இயற்றமிழ்க் குரவருக்குப் புதல்வராகிய சதாசிவ நாவலரைக் காண்பதற்குச் செம்மறப்பட்டிக் காடு வழியே சென்றனர். அப்பொழுது நாவலருடைய மாணவர் தூதுளங்காய் பறித்துக்கொண்டே யாப்பருங்கலக் காரிகையை நெட்டுருச் செய்துகொண்டிருப்பதைப் பார்த்து வியப்புற்றுச் சென்று, நாவலர் இல்லம்புக்கு அவரைக் கண்டு அளவளாவித் தாம் கண்ட காட்சியை அமைத்து,

‘ கூடுஞ் சபையில் கவிவா ரணங்களைக் கோளரிபோல்
சாடுஞ் சதாசிவ சற்குரு வேமுன்னுன் தந்தைதன்னால்
பாடும் புலவர்க ளானேம்இன் றிச்செம்மற் பட்டியெங்கும்
காடுஞ் செடியும்என் னேதமிழ்க் காரிகை கற்பதுவே !’

என்று பாடினர். நாவலரும் அவர் தம் குரு பத்தியையும், உண்மையன்பையும் நோக்கி உவகையில் திளைத்தனர். பின் அவரிடம் விடைபெற்றுப் புலவர் சென்றனர். அவ்வப்போது வறுமையால் மெலிந்து செல்வரைச் சென்று குறை நிரப்பிக்கொள்ளுதல் அவர் மனத்தைப் புண்படுத்தியது. கற்றாரினுங் கல்லாதார் இனிது வாழ்தலையும், கற்றவர் எப்பொழுதும் பிறர் கையை எதிர்நோக்கி இருத்தலையும் எண்ணிக் கல்வியை வெறுத்து,

‘ அடடெகடுவாய் பலதொழிலும் இருக்கக் கல்வி
அதிகமென்றே கற்றுவிட்டோம் அறிவில் லாமல்!
இடமுளமோ கனம்ஆடக் கழைக்கூத் தாடச்
செப்பிடுவித் தைகள்ஆடத் தெரிந்தோம் இல்லை ;
தடநிறவே சையாராகப் பிறந்தோம் இல்லை ;
சனியான தமிழைவிட்டுத் தையலார்தம்
இடமிருந்து தூதுசென்று பிழைத்தோம் இல்லை ;
என்னசென்மம் எடுத்துலகில் இரக்கின்றோமே !’

என்று பாடித் தம்மைத் தாமே நொந்துகொண்டனர்.

இங்ஙனம் வாழுங்கால் புலவர், ஒரு நாள் பின் வருமாறு சிந்திப்பாராயினர்: 'எத்தனை காலம் இத்தகைய அல்லல் வாழ்க்கையைச் செலுத்துவது? இறப்பு இன்று வருமோ? அன்றி நாளையே வருமோ? அறியேன். இனியேனும் எம் பெருமான் திருவுருவை உள்ளக் கிழியில் எழுதி எழுதிப் பாரேனோ? அவர் அரும்பணியையே இயற்றி எனது வாழ் நாளை வீழ்நாளாக்காமல் இருப்பேனோ? இதற்கு யாது செய்வேன்?' என்று எண்ணி இறுதியில் யாதாயினும் ஒரு சைவ மடத்தை அடைந்து தொண்டு புரியவேண்டு மென்னும் முடிவுக்கு வந்தார். அதன் பொருட்டுத் தமிழ் வாணர், தருமபுரஞ் செல்லுதற்குச் செலவு மேற்கொண்டனர்.

தருமபுரம் சைவ மடங்களுள் ஒன்று. பொருள் வரு வாயிலும் பெருமையிலும் அதனைத் திருவாவடு துறைக்கு இரண்டாவது படியில் வைக்கலாம். சைவசித்தாந்தம் என்னும் அரிய பெரிய தத்துவ ஞானவமுதை, மெய்கண்ட தேவர் சிவஞான போதம் என்னும் திப்பிய நூலை அருளிச் செய்து, தமிழ் மக்கள் அனைவருக்கும் வழங்கினர். அவரைப் பின்பற்றி அவர் மாணவர் பரம்பறையிற் போந்த பலரும் அரும் பெரு நூல்களை இயற்றி யருளினர். அவ்வளவோடு அமையாது, மெய் கண்டார் பரம்பரையிலே வந்த நமச்சிவா யக் குருமூர்த்திகள் திருவாவடுதுறை மடத்தை நிலை நிறுத்தி னர். அவர் காலந் தொட்டுச் சைவ மடங்கள் யாண்டும் நிலை நிறுத்தப்படலாயின. சைவ மடங்கள் எல்லாம் தமிழ் மொழி யையும், சைவ சமயத்தையும் எங்கும் பரப்புதலிலேயே கண் ணுங் கருத்துமாய் நின்று, புலவர் பலரை ஆதரணை செய்து, நூல்கள் பலவற்றை வெளிப்படுவித்துத் தம் புகழை நிறுத் தின. மடங்களில் தமிழும், சைவ சித்தாந்தமும் மாணவ ருக்குக் கற்பிக்கப்பட்டு வந்தன. அப்போது சைவ மடங்கள்

கல்விக் களஞ்சியங்களாய் ஒளிர்ந்தன. மடத்துக்குச் செல்வோர் தமது மடம் அகலப் பெறுவர். எத்தனை நுட்பமான பொருள்களும் எவரும் கொளுத்தப் பெறுவர். ஐயந் தீர்த்துக் கொள்வதற்குச் சைவ மடங்களே புலவர்கட்குப் பற்றுக் கோடாய் இருந்தன.

தருமபுர மடத்திலேதான் மாசிலாமணி தேசிகர் வாழ்ந்திருந்தனர். குமரகுருபரரும் இம் மடத்தைச் சார்ந்தவரே. அப் பெரியார் பெருமை, தமிழ் நூல்களில் மட்டு மன்றிக் காசியம் பதியினும் கவினுற்று விளங்கு கின்றது. அக் காலத்திலே காசியைச் சேர்ந்து, ஆங்குச் செங்கோல் ஓச்சிய மூகம்மதிய மன்னரை அடுத்து அவருக்குத் தமது பெருமையைப் புலப்படுத்தித் தமிழ் மக்கள் நன்மையின் பொருட்டு மடம் கட்டுவித்தனரென்றால், அவர் தம் பெருமை சொல்லற்பாலதோ? கல்வியுடையார் காரிய நிருவாகிகளாக இருத்தல் சாலவும் அரிது. நம் குமரகுருபரரோ, செந்தமிழ்ச் சுவை சொட்டும் மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ், திருவாரூர் நான் மணிமாலை முதலிய அழகிய நூல்களை இயற்றியதே யன்றிக் காசிமா நகரிலே கடவுள் மாநதியாகிய கங்கையின் கரையிலே தமிழர் செருக்குறுமாறு பெருமடம் ஒன்று சமைப்பித்தார் என்று எண்ணும் போது எமது உடம்பு புளகம் போர்க்கின்றது.

இத்தகைய பெரு மக்களைப்போலப் பலரும் இருந்திருப்பாராயின், நமது செந்தமிழ் இன்றுள்ள நிலைக்கு வருமா? அந்தோ! சைவமடங்கள் எல்லாம் பிற் காலத்தில் தாம் கொண்ட கொள்கையையும், தம் முன்னோர் கருத்துக்களையும் அறவே விடுத்து வெறுஞ்சோற்று மடங்களாகத்தீர்ந்துவிட்டன. தமிழ்வளர்ச்சி எங்கே? சைவப் பிரசாரம் எங்கே? தமிழ்ப்புலவர் யாண்டுளர்? தமிழ் மாண

வர் எங்குளார்? அம்மடங்களிலே வாழ்ந்திருந்த முன்னோர் நூல்களும் வெளிவரவில்லை. சிவஞான போத மாபாடியம் இன்னும் திருவாவடுதுறையினின்றும் புத்தக வடிவாகத் தலை காட்டவில்லை. நூல்கள் பேழையிலே அடக்கஞ் செய்யப்பட்டிருத்தல் எந்தத் தெய்வத்துக்குப் பிரீதியோ தெரியவில்லை. அவற்றை அருளிச் செய்த ஆசிரியர் கருத்தும் நிறைவேறவில்லை. பொதுமக்களால் செய்ய முடியாத அளவிறந்த பெருந்தொழில்களை மடத்தார் முடிக்க இயலும். அவர்கள் இடத்தில் பெருந்திரளான பொருள் உள்ளது. அத்தொகை சைவ நன்மக்கள் கொடுத்தது என்பதையும், அதனால் செய்யத் தக்கவை தமிழ் வளர்ச்சி, சைவசித்தாந்த போதனை என்னும் இரண்டுமே என்பதையுங் குறிக்கோளாகக் கொண்டு மடாதிபதிகள் உழைத்து வருவார்களாயின், அவர்கள் புண்ணியமும் புகழும் எய்துதலோடு எம்மனோரான் தொழப்படுங் குரு மூர்த்திகளாயும் விளங்குவார்களன்றோ?

நிற்க; புலவர் சிறிது காலம் சென்றபின் தருமபுரஆதீனத்தை அடைந்து, அங்கே பெரிய பட்டத்தில் எழுந்தருளியிருந்த ஞானசாரியருக்கு இனியாராகி, அவருக்கு அணுக்கத் தொண்டராய் அமர்ந்திருந்தனர். அவர் புலவரைப் பின்பு வைத்தீசுவரர் ஆலயத்துக்குக் கட்டளைத் தம்பிரானாய் நியமிக்க, அவர் தம் ஆணையை மறுத்தற்கஞ்சியும், தம் கருத்து அதனால் நிறைவேறுதலையும் எண்ணி ஆங்குப் புக்குச் சிவதருமம் நடாத்தி, அனைவருக்கும் அமுதளித்துப் பெருஞ்சிறப்புடன் 'படிக்காசுத் தம்பிரான்' எனப் போற்றுமாறு நன்குறைவாராயினர்.

அக்காலை சொக்கநாதப் புலவர் அத்திருத்தலத்தை அடைந்து, திருக்கோயில் வழிபாடு புரிந்து, தம்பிரானைச்

சென்று கண்டு, அவர் தம் பாட்டின் இன்சுவை மிகுதி யைப் பாராட்டி,

'மட்டாருந் தென்களந்தைப் படிக்காசன் உரைத்ததமிழ்
வரைந்த ஏட்டைப்
பட்டாலே சூழ்ந்தாலும் மூவுலகும் பரிமளிக்கும்
பரிந்தவ் வேட்டைத்
தொட்டாலுங் கைம்மணக்குஞ் சொன்னாலும் வாய்மணக்குந்
துய்ய சேற்றில்
நட்டாலும் தமிழ்ப்பயிராய் விளைந்திடுமே பாட்டினுறு
நளினந் தானே.'

எனப் பாடினர். தம்பிரானும் அவர் கவிபாடும் அருமை யைப் புகழ்ந்து முகமன் மொழிந்து, அவருக்குத் திருமடத் திலே அமுது செய்வித்துப் பீதாம்பரம், பொற்கம்பலம் முதலிய பரிசளித்து உபசரித்து அனுப்பினார். அப்பால் அந்நகர மாந்தர் பலரும் தம்பிரானைக் குறுகி, 'திவ்வியம் பழுத்த சைவ சித்தாந்தச் செல்வரே, இத்திருப்பதியைச் சுட்டி ஒரு கலம்பகப் பிரபந்தம் பாடியருளுதல் வேண்டும்,' எனக் குறையிரந்து வேண்டினர். அவர்தம் மெய்ம்மை வேட்கையை உணர்ந்த தம்பிரான், திருவருளைச் சிந்தித்து, புள்ளிருக்கு வேளூர்க் கலம்பகம் என்னும் நூலைச் சொன்னோர்க்கும், பொருளோர்க்கும் பொருந்தச் செம் பாகமாகப் பாடி முடித்தனர். அதனுள் இரண்டு செய்யுட் களை ஈண்டெடுத்துக் காட்டுதும்:

'தாதுண்டு வண்டறை வேளூர்அரன்உண்டு தையல்என்னும்
மாதுண்டுகொண்ட மருந்துண்டு இதைப்பற்ற மாநிலத்தில்
ஏதுண் டுனக்கு மடநெஞ்சமே இசை கேட்கவிரு
காதுண்டு கூப்பக் கரமுண்டு நோக்கவும் கண்களுண்டே.'

தருந்தேனே அனையமொழித் தையல்பங்கர் வேளூரா
தண்தார் வேட்டுக்
கருந்தேனே தினமுனக்குச் செந்தேனே தந்தேனே
கறிசோ றின்னம்
அருந்தேனே இணைவிழிகள் பொருந்தேனே கொன்றை அந்தார்
அளித்தால் ஆவி
வருந்தேனே உனைவழிபார்த் திருந்தேனே இருகாத
வழிவந் தேனே.'

இந்நூலைத் தம்பிரான்மாரும், பாவலரும், செல்வரும் கூடிய குழுவின் நாப்பண் படிக்காசுத் தம்பிரான் வீற்றிருந்து தம் ஞானசாரியரது மஹா சந்நிதானத்திலே அவர் கட்டளையிட்டவாறு அரங்கேற்றினர். அனைவோரும் புலவருடைய பா வன்மையையும் தெளிவையும் பலபடியாக எடுத்துப் பாராட்டினர். புலவரும் திருவருளை உன்னிக் கண்ணீர் உகுத்துப் பரவசப்பட்டனர்.

இங்ஙனம் சில்லாண்டுகள் செல்ல, படிக்காசுத் தம்பிரான் புழுத்துச் செத்தாலும் பழுத்துச் செத்தாலும் பிறவா நெறி அருள வல்ல தில்லையம்பதிக்குச் சென்று, அவ்விடம் விட்டு அகலாராய் நன்கனம் உறைவாராயினர். நாடோறும் வைகறைத் துயிலொழிந்து, சிவகங்கையிலே நீராடி நாளொழுக்கங்களைச் செவ்வன் செய்து, பொன்னம்பலத்தே இன்னருள் கொழிக்கும் இன்பக்கடலை இருகண்களாலும் அள்ளியுண்டு, தம்முள்ளத்தே பொங்கியெழும் உழுவலன்பு கொள்ளை கொள்ள உணர்வழிந்து, உள்ளமும் போய், திருவருட் பெருக்கிலே இரண்டறக் கலந்து நிற்பர்; தம்மை அடைந்த மாணவர் பலர்க்கும் மெய்ப்பொருள் உபதேசஞ் செய்வர்; சைவ சித்தாந்த நூற்பொருள்களை விழைவார்க்குச் செவியறிவுறுத்துவர். இவ்

வாருகச் செந்தமிழ்ச் செல்வர் சிறிது காலம் திருப்பணி செய்து, எல்லாம் வல்ல முழுமுதற் செழும்பொருளாகிய நடன சிகாமணியின் திருவடிப் பேற்றை அடைந்தனர். அவர் சந்தம் பாடும் வன்மையை வியந்து புலவர் ஒருவர் பாடிய செய்யுள் :

'வெண்பாவிற் புகழேந்தி பரணிக்கோ சயங்கொண்டான்
விருத்தம் என்னும்
ஒண்பாவிற் குயர்கம்பன் கோவைஉலா அந்தாதிக்(கு)
ஒட்டக் கூத்தன்
கண்பாய கலம்பகத்திற்(கு) இரட்டையர்கள் வசைபாடக்
காள மேகம்.
பண்பாய பகர்சந்தம் படிக்கா(சு) அலாதொருவர்
பகரொணாதே.'

# 6. புகழேந்திப் புலவர்

நீர்வளம் நிலவளம் நன்கு பொருந்திய தொண்டை நாடு தொன்று தொட்டுப் புகழ் வாய்ந்து திகழ்வது. அது பண்டைக் காலத்தே இருபத்து நான்கு கோட்டங்களாகப் பகுக்கப்பட்டிருந்தது. அக்கோட்டங்களுள் களத்தூர்க் கோட்டம் மிகச் சிறந்தது. களத்தூர் பாலாற்றின் பக்கத்தே அமைந்திருத்தலின் யாவரும் அவ்வூரை விழைந்து அங்கே குடியேறுவர். வயல் வளமிகுந்த அதனைப் பொன் விளைந்த களத்தூர் எனவும் வழங்குவர். அது பொற்களந்தை யென மருவியும் வழங்கும்.

இத்தகைப் பதியின்கண்ணே வேளாண் குலத்தலைவராகிய ஒருவருக்கு அருமந்த புதல்வராகப் புகழேந்திப் புலவர் பிறந்தார். புகழேந்திப் புலவர் இளம்பருவத்திலே தாம் கற்றற்குரிய நூல்களையெல்லாம் கற்றுத்தேர்ந்து, கவி பாடும் வன்மையும் பெற்றார். அவருக்கு வெண்பாப் பாடுவதிலேயே விருப்பம் மிகுதி. பெருந்தேவனார் பாரத வெண்பாவை அடிக்கடி படித்து இன்புறுதலோடு அவர் பாட்டுக்களைப்போலத் தாமும் பாடிப் பயிற்சி செய்வர். அவர் பாட்டுக்கள் சிறிது சிறிதாக வெளித்தோன்றுதலும், அவற்றைக் கண்ட அறிஞர் அவற்றின் விஞ்சிய சுவையை மெச்சத் தொடங்கினர். அதனால் அவர் புகழ் எங்கும் பரவலாயிற்று. சில நாட்களில் புலவர் புகழ், தொண்டை நாட்டைக் கவர்ந்துகொள்ள, அந்நாட்டிலே இருந்த தமிழ்ச் சான்றோர் பலர் அவருக்குப் புகழேந்திப் புலவர் என்னும் சிறப்புப் பெயரைச் சூட்டினர். அப்பொழுது புகழேந்தி

யார் 'இரத்தினச் சுருக்கம்' என்னும் பெயருடைய சிறிய நூல் ஒன்றை இயற்றினர். இரத்தினச் சுருக்கம் பல அரிய நூல்களில் உள்ள சிறந்த பொருள்களைத் தொகுத்துக் கூறுவதில் உயர்வு பெறுவது. அன்றியும், அது முன்னோர் பலதிறப் பொருட்பற்றி மொழிந்து வைத்த உவமைகளை ஒருங்கு புணர்த்துக் கூறுவதினால் மாணவருக்குப் பயன் படற்பாலது. அவ்வினிய நூலாலும் அவருக்குப் பெருமை ஓங்குவதாயிற்று.

இங்ஙனம் நம் புலவர் பெருமான் வாழ்ந்துவருங்கால், இவர் நண்பர் சிலர் அவரை அணுகி, 'புலவரேறே, தாம் கற்ற கல்வியோ, கடல்போலப் பரந்தது; தமக்குள்ள பா வன்மையோ, நனிபெரிது. தமது கல்வி அறிவையும் நுண்ணறிவையும் தமிழ்நாடு முற்றும் பரப்புதலே தகுதி. அங்ஙனமின்றி இங்கே இருப்பீராயின், நும் பெருமை குடத்துள் விளக்கும், தடற்றுள் வாளும்போல மழுங்குமே அன்றி ஒளிரமாட்டாது,' என்றனர். இதனைச் செவி சாய்த்துப் பொறுமையுடன் கேட்ட புலவருக்கு அவர் செப்பியது முழுதும் உண்மையெனத் தோன்றிற்று. அதனால் அவர், தம் கெழுதகை நண்பர் கருத்துக்கிசைந்து, அவர் தம்மை அன்புருக நோக்கி, 'ஐயன்மீர், என் ஆக்கத்தைக் கோரி எனக்கு உறுதி புகட்ட வந்த உழுவலன்புடையார் நீவிரே. நீவிர் கூறியன யாவும் எனக்குக் களிபேருவகை யைத் தருகின்றன. இத்தகைய நண்பரையுடைய எனக்கு யாது குறையுளது? நீர் விழைந்தவாறே நான் பாண்டி நாட்டைச் சேர்ந்து எனக்கும், உமக்கும், நாம் பிறந்த திசைக்கும் கீர்த்தி நிலைபெறும்படி செய்வேன்,' என்றுரைத்தனர். அச்சொல்லாகிய அமிழ்தம் வாடிய பயி

ருக்கு வான் துளியைப் போல அந் நண்பர் உள்ளத்தைக் குளிர்வித்து உடலைத் தளிர்ப்பித்தது.

நண்பர் விடைபெற்றுச் சென்ற பின்னர்ப் புகழேந்திப் புலவர் தமது இல்லத்துக்கு அருகேயுள்ள சோலையிற் சென்று உலாவிக்கொண்டே, தாம் பாண்டி நாட்டை நோக்கிப் புறப் படும் காலத்தைப் பற்றி எண்ணிக் கொண்டிருந்தனர். பின் ஒரு நல்லநாளைக் குறிப்பிட்டுக்கொண்டு புலவர்வீடு சேர்ந்து அதற்கு வேண்டியவற்றை முடித்து வருவாராயினர். சில நாட்கள் சென்றதும், புலவர் தம் நண்பர் உறவினர் முதலி யோரிடம் விடைபெற்றுப் பாண்டி நாட்டுக்குச் செல்லப் புறப் பட்டனர். சென்றவர் வழியிலே உள்ள நடு நாட்டைப் பார்த்துக் களித்து, ஆங்குள்ள திருக்கோயில்களை வணங்கி மேற்சென்றார். பின் அவர் சோழவளநாட்டை அடைந்தார்; அந் நாட்டிலே காவிரியாற்றின் வளத்தையும், தென்னை வாழை முதலியன நிறைந்துள்ள சோலைகளையும் பார்த்துப் பார்த்து இன்புற்றார். சிதம்பரம், திரிசிரபுரம், திருவரங்கம் முதலிய பெரும்பதிகளையும் கண்டு வணங்கி, அன்பு பெருகினவராயி னர். அதன்மேல் சின்னாட்களில் புகழேந்திப் புலவர் செந் தமிழ் நாட்டைச் சேர்ந்தார். அந் நாட்டை வரகுண பாண்டி யன் அரசாண்டு வந்தான். அங்கே பாண்டியன தமிழ வளர்ச் சியின் பொருட்டுச் செய்து போதரும் முயற்சிகளால் தமிழ் மணம் பரிமளித்தது. எங்கும் கல்லூரிகள் கணக்கின்றிக் காணப்பட்டன. ஏடும் எழுத்தாணியும் தாங்கிக் கொண்டு யாண்டுங் கற்போர் செல்லுதலைக் கவிஞர் கண்ணுற்றார். வைகையாற்றிலே மாணவர் பலர், நிகண்டு இலக்கணம் முத லிய கருவி நூல்களை நெட்டுருச் செய்திருத்தலை நோக்கினார். நோக்கின புலவர், 'இவ்வைகையுந் தமிழ்நயம் உணருமன்றோ!

ஈதன்றோ செந்தமிழ் நங்கைக்குச் செவிசித்தாய்!' என்று எண்ணினூர்.

மதுரை மாநகர் அங்கையற்கண்ணி யம்மையின் ஆலயத்தால் அருமை பெற்றது. அந் நகரத்தின் நாப்பண் விளங்கும் கயற்கண்ணி கோயில். அது பெரிய கோபுரங்களை உடையதாய்ச் சிற்ப வேலைத்திறன் சிறக்கப் பெற்றதாய் உள்ளது. அத்திருக்கோயிலின் பெருந்தோற்றத்தையும் அழகையும் புகழேந்தியார் கண்டு, மகிழ்ச்சியால் விழுங்கப் பட்டவராய் உட்புகுந்தார். அவ்விடத்தே ஓதுவார்கள் சிவாகமம் விதித்தவாறு திருநீற்றைப் பதினொரு இடங்களிலும் புண்டரமாக அணிந்தும், உத்திராக்க வடம் பூண்டும் இருந்தனர். அவர் இடுப்பிலே வெண்மடியை முழங்காலுக்குமேல் உடுத்திருந்தனர்; அதனைச் சுற்றி ஒருசிறு துணியைச்சுற்றி யிருந்தனர். அவர் அனைவரும் சமயம், விசேடம், நிர்வாணம், ஆசாரியாபிஷேகம் எனும்நான்கு தீக்ஷைகளும் செய்து கொண்டு தமிழ் மறைகளாகிய தேவார திருவாசகங்களைச் சம்பிரதாயப்படி பாடவல்லவர். அவர் சிவபூஜை செய்ததன் அறிகுறியாக அவர்தம் செவியிலே வில்வப்பத்திரம் விளங்கியது. அவர் முண்டித சிரத்தை உருத்திராக்க வடம் அணி செய்தது. இத்தகையார் பலர் சொக்கலிங்கப் பெருமானுக்கும் அங்கயற்கண்ணிக்கும் பூசனை நடைபெறுங்கால் தமிழ்மறை ஓதுதலைப் புலவர் கேட்டு நெஞ்சம் குழைந்தார்; ஓதுவா மூர்த்திகள் பாடிய திருப்பாடல்களின் அருமை பெருமைகளை உன்னியுன்னிக் களி துளும்பினூர். ஆலய அமைப்பும், அங்கே நடைபெறும் அரிய பூசையும், விழாவும், அடியார் குழுவின் ஆர்வமும், தமிழ் வேத பாராயணமும் ஒருங்கே சேரப் புலவர் மனம் "ஊமைத் தசும்புள் நீர் நிறைந்தாற்போல" அன்பானே நிறைந்தது.

ஆண்டிருந்து மீண்ட புலவர் ஓர் அன்ன சாலையை அடைந்து உணவுகொண்டனர். அவ்வுணவு, பாகம் முதலியவற்றால் தம் நாட்டு உணவினும் வேறுபட்டிருந்ததால் வயிறார உண்ணுதற்கிலராய் ஓரிடத்தே தங்கி உறங்கினார். பின்னர் இரண்டொரு நாட்கள் ஒரு விடுதியில் தங்கி இருந்து, வேந்தன் அவைக்களம் குறுகக் காலம் பார்த்திருந்தார். பின்னர் அவர், ஒரு நாள் பாண்டி மன்னன் வேத்தவையை அடைந்தார். அவனும் புலவரைக் குளிர்ந்த நோக்கமும் அரும்பிய நகையும் உடையவனாய் வரவேற்று, நெடுநேரம் இன்னுரை வழங்கினான். பிறகு புலவரை மன்னர் பெருமான் தனது நல்விருந்தினராக ஏற்றுப் பல உபசாரங்களுடன் வைத்திருந்தான். புலவர் காலையில் எழுந்து பொற்றாமரைத் தீர்த்தத்திலே நீராடுதலும், திருக்கோயில் வழிபாடு புரிதலும், வேத்தவை சேறலும் ஆகிய இவற்றையே நாட்டொழில்களாகக் கொண்டு சில நாள் இருந்தனர்.

பின் ஒரு நாள் அரையன் தனியாகப் புகழேந்தியாரைத் தன்னிடம் வருவித்து, அவருக்குள்ள புலமையை அறிய விரும்பிப் பல வினாக்களைத் தொடுத்தான். அவற்றிற்கெல்லாம் புரவலன் உவக்குமாறு புலவர் விடையளித்தனர். அன்றியும், புலவாணர் மன்னவன் செவியும் நெஞ்சும் குளிருமாறு பழந்தமிழ் வாணர் பாட்டுக்களிலே பொதிந்துள்ள உயர்ந்த கருத்துக்களையும் சொல் நயங்களையும் பலபட எடுத்து இனிது விளக்கித் தமது பரந்த புலமையையும் விரிந்த அறிவையும் புலப்படுத்தினார். அவற்றையெல்லாம் செவிமடுத்த அரசன், புகழேந்தியார் புலமையை வியந்து, அன்று முதல் தனது நாட்டிற்றானே அவர் தங்கியுறைதல் வேண்டுமென்றும், தனது அவைக்

களப் புலவருள் ஒருவராக விளங்கித் தனது அவையை அழகு செய்யவேண்டுமென்றும் விழைந்தான். அதற்குப் புலவரும் இணங்கினர். அது முதல் புகழேந்திப் புலவர், வரகுண பாண்டியன் வேத்தவைப் புலவருள் ஒருவராய்த் திகழ்வாராஞர். அவர் பாட்டின் சுவை மிகுதி எல்லார் மனத்தையும் ஈர்த்துக்கொண்டமையின், மற்றைப் புலவரும் அவர்தம் வீறுடைமையை ஒப்புக்கொள்ள, அவர் அனைவரினும் முதன்மை பெற்றவராஞர்.

புலவர் இங்ஙனம் இருப்புழி, வரகுண பாண்டியன் தன் அருந்தவச் செல்விக்குத் தமிழ் செவியறிவுறுத்துமாறு அவரை வேண்டினன். புலவரும் அதற்கிசைந்து, வேந்தன் திருமகளுக்குச் செந்தமிழ் நூல்களை வரன்முறையாகக் கற்பிக்கத் தொடங்கினர். அம்மாதர்க்கரசியும் சங்கச் செய்யுட்களையும், சிலப்பதிகாரம் சிந்தாமணி முதலிய அரும்பெருங் காப்பியங்களையும் பருகுவதன்ன ஆர்வத்துடன் இனிது கற்றுத் துறைபோயினள். அப்பாவையின் மதி நுட்பமும், பொருளுணர் ஆற்றலும் புலவர் உள்ளத்துக்கு உவகையூட்டின.

மகளிர் ஆடவரினும் நுண்ணறிவுடையவர்; ஆடவர் அறிவு திட்பமுடையது; ஆடவரினும் மகளிர் உணர்ச்சி மிக்கவர். பெண் மக்களுக்குக் கல்வி புகட்டினல் அவர் மிகவும் கருத்தோடு கற்றுத் திறமை அடைவர். பெண்பாலாரும் ஆண்பாலாரைப் போலவே புலமையடையும் காலம் வருமாயின், நமது வாழ்க்கையிலே மாறுதல் பல உண்டாகும். குடும்ப வாழ்க்கையே சீர்திருந்தும். நூல்களிலும் இனிய கருத்துக்கள் பல தோன்றும். அதனல் உலகம் மேன்மையடையும் என்பதற்குச் சிறிதும் ஐயுறவில்லை. பாண்டியன் அருமை மகள் கல்வி மணம் வீச

காரிகையாயினமையால், புகழேந்திப் புலவர் பெருமையை முற்றும் உணர்ந்தாள். அவரைத் தந்தையைப் போல அன்புடன் நேசித்தாள். அவருடனே அவள் பெரிதுங் காலங் கழிப்பாள். இதனால் பாண்டியன் திருப்புதல்வி புலவரை விட்டுப் பிரிய மனமில்லாதவளாய் இருந்தாள். இவ்வாறு நாட்பல செல்ல, மன்னவன் புதல்வி பெதும்பைப் பருவங் கடந்து மங்கைப் பருவம் அடைந்தாள். இயற்கையிலேயே பேரழகாற் சிறந்த அந்நங்கை, பருவம் அடைந்ததும் ஒவ்வொரு கலையாக வளர்ந்து நிரம்பிய முழுமதி போலத் திகழ்ந்தாள். அவள் முகம் செந்தாமரை மலரையும், கண்கள் குவளையையும், கைகள் செங்காந்தளையும், தோள்கள் பச்சை மூங்கிலையும் இப்பொழுதே முழுவதும் ஒத்தொளிர்ந்தன. பாண்டியன் தன் இனிய மகளுக்கு இசைந்த கணவன் யாவனெனக் கருதியிருந்தான்.

அக்காலை சோழவள நாட்டை விக்கிரம சோழன் அரசு புரிந்து வந்தான். அவன் மைந்தன் குமார குலோத்துங்கன். அச்சோழ மன்னன் அவைக்களப் புலவராய் ஒட்டக்கூத்தர் என்னும் பெரும்புலவர் ஒருவர் இருந்தனர். அவர் கடல்போலப் பரந்த புலமையுடையவர்; நவம் பாடுவதில் அதிசமர்த்தர்; கோவை, உலா, அந்தாதி முதலிய பிரபந்தங்கள் இயற்றுதலில் மிக்க வன்மையுடையவர். அதனால் 'கோவை உலா அந்தாதிக்கு ஒட்டக்கூத்தன்' என எவரும் அவரைப் புகழ்வர். அன்றியும் அவர் செய்யுட்களை ஒட்டிப் பாடுவதில் திறல் மிகுந்தவர். சோழன் ஒருகால் அவர் பாடிய உலாவிலேயுள்ள சில கண்ணிகளை இயைத்து ஒரு வெண்பாச் செய்யக் கூறினான். அவ்வாறே,

'கையும் மலரடியுங் கண்ணுங் கனிவாயுஞ்
செய்ய கரிய திருமாலே—வையம்

அளந்தாய் அகளங்கா ஆலிலைமேற் பள்ளி
வளர்ந்தாய் தளர்ந்தாள்என் மான்'

என்று ஒட்டிப் பாடினர். அதனால் அவருக்கு ஒட்டக் கூத்தர் எனப் பெயர் வழங்கலாயிற்று. அவரைக் கொண்டே சோழன் தன் அருமைத் திருமகன் குலோத் துங்கனுக்குச் செந்தமிழ் பயிற்றுவித்தான். வேந்தன் ஒட்டக்கூத்தருக்குக் கவிச்சக்ரவர்த்தி என்னும் பட்ட மும், சிவிகை முதலிய சிறப்புக்களும் அளித்து ஆதரித்து வந்தான். குலோத்துங்கனுக்குக் கூத்தர்பால் விருப்ப மும், நன்மதிப்பும் அதிகம். ஒருகால் கூத்தர் சோழனைப் புகழ்ந்து,

'ஆடுங் கடைமணி நாவசை யாமல் அகிலமெல்லாம்
நீடுங் குடையிற் றரித்த பிரான் என்று நித்தநவம்'

என்று இரண்டடி பாடி முடிக்கையில், குலோத்துங்கன் இடைமறித்து,

'பாடுங் கவிப்பெரு மான்ஒட்டக் கூத்தன் பதாம்புயத்தைச்
சூடுங் குலோத்துங்க சோழனென் றேயென்னை
[சொல்லுவரே.'

என மற்றிரண்டடி பாடிப் பாட்டை நிரப்பினன் என்றால் அக்குலோத்துங்கனுக்குக் கூத்தரிடம் இருந்த அன்பும் மதிப்பும் இத்துணையென்பது சொல்ல வேண்டுமோ?

இவ்வாறிருப்பச் சோழன் தன் மகன் குலோத்துங்க னுக்குப் பாண்டியன் மகளை மணம்புரிவிக்க வேண்டுமென விழைந்து, தன் கருத்தைப் பன்முறை கூத்தரிடம் கூறி வந்தான். அக்கருத்து நிறைவேறுமுன் மன்னன் பொன் னுலகு புக்கு வானவர்க்கு விருந்தாயினன். உயிர் போகு முன் வேந்தன் ஒட்டக்கூத்தரை வருவித்துத் தன் கருத்தை

எங்ஙனமேனும் முற்றுவித்தல் வேண்டுமெனக் கூறி உயிர் விடுத்தான். இதனால், குலோத்துங்கனுக்குப் பாண்டியன் மகளை மணம் புரிவித்தல் கூத்தர் கடமையாக முடிந்தது. அவரும் அதற்காக முயற்சிகள் செய்து வந்து, கடைசியில் முதியோர் சிலருடன் பாண்டி நாட்டுக்குச் சென்றனர்.

பாண்டியனுக்குத் தமது வருகையை அறிவித்து அவன் விரும்பிய வண்ணம் அரண்மனையை அனைவரும் அடைந்தனர். தமிழ் நாடன் அவர் தம்மையெல்லாம் அன்புடன் வரவேற்று முகமனுரைத்துத் தக்க உயரிய ஆதனங்களின் தக்கவாறு சிறக்க அமர்த்தி நலம் வினவினன். பின், மன்னன் சோணாட்டின் விளைவு, அரசியல், குடிவளம் முதலியவற்றை வினவினன். அவற்றிற்கெல்லாம் ஒட்டக்கூத்தர் தக்க விடையளித்துக்கொண்டு வந்தனர். அதன்மேல் மாறன் அவர்கள் ஆண்டுப் போந்தமைக்குக் காரணம் இன்னதெனத் தெரிவிக்குமாறு கேட்டான். அப்பொழுது புலவர் பெருமான் எப்படியும் பாண்டியன் பெண் மறுக்கலாகாதென உட்கொண்டு, நீடு நினைந்து, சொற்களை அளவறிந்து கூறி, அழகாக உரையாடி வந்தனர், அவர் திறம்பட மொழிந்து வருதலை நோக்கிய அரையன் உள்ளுக்குள் உவகை பூத்து, இன்னும் அவர் சொல்வன்மையை அறிய விரும்பி விளையாட்டுக் குறிப்பாகப் புன்னகை தவழும் முகத்துடன் புலவரை நோக்கி, "அருந்தமிழ்ப் புலவீர், பாண்டியர் மகளைக் கொள்ளத் தக்க பெருமை சோழர்க்கு உளதோ?" என்றான். உடனே புலவர், சோழருக்கும் பாண்டியருக்கும் உள்ள வேற்றுமையைப் புலப்படுத்து முகத்தான் அவ்விருவர் பரிமா, ஆறு, கொடி, ஊர் முதலியவற்றை எடுத்துக்கொண்டு,

'கோரத்துக் கொப்போக னவட்டம் அம்மானே
கூறுவதுங் காவிரிக்கு வையையோ அம்மானே
ஆருக்கு வேம்புநிக ராகுமோ அம்மானே
ஆதித்த னுக்குநிகர் அம்புலியோ அம்மானே
வீரர்க்குள் வீரனொரு மீனவனே அம்மானே
வெற்றிப்பு லிக்கொடிக்கு மீன்கொடியோ அம்மானே
ஊருக்கு றந்தைநிகர் கொற்கையோ அம்மானே
ஒக்குமோ சோணாட்டைப் பாண்டிநா டம்மானே.'

என்னும் ஒரு பாவைப் பாடினர்.

உடனே பாண்டியன் புகழேந்தியாரைக் கடைக்கணிக்க அவர்,

'ஒருமுனிவன் நேரியிலோ உரைதெரித்த தம்மானே
ஒப்பரிய திருவிளையாட் டுறந்தையிலோ அம்மானே
திருநெடுமால் அவதாரஞ் சிறுபுலியோ அம்மானே
சிவன்முடியில் ஏறுவதும் செங்கதிரோ அம்மானே
கரையெதிரல் காவிரியோ வையையோ அம்மானே
கடிப்பகைக்குத் தாதகியங் கண்ணியோ அம்மானே
பரவையணிந் ததுஞ்சோழன் பதந்தனையோ அம்மானே
பாண்டியனார் பராக்கிரமம் பகர்வரிதே அம்மானே.'

என்று பாண்டியன் தனிப்பெருமையைச் சிறப்பித்துப் பாடி முடித்தனர். அது கேட்ட கூத்தர் மற்றொரு செய்யுளால் சோழன் வீரத்தைப் புகழும்பொருட்டு,

'வென்றி வளவன் விறல்வேந்தர் தம்பிரான்
என்றும் முதுகிற் கிடான்கவசம்—துன்றும்'

எனக்கூறிச் சற்றுத் தாழ்க்கையில் புகழேந்திப் புலவர்,

'வெறியார் தொடைகமழும் மீனவர்கோன், கைவேல்
எறியான் புறங்கொடுக்கி னென்று.'

என்று அவ்வெண்பாவையே தொடுத்து முடித்துப் பாண்டியன் வீரத்தை உயர்த்தி மொழிந்தனர்.

கூத்தர் மனம் திடுக்கிட்டது. இதுவரை புகழேந்தியாரைப்போல அவருக்கு எதிர்ப்பாட்டுப் பாடினவர்களே இல்லை. அவர் சோணாடு முழுவதும் தமது புலமையைத் தனியரசாகச் செலுத்தி வந்தவர். தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இலரென எண்ணியிருந்த கூத்தருக்கு இப்பொழுதுதான் "கல்வி ஒருவர் பங்கன்று,' என்னும் உண்மை புலப்பட்டது. எனினும், புகழேந்திப் புலவர் தன்மை அவருக்குப் பிடிக்கவில்லை: ஒரு பாட்டை ஒட்டியும் மற்றொரு பாட்டை வெட்டியும் பாடித் தம் புலமையை வெளிப்படுத்தப் புகழேந்தியார் முயன்றதாக எண்ணினார். அதனால், அவருக்குப் புகழேந்தியார்மீது பகைமை உண்டாயிற்று. பாண்டியன் உள்ளம் மலர்ந்தது. கல்விவீரர் இருவர் சொற்போர் புரிவது யாருக்கே இன்பமூட்ட மாட்டாது? எனினும், கூத்தர் குறிப்பை உணர்ந்த பாண்டியன் உடனே தன் மகளைச் சோழனுக்குக் கொடுக்கும் உடன்பாட்டை வெளியிட்டான். வந்திருந்த அனைவரும் களி நிரம்பினர். கூத்தரும் பெருமகிழ்ச்சி எய்தினர். பின்னர், கணிகனைக் கொண்டு மணநாள் குறிப்பிட்டுத் திருமுகம் எழுதி முடிந்தது. கூத்தருக்கும் பிறர்க்கும் பாண்டியன் நல்விருந்தளித்துப் பல பரிசில்களை வழங்கிக் களியாட்டு அயர்வித்தான். இச்செய்தி கேட்டார் யாவரும் இன்பக் கடலுள் முழுகினர்.

பின்னர்ச் சோழன் குலோத்துங்கன் தன் மணத்தின் பொருட்டு வேண்டிய பொருள்களை அமைக்கத் தொடங்கினன். சோணாடர் யாவரும் மண வினையைப் பற்றியே பேசிக்கொண்டிருப்பார். சோணாடு முழுவதும் இச்செய்தி பரவ ஆங்காங்குள்ள செல்வர்களும், புலவர்களும், வேளாள

ரும், வணிகரும், புரோகிதரும் மணநாளை எதிர் நோக்கிக் கொண்டிருந்தனர். அப்போது வேந்தர் பெருமானான சோழன் தன் நாட்டிலுள்ள குடிகள் தாம் இறுக்க வேண்டிய இறையை ஈராண்டு வரையில் செலுத்த வேண்டுவதின்றெனை எங்கும் பறையறைவித்தான்; 'இன்று தொட்டு, மணவினை நடைபெறுவதாக,' எனத் தன் அமைச்சருக்குக் கட்டளையிட்டான். அரசன் திருமாளிகையிலே நடைபெறும் எக்கொண்டாட்டமும் அவன் நாட்டிலே வாழும் குடிமக்களிடத்தும் கொண்டாட்டமாக நிகழும். ஏனெனில், மன்னவன் தனது கோயிலில் சிறப்புக்கள் நடைபெறும் காலங்களில் எல்லாம் குடிகள் எல்லாரும் உண்டு களித்து உவகை பூப்ப அவர்களுக்குப் பல வகையாகப் பொன்னும் பொருளும் வழங்கி உதவி புரிவான்.

இவ்வாறு சோணாட்டிலே நிகழாநிற்பப் பாண்டி நாட்டிலே நடந்த ஏற்பாடுகளுக்கு ஓரளவே இல்லை. பாண்டி நாடே மணம் நிகழிடமாக இருந்தமையால், அங்கே சோணாட்டினும் அதிக சிறப்பு நடைபெறும் என்பது சொல்ல வேண்டுமோ? குமார குலோத்துங்கனும், அவன் ஐம்பெருங்குழுவும், எண்பேராயமும் தங்குதற்குத் தக்கவாறு இடங்கள் வகுக்கப்பட்டன. 'எட்டி,' 'காவிதி,' முதலிய பட்டம் பெற்றவர்களும், மேழிச் செல்வரும், வணிகர் பெருமக்களும் உறைதற்கு வேண்டியவாறு ஆண்டாண்டு இடங்கள் வரையறுக்கப்பட்டன. குறுநில மன்னர் வைகுதற்கு ஏற்ற இடங்கள் குறிக்கப்பட்டன.

வாழை, தென்னை, கமுகு முதலிய மரங்களடர்ந்த சோலைகளிலே வெயில் வெப்பத்தை ஆற்றிக்கொள்ளுதற்காக மணற்குன்றுகளின்மேல் சிறு குடில்கள் வெட்டி

வேரால் அமைக்கப்பட்டன. அக்குடில்களுக்குச் சந்தன மரங்கள் கால்களாக நிறுத்தப்பட்டன. அக நகறிலும், புற நகரிலும், வழிகளிலும் காவணங்களை அமைத்து, வெண் மணல் பரப்பி வைத்தார்கள். நிறை குடங்களிலே தண்ணீர், குங்குமப்பூ, வெட்டிவேர் முதலியவற்றுடன் நறுமணத்தோடு தண்ணென்றிருந்தது. ஆங்காங்குப் பசுங்கொடிகளைப் பந்தரின் மேலேற்றி வைத்தனர். அக்கொடிகளிலே சண்பகம் முதலிய மலர்கள் பூத்து மணங் கமழ்ந்தன. ஆங்காங்குத் தோரண வாயில்கள் அமைக்கப்பட்டன. அங்கெல்லாம் சோழன் சிறப்பையும், பாண்டியன் பெருமையையும் விளக்குஞ் சித்திரவெழுத்துக்கள் இருந்தன. பரிசிலர் கூட்டம் வெள்ளம்போலப் பொங்கியது.

சோழன், உறையூரிலே தங்கி அரசுரிமையைச் செலுத்துதற்கு யாவரும் இன்மையின் தனது ஆத்தானப் புலவராகிய ஒட்டக்கூத்தரை வருவித்து, அவரிடம் தான் மதுரைக்குச் சென்று மணம் புரிந்து உறையூருக்குத் திரும்பும்வரை அரசு புரியுமாறு விளம்பினன். அவரும் தம்மாணவன் திருமணத்தைப் பார்த்துக் களிக்க வேண்டுமென்னும் வேணவா உடையவரேனும், அதிகாரத்தில் விருப்புடையராக இருந்தமையானும், தக்கார் வேறு யாருமிலர் என்பதனுனும் அவன் விருப்பத்துக்கு இசைந்தார். பின்னர்க் குலோத்துங்கன் சேனைத்திரள் முன்னே செல்லப் பெருமக்கள் புடைசூழ மகளிர் பல்லாண்டு பாடப் பெருஞ்சிறப்புடன் மதுரையம்பதியை அடைந்தான்.

அவனை எதிர்கொண்டு பாண்டியன் வரவேற்று அவன் தகுதிக்கேற்றவாறு நன்மதிப்புடன் சிறப்புக்கள் செய்தான். பிறகு குலோத்துங்கனுக்கும், பாண்டியன் பாவைக்கும் திரு

மணம் நிகழ்ந்தது. மணமகனையும் மணமகளையும் பார்த்தார் அனைவரும் அவர் இருவரும் குலத்தாலும், மரபாலும், அறிவாலும், திருவாலும், அழகாலும், அன்பாலும் ஒத்திருத்தல் நோக்கிப் பெருமகிழ்வடைந்தனர். அவர் இருவரும் ஒருவருக்கொருவர் உண்மையன்பு பூண்டனர். பாண்டி மாது சோழனையும், சோழன் பாண்டியன் மகளையும் பார்த்தவுடன் ஓராவிற்கு இரு கோடு தோன்றினாற்போல இருவருக்கும் உழுவலன்பு இருவரகத்தும் தோன்றுவதாயிற்று. அதனால் அவர் பேரின்பம் உடையவராய் விளங்கினர். மணம் முடிந்த பின்னாளில் எல்லாரும், பாண்டியன் சோழன் ஆகிய இருவரிடமும் விடை பெற்றுக்கொண்டு தத்தம் இருப்பிடம் சேர்ந்தனர். பின்னர்க் குலோத்துங்கன் சோழ நாட்டைச் சேர வேண்டிய நாளைப் பாண்டியற் குணர்த்த அவனும் அதற்கிணங்கினன். 'நாளை, பாண்டியன் பாவை சோழனோடு சேருவாள்,' என்ற செய்தி எட்டியதும், அவளிடம் விடைபெற்றுச் செல்ல மங்கையர் பல்லோர் புறப்பட்டனர். அவர் எல்லோரும் அம்மாதரசியிடம் சென்று அவள் அருமையையும், கல்வியையும், அறிவையும் வியந்து, அவள் பிரிவுக்கு வருந்திப் புன்கணீர் சொரிந்தனர். பாண்டி மாதேவியும் கண்ணீர் உகுத்தாள்.

பிறகு, அச்செல்வியோடு சோணாட்டுக்குச் செல்வோர் இன்னாரின்னாரெனத் தெரிந்தெடுக்கப்பட்டனர். அச்செல்வியிற் பாண்டியன் புதல்வி, தன்னைப் பெற்ற நற்றாயை அடைந்து அவளிடம் தன்னோடு தன் தந்தைக்கு நிகரான புகழேந்திப் புலவரையும் அனுப்புமாறு வேண்டினள். அவளும் தன் அருமைத் திருமகளின் உள்ளக் கருத்தைத் தன்

கொழுநனுக்குக் குறிப்பிட்டாள். அது கேட்ட வரகுணன் புகழேந்தியாரைத் தருவித்து அவரை அன்பொழுகும் இன் முகத்துடன் பார்த்து, "புலவீர், நம் நங்கை சோணாட்டுக்கு நாளைச் செல்வது தமக்குத் தெரியுமன்றோ?" என்றான். அதற்குப் புகழேந்தியார், அவ்வரசியின் பிரிவுக்காற்றாத நிலையிலிருந்தமையால், சிறிதுவருத்தத்துடன், "ஆம்; தெரியும்," என்று பாண்டியனுக்கு விடையளித்தார். அப்பொழுது வழுதி, அவர் வருத்தத்தை உணர்ந்து, "பெரும் புலவீர், நம் செல்வி தம்மை விட்டுப்பிரிய வருந்துகின்றாள்; அவளுக்குத் தாங்கள் உசாத்துணையாய் இருப்பின் அவள் கவலையின்றி இனிதாகக் காலங் கழிப்பாள்; அன்றியும், தாய் தந்தையராகிய எம் இருவருடைய பிரிவையும் தம்மால் மறந்தும் இருப்பாள் என்று எண்ணுகிறேன். ஆதலின், தாங்கள் அவளுடன் சென்று சிறிதுகாலம் சோணாட்டிலே உறைதல் வேண்டுமென்பது எனது விழைவு," என்றனன். அதுகேட்ட புலவர் மிகவும் மகிழ்ச்சியுடன், "அவ்வாறே ஆகுக. மன்னரேறே, நான் விரும்பிய ஒன்றையே தாங்கள் எடுத்து மொழிந்தீர்கள். ஆதலால், யாதொரு தடையுமின்றி நான் நம் பெண்ணரசியுடன் சென்று ஆங்குச் சிறிதுகாலம் தங்கி இந்நாட்டை அடைவேன்," என்றுரைத்தார். இதனைப் பாண்டியன் மகளுணர்ந்து கழிபேருவகை பூத்தாள். மறு நாள், பாண்டியன் மகள் குலோத்துங்கனுடன் சோழ நாட்டுக்குச் செல்வாளாயினள். புகழேந்தியாரும் உடன் சென்றார்.

சோழநாட்டைப் புகழேந்திப் புலவர் அடைந்ததைக் கண்ட ஒட்டக்கூத்தர் மனங்கலங்கினார். இனிப் புகழேந்தியாரால் தமக்குச் சிறிது குறைவுவரும் என்று அவர் எண்ணி

ஞர். தாம் முன்போலவே தனிப்புலமைசெலுத்த முடியாதென அவருக்குத் தெரிந்தது. தமக்கு ஒட்டிப் பாடுதல் ஒன்றிலேயே அதிக வன்மை இருக்கப் புகழேந்திப் புலவருக்கு ஒட்டிப்பாடுதல், வெட்டிப்பாடுதல் ஆகிய இருதிறத்தினும் பேராற்றல் இருப்பதை அவர் உணர்ந்தார். அதனுல், எவ்வாறேனும் புகழேந்தியாரை ஒடுக்க வேண்டுமெனத் துணிந்தார். அவருக்குக் குலோத்துங்கனிடம் உள்ள செல்வாக்குக்கோ அளவில்லை. அதுகொண்டே தமது கருத்தை முடிக்க வேண்டுமென ஒட்டக்கூத்தர் உன்னி, மெல்லெனச் சோழனுக்குப் புகழேந்திப் புலவர் செருக்குடையரென்றும் பாண்டியரையே சிறப்பிப்பவரென்றும், சோழரைப்பற்றி ஒன்றுமே அறியாதவரென்றும், அதனுல் சோழ மன்னர்பால் அவமதிப்புக் கொண்டிருப்பவர் என்றும், பாண்டியன் முன்னர்ச் சோழ வேந்தரை அவர் இழித்துரைத்தவை இன்றும் தமதுள்ளத்தை அன்றுசொன்னுற்போலச் சுடுகின்றன என்றும், குலோத்துங்கனுக்கு நஞ்சை இடுமாறு வெறுப்பை ஊட்டிவந்தார்; பின்னர்ச் சின்னுட்கள் சென்றதும் புகழேந்திப்புலவரைச் சிறைக்களத்தே உய்ப்பித்தார்.

சிறைப்பட்ட புகழேந்தியார் தமதுதீவினையின் விளைவை எண்ணி வாளாவிருந்தனர். அவருக்குச் சிறைக்கோட்டம் காப்போரால் தரப்படும் உணவு பொருந்தவில்லை. தமிழில் இன்சுவை பெருக்கும் பாவலர், நாவின் அருசுவையிலும் சிறிது பழகியவர். அதனுல் அவருக்குத் துன்பம் மிக்கது. அத்துன்பத்தைத் துடைப்பது எவ்வாறெனநினைந்துப் பார்த்தார். அவருக்குத் துண்ணென ஒரு நினைவு உதித்தது. உடனே அதுதான் தக்கதெனக் கொண்டார். சிறைக்

களம் குளத்துக்குச் செல்லும் வழிக்கரையில் இருந்தது. அங்கிருந்து குளத்துக்குச் செல்வோர் அனைவரையும் பார்த்தற்கு இயலும். ஆதலால், புலவர் பெருமான் பல கணி வழியாக நீர் திரட்டச் செல்லும் பாவையருள் கல்வி அறிவுடையராகக் காணப்பட்ட இரண்டொருவரை விளித்து, அவருக்குப் பாட்டு எழுதிக் கொடுப்பதாகக் கூறினர். அவர்களும் அது கேட்டு உவகை கூர்ந்து, அங்ஙனமே புலவரைச் செய்யும்படி வேண்டிக்கொண்டார்கள். அதனால் தமது கருத்து நிறைவேறும் என்றறிந்த புலவர் பாரதம் போல இனிய கதை இல்லையெனத் தெரிந்து, அதிலுள்ள சில கதைப் பகுதிகளை மாதர் மனோபாவனைக்கு இசைந்தவாறு வெண்செந்துறையில் எளிதாகப் பவளக் கோடிமாலை, அல்லியரசிமாலை, புலந்தரன் களவு முதலிய நூல்களாகப் பாடினர்.

அந்நூல்களைப் படித்துப் படித்து இன்புற்ற அரிவையர் அவருக்கு அருமையாகப் பலவகைப்பட்ட சிற்றுண்டிகளைச் சமைத்துக் கொணர்ந்து கொடுத்தனர். அன்றியும், அவருக்கு வேண்டியபடி முனை முரியாத தூய அரிசியும், தீம்பருப்பும், புத்துருக்கு நெய்யும், வாழை, கத்தரி, முருங்கை, வெண்டை முதலிய காய்கறிகளும், பாறைத்தயிரும், ஆவின் பாலும் கொடுத்து வந்தனர். இவற்றையெல்லாம் வயிறுர உண்டு தேக்கெறிந்து நின்றார் செழுங்கவிவாணர். சிறைக்கோட்டத்துள்ள காவலாளிகள் பலரும் மிகுந்தவற்றை உண்டு வந்தமையான், புலவருக்குக் காவலராய் இருத்தலன்றி அவர்தம் ஏவலராய் இருந்தனர்.

இவ்வாறிருப்புழி, ஒரு நாள் சோழன் உலாப் போந்தான், போந்தவன் சிறைக்கூடத்தேயிருந்து தனது உலா

வைப் பார்த்துக்கொண்டிருந்த புகழேந்திப் புலவரைக் கண்ணுற்றுத் தன்னுடனே போதருங் கூத்தருக்கு அவ ரைச் சுட்டிக்காட்டி, "இவர் பெரும்புலவர் அல்லரோ?" என்று வினவினன், அவன் வினவியவுடனே கூத்த முத லியார் சோழனை நோக்கி,

'மானிற்கு மோஅந்த வாளரி வேங்கைமுன்? வற்றிச்செத்த
கானிற்கு மோஅவ் வெரியுந் தழல்முன்? கனைகடலின்
மீனிற்கு மோவந்த வெங்கட் சுறவமுன்? வீசுபனி
தானிற்கு மோஅக் கதிரோன் உதயத்திற் றார்மன்னனே!'

என்னுஞ் செய்யுளைக் கூறித் தம்மை மேம்படுத்தி அவரை இழித்தனர். அது செவியிலே நுழையப்பெற்ற புகழேந்தி யார் சோழனை உற்று நோக்கி, "மன்னர் மன்னரே, இதனை நான் ஒட்டிப் பாடவோ? அன்றி வெட்டிப் பாடவோ? விடை தருக," என்றனர். குலோத்துங்கன் அவரைப் பார்த்துக் கூத்தர்பாலுள்ள அன்பின் மிகுதியாலும், புல வருக்கு விடையிறுக்கும் உரிமை தரல்வேண்டுவது அரச முறையாதலாலும், "ஒட்டியே பாடுக," என்றுரைத் தான்.

'மான்அவன் நான்அந்த வாளரி வேங்கை;முன் வற்றிச்செத்த
கான்அவன் நான்அந்த எரியுந் தழல்;முன் கனைகடலின்
மீன்அவன் நான்அந்த வெங்கட் சுறவம்;முன் வீசுபனி
தான்அவன் நான்இக் கதிரோன் உதயம்நற் றார்மன்னனே!'

என்னுங் கவியைக் கூறிக் கூத்தர் முகம் கூம்பச் செய்தனர்.

ஒட்டக்கூத்தர் புகழேந்தியாரைச் சிறையிட்டிருத்த லைச் சோழன் குலோத்துங்கன் தெரிந்துவைத்தும், அவ ரைச் சிறைவீடுசெய்யக் காலந்தாழ்த்து வந்தனன். அவன்

அங்ஙனம் இருந்தற்குக் காரணம் புகழேந்திப் புலவரிடம் அவனுக்கு இருந்த வெறுப்பேயாம். அவ்வெறுப்பு ஒட்டக்கூத்தரால் முளைத்து அவன் மனைவியாகிய உலோகமா தேவியின் புகழுரையால் கிளைப்பதாயிற்று.

### புலவனின் பெண்மை

ஒட்டக்கூத்தர், சோழன் அவைக்களத்தைப் பரிசு கருதிப் போதரும் புலவர் பலரையும் ஆராய்தல் வழக்கம். அவர் தம் புலமையைத் தேரும்பொருட்டுக் கடுமையான கேள்விகளைக் கேட்டு, அவர் விடையிறுத்திலராயின், அவரையெல்லாம் சிறை செய்வர்; பின்னர், நாமகள் நவராத்திரி விழாவில் சிறையிட்ட புலவரை வருவித்து, மீண்டும் சில வினாக்களை விடுப்பர்; விடை பகர இயலாதாரை இவ்விருவராகக் குடுமியோடு குடுமி முடிந்து, கலைமகள் திருமுன்னர் அவர்தங் குடுமிகளை மயிர் வினைஞரைற் களைவித்து, அவரை அவமானப்படுத்துவர். இத்தகைய கல்விச் செருக்குக் கூத்தருக்கு உண்டாயது சோழ நாட்டிலே அவருக்கிருந்த செல்வாக்கினாலேயாம். இவ்வழக்கப்படி கூத்தரால் சிறைப்பட்டவர் பலரும் புகழேந்தியார் உடனுறைந்தனர். அவரையெல்லாம் ஒரு நாள் அன்பு கனிந்த நெஞ்சினராகிய புகழேந்திப் புலவர் பார்த்து, இரக்கங்கொண்டு, “அந்தோ! ஏதோ வயிற்றின் கொடுமையால் பாட்டிசைத்துப் பரிசு பெற வந்த இவர்களை அம்மா பாவியாகிய கூத்தன், பேய்க் கூத்தாட்டுக் காண்கின்றனே! இவர் பெருங் கல்வியிலராயின், சிறைப்படற் குரியரோ? சிறிது கற்றதினால் சிறையிடப் பெறுவரேல் ஒன்றுங் கல்லாதார் உயிரழக்க வேண்டும்போலும்! கூத்தன் களிக்கூத்துங் குலோத்துங்கன் செங்கோலும் அழகு! அழகு!! இனி இத்தகைய தீமை வாரா வண்ணம் தடுக்க

நம்மால் இயன்றவரை முயல வேண்டும். கூத்தன் கொட்டம் அடங்கவேண்டும்,' என்று நினைத்து, ஆங்குள்ள புலவர்தம்முள்ள நுண்ணறிவுடையராகவுந் தெள்ளியராகவும் இருந்த அறுவரை வகுப்புவாரியாகத் தேர்ந்தெடுத்து, அவருக்கு அல்லும்பகலும் இலக்கிய இலக்கண நுட்பதிட்பங்களை உணர்த்தி வந்தார். அவர்களும் சில தினங்களில் சிறந்த புலவர் பெருமக்களாய்த் திகழ்ந்தனர்.

சிலர், ஒட்டக்கூத்தர் செய்கையை ஆதரித்தலும் உண்டு. அவர் உண்மை அறியாதவரேயாவர். பெருங்கவிகளோடு என்றும் புன்கவிகளும் இருப்பர். அவரை உலகம் அறிந்துகொள்ள வேண்டுமேயன்றி, அவரை ஒறுத்தல் அறனன்று. மொழி வளர்ச்சியும் அதனால் மட்டுப்படும். தக்க புலவரை ஆதரிக்க வேண்டுவது அரசனுக்கும், பொது மக்களுக்கும் உரிய கடமையாம். அரசன் பெருமைப்படுத்தினால் அனைவரும் புலவர் பெருமையை அறிந்து மதிப்பர். ஆதலின், என்றுஞ் சிறிது கல்வியுடையாரை இகழ்ந்து அவரை அடக்குதல் நன்றன்று. எனவே, கூத்தர், பிள்ளைப் பாண்டியன், வில்லி முதலியோர் செய்தனவாக வழங்கும் செய்கைகள் கொள்ளப்படுவனவல்ல.

ஐப்பசி பிறந்தது. கூத்தர் கலைமகள் நவராத்திரி விழாவைச் சிறக்கச் செய்வதிலே முனைந்து நின்றார். பொருள்கள் எல்லாம் தொகுக்கப்பட்டன. கரணம் இடப்பட்டது. இறைவிக்கு விழாமண்டபம் சமைக்கப்பட்டது. பந்தரின் அழகும், மண்டபத்தின் கோலமும் பார்ப்பவர்கள் கண்களைப் பறித்தன. இறைவி திருக்கோலம் எல்லாவற்றினுஞ் சிறந்து இலங்கிற்று. விழாத்தொடங்கி இனிது நடைபெற்று வந்தது. அப்பொழுது கூத்தர் முதலியோர் சிறைபிடுவித்த புல

வருள் புகழேந்தியார் நீங்கலாக ஏனையோரைத் தருவித்தனர். அவருள் முதன்முதல் புகழேந்தியாரால் புலமை நிரம்பப் பெற்ற குயவன், அம்பட்டன், கருமான், தச்சன், வண்ணான், வேளாளன் ஆகிய இவரையே சிறைக்கோட்டக் காவலர் புகழேந்தியார் விழைந்த வண்ணம் அனுப்பினர். அப்போது கூத்தர் புலமைக்கோலம் நிரம்பி நின்று, முன்னே கொண்டு வந்து நிறுத்தப்பட்ட குயவனை ஏறிட்டுப் பார்க்க, அவன் கும்பிடின்றிச் செருக்கி நிற்றலை நோக்கி, பெருமிதம் மிக்க குரலுடன்,

> 'மோனை முத்தமிழ் மும்மத மும்பொழி
> யானை முன்வந் தெதிர்த்தவன் ஆரடா ?'

என்று இடியிடித்தாற்போலக் கூறினர்.

அதற்கு அவன் சிறிதும் அஞ்சாது அவரை நேரே நோக்கி,

> 'கூனை யுங்குட முங்குண்டு சட்டியும்
> பானை யுஞ்செய்யும் அங்குசப் பையல்யான்.'

என்று விடையிறுத்தான். அதில், 'யானையின் மதத்தை அடக்கும் அங்குசம் போன்றவன் யான்,' என்றும், 'அழகிய குசப்பையல் யான்,' என்றும் இருபொருள் அமைந்திருத் தலைக் கண்டு கூத்தர் வெட்கி, அவனை ஒரு புறம் நிற்குமாறு பணித்தார். உடனே கண் பொட்டையான அம்பட்டன் அவர் முன்னே வந்து கையெடுக்காது நின்றான். அது நோக்கிய கூத்தர் வெகுண்டு,

> 'விண்பட்ட கொக்குவல் லூறுகண் டென்ன விலவிலக்கப்
> புண்பட்ட நெஞ்சொடும் இங்குநின் றாய்பொட்டை யாய்புகலாய்!'

என்றனர். என்றதும், அந்நாவிதன் நா விதம்பட,

'கண்பொட்டையாயினும் அம்பட்டன் நான்கவி வாணர்முன்னே
பண்பட்ட செந்தமிழ் நீயுந் திடுக்கிடப் பாடுவனே!'

என்று பாடினன். அவனையும் அப்புறம் செல்ல விடுத்துக் கூத்தர் மூன்றாவதாக வந்த இருப்புக்கொல்லனை நோக்கி, "நீ யார்?" என வினவினர். அவனும் கூத்தரை மதியாது, அவர் கேட்ட கேள்விக்கு விடையாக,

செல்வன் புதல்வன் திருவேங் கடவன் செகத்குருவாங்
கொல்லன் கவியைக் குறைசொல்லு வோரைக் குறடுகொண்டு
பல்லைப் பிடுங்கிப் பருந்தாட்ட மாட்டிப் பகைவர் முன்னே
அல்லும் பகலும் அடிப்பேன் கவியிருப் பாணிகொண்டே.'

என்றான். கூத்தருக்குச் சினமூண்டது; தீயெழ விழித்தார்; உடம்பெலாம் வியர்த்தார். அவனையும் போக விடுத்து மற்றவனை அழைக்கத் தச்சன் வந்து எதிரே நின்றான். அவனையும் யாரெனக் கூத்தர் வினவ அவன்,

'சொன்னசந் தக்கவி யாவருஞ் சொல்லுவர் சொற்சுவைசேர்
இன்னசந் தக்கவி யாதென்ற போதில் எதிர்த்தவரை
வன்னசந் தங்கெட வாயைக் கிழித்திந்த வாய்ச்சியினல்
கன்னசந் தங்களி லேகவி யாப்பைக் கடாவுவனே.'

என்றொரு செய்யுள் பாடினன்.

இதைக் கேட்ட கூத்தர், 'இஃதென்ன! வியப்பாய் இருக்கின்றது! பயல்கள் எல்லாரும் அச்சம் சிறுதுமின்றிச் செய்யுள் கூறத் தொடங்கிவிட்டனரே!' என்றுள்ளம் விதிர்த்துப் பிறனொருவனைத் தருவிக்க, வண்ணான் வந்து இறுமாந்து நின்றான். அவனைக் கவிஞர், "நீ யாரடா, ஆணவப் பேயே," என்று வினவினர். அதற்கு அவன்,

'சேலேய் விழிமட வாரிற்செங் கால் அன்னஞ் சேர்பழனப்
பாலேய் மணவையிற் கூத்தநின் போலியார் பார் புனைந்த
நூலேய் துகளுகத் தூய்தாக்கு நோன்மை நவல்வதல்லால்
மேலோய் தமிழ்ப்புல வோர் என்னை யென்ன விளம்புவதே?'

என்னும் பாட்டைப் பாடினான். அதன் கண் கூத்தர் குலம் செங்குந்தர் குலமாதலுந் தான் வண்ணான் ஆதலும், நூல் நெய்வோர் செங்குந்தரும், அதிலுள்ள மாசை ஒழித்துத் தூய்மை செய்வோர் வண்ணாரும் ஆதலின் கூத்தரது பாட்டிலுள்ள மாசை நீக்கித் தூய்மை செய்ய வல்லவன் தானே என்பதும் குறிக்கப்பட்டிருத்தலைக் கண்ட புலவர், 'அப்பா! இவன் மாதுட்டன்!, என்றெண்ணி, அவனை விடுத் தொழித்தனர். பின்னர் எதிர் நின்ற வேளாளனை நோக்கி, 'மகா வித்துவானாகிய நம் முன்னர் நீ புலவனென வருதல் அழகோ?' என்று கேட்டனர். அது கேட்ட வேளாளன் அவரை நோக்கி,

'கோக்கண்ட மன்னர் குரைகடற் புக்கிலர் கோகனகப்
பூக்கண்ட கொட்டியும் பூவா தொழிந்தில பூவில் விண்ணோர்
காக்கண்ட செங்கைக் கவிச்சக்ர வர்த்திநின் கட்டுரையாம்
பாக்கண் டொளிப்பர்க ளோகவி பாடிய பாவலரே.'

என்னும் பாட்டால், 'தாமரை பூத்தலைக் கண்டு அதனிற் சூழ்ந்த கொட்டி பூவாது நிற்றல் இல்லை; மூவேந்தரைப் பார்த்துக் குறுநில மன்னர் கடல் புகுந் தொளித்திலர்; பெரும் புலவராகிய நுங்கவியைக் கண்டு பாவலர் யாரும் பதுங்கமாட்டார்; இஃது உலகவியற்கை,' என்னும் உண்மையை விளக்கினன். அன்றியும் வேளாளன், கூத்தரை இம்மட்டோடு விடலாகாதென நினைந்து அவரைப் பார்த்து, "ஐயா, கவிச் சக்கரவர்த்தியே, நீவிர் சோழ மன்னன் மேற் பாடிய 'அண்டத்துப் பரணி' என்னும் நூலில், இவ் வண்

டத்தை நகராகவும், சக்கரவாளக்கிரியை மதிலாகவும், அதற்குட்புறத்தேயுள்ள கடலை அகழாகவும், பூமியின் நடுவணுள்ள மேருமலையைக் கோட்டைக் கொடிக் கம்பமாகவும் உருவகப்படுத்தி, மதிலின் புறத்திலே இருப்பதாகிய அகழை அதனகத்தே இருப்பதாகக் கூறியது குற்றமன்றோ? இதனை ஆராய்ந்து கூற இயலாத நீர் எம்போன்ற புலவரை அடக்கக் கருதித் தகாதென செய்தல் தக்கதன்று," என இடித்துரைத்தனன்.

அதைக் கூத்தர் கேட்டலும் அவரைப் பற்றியிருந்த அகங்காரப்பேய் கால் விட்டு ஓடியது. அவர் மனம் தாழ்ந்தது; அவன் சொன்னவை யாவும் உண்மையே எனத் தெளிந்தார்; பிறகு அவனுக்கு மிக்க பரிசில் வழங்கி விடுத்து, மற்றவரையும் வருவித்து மிக்க பரிசளித்து அனுப்பினர்; அன்று முதல் இக்கொடிய வழக்கத்தையும் அறவே விடுத்தார். ஆனாலும், புகழேந்தியாரை மட்டும் சிறைவீடு செய்திலர்; இவை அனைத்தும் புகழேந்தியரால் நிகழ்ந்தன என்று நினைந்து, அவர் மீது மேலும் பகை கொண்டிருந்தார்.

நாட்டிலே நடப்பது ஒன்றும் அந்தப் புரத்துக்கு எட்டுவதில்லை. அரசியற் செய்திகள் அந்தப்புரத்தே இருக்கும் அரசிக்குத் தெரிவது அருமை. மணமுடிந்த இரண்டு மூன்று திங்கள் வரையில் சோழன் தேவி, வேட்டகத்து ஒழுக்கங்களையே நோக்கிக் கொண்டிருந்தனள்; நாடோறும் வரும் விருந்தினருடன் உரையாடுவதிலும், ஆள் அடிமை முதலியவர்களைச் சீர்திருத்துவதிலும், குலோத்துங்கனுடன் மகிழ்வோடு குலாவிச் சோலைகளிலும், வாவிகளிலும் விளையாடுதலிலும் பொழுது போக்குவள். புத்தகத்தைத் தொடு

வதற்கும் அரசிக்கு நேரமில்லை. அதனால் சோணாடு சேர்ந்த பின்னர் இரண்டொருமுறை புகழேந்தியாரைப் பார்த்ததன்றிப் பின்னர்ப் பார்க்கவேயில்லை. ஆனால், புலவர் நன்மதிப்புடன் எல்லாத் துப்புரவுடனும் இனிதுறைகின்றாரென அவள் எண்ணியிருந்தாள். புலவர் சிறைக்களத்தே வைக்கப்பட்ட செய்தி மாதேவிக்குத் தெரிந்திலது. இவ்வாறிருப்பச் சிறையினின்றும் விடுபட்ட புலவர் ஒருவர் எவ்வாறேனும் புகழேந்தியார் சிறைப்பட்டிருத்தலைத் தேவிக்கு உணர்த்தவேண்டுமெனத் துணிந்து, செவ்வி அறிந்து செப்பிவிட்டனர். இதனையறிந்த அரசி பெரிதும் வெகுண்டாள். அவள் கண்கள் சிவந்தன; புருவம் நெரிந்தது. 'இத்தகைய கொடுமையைப் புலமைக் காய்ச்சலால் ஒட்டக் கூத்தர் இழைக்க மன்னவர் இடந் தந்தனரே!' என்று வேந்தன்மேல் சீற்றங்கொண்டாள். அவளுக்கு உள்ளம் வெதும்பியது, 'புகழேந்தியார் யாது நினைப்பார்! என வாடினாள்; 'அவர் என்னென்ன இன்னலை அடைந்தனரோ!' என எண்ணி இரங்கினாள்; மனம் அழுங்கினாள்; உடனே தன் தோழியை அழைத்து, 'அடி வயந்தமாலை, நமது அந்தப்புரத்தின் பொற்கதவைத் தாழிடுக; மன்னவர் நமது உவளகம் புகாதவாறு தடை செய்க,' என்று கட்டளையிட்டுத் தனியாக மஞ்சத்தின்மீது சாய்ந்து பாவைபோலச் செயலற்றுக் கிடந்தாள்.

சிறிது நேரஞ் சென்றதும், குலோத்துங்கன், தேவியின் அந்தப்புரத்தை அடைந்தான்; அப்போது உவளகம் அடைக்கப்பட்டிருத்தலைக் கண்டு பல முறை கைம்மலர் சிவக்கத் தட்டினான்; எவரும் கதவந் திறப்பாரில்லை; ஏதேதோ செப்பினான்; ஒன்றும் தேவி செவியில் நுழைய

இல்லை. பின்னர் வேந்தன் அந்தப்புரம் விட்டுத் தன் அரண் மனையைச் சேர்ந்து, தேவியின் ஊடலுக்குக் காரணம் யாதென ஆராயலுற்றான். அரசர் தேவியர்க்கு யாதேனும் குறை நேர்ந்தால் அவர்கள் கதவடைத்தல் அக்காலத்து வழக்கம். அவ்வூடலைத் தீர்ப்பதற்குப் புலவர், பாணர் முதலியோர் செல்லுவர்.

ஆதலால், மறு நாள் சோழனுடன் தன் அருமை ஆசிரியராகிய ஒட்டக்கூத்தரை வருவித்து, தன் தேவியின் பிணக்கினை எடுத்து மொழிந்து, அவள் கோபத்தைத் தணிப்பிக்குமாறு அவரை அவளிடம் செல விடுத்தான். அவரும் உடனே அந்தப்புரஞ் சேர்ந்து, அடைக்கப்பட்டிருக்குங் கபாடத்தருகே நின்று,

'காரத்துஞ் சிரத்துங் களிக்குங் களிற்றுடைக் கண்டன் வந்தான்
இரத்துங் கபாடம் இனிதிறப் பாய்பண்டு இவன் அணங்கே
உரத்துஞ் சிரத்துக் கபாடந் திரந்திட்ட துண்டு இலங்கா
புரத்துங் கபாட புரத்துங்கல் யாண புரத்தினுமே.'

'நானே இனியுன்னை வேண்டுவ தில்லை நளினமலர்த்
தேனே கபாடந் திறந்துவி டாய்செம்பொன் மாரிபொழி
வானே றனைய இரவி குலாதிபன் வாசல் வந்தால்
தானே திறக்குமுன் கையித ழாகிய தாமரையே.'

என்னும் இனிய செய்யுளால் தேவியின் இழுக்கையும், அவளுக்கு வேந்தன் பால் இருக்கும் காதன்மையும், குலோத்துங்கன் சிறப்பையும் அமைத்துப் பாடினார். இது கேட்ட அரசி தோழியை விளித்து, ஆங்குப் பாட்டிசைப்பார் யாரெனக் கேட்க, அவள் ஒட்டக்கூத்தரென உரைத்தனள். அதைக் கேட்டவுடனே கொதித்து, 'ஒட்டக்கூத்தர் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள் இடுக,' என்றனள்.

அவ்வாறே தோழியும் இரட்டைத் தாழிட்டு நன்றாக இறுக்கினாள். ஒட்டக்கூத்தர், அரசிக்குத் தம் மாட்டுள்ள வெறுப்பை அறிந்து நாணி, வேத்தவை குறுகிக் கோமகனுக்கு நிகழ்ந்தவற்றை விளம்பினார்.

சோழன், 'ஒட்டக்கூத்தர் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்,' என்று கூறியதன் கருத்து, புகழேந்தியார் சிறைவீடேயாகும் எனத் தெளிந்து, அவரை உடனே சிறைவீடு செய்து தன்முன் அழைத்து வரும்படி ஆணை இட்டான். ஏவலாளரும் அங்ஙனமே செய்யப் புகழேந்திப் புலவரும் புரவலன் முன்னர்ப் போந்தனர். அரையன் அவரை ஓர் உயரிய இருக்கையிலே அமர்வித்துத் தான் தெரிந்தும் தெரியாததும் இழைத்த குற்றங்கள் எல்லாவற்றையும் பொறுத்தருளுமாறு குறையிரந்து வேண்டினன். புலவர், அவனை நோக்கி, 'சோழர் பெருமானே, இதுபற்றிக் கவல வேண்டா; இறைவன் செயலேயாகும். எஃது எக்காலத்து நிகழுமோ, அஃது அக்காலத்து நிகழ்ந்தே தீரும். 'ஊழிற் பெருவலி யாவுள ?' ஆருயிர் 'நீர் வழிப்பட்ட மிதவை' போல ஊழ் வழிப்பட்டதே. இது நிற்க. இப்பொழுது என்னைத் தாம் அழைத்த காரணத்தை அறிவிக்க வேண்டுகின்றேன்." என்றார். சோழன் அவர் தம் அடக்கத்தையும், இனிய குணத்தையுங் கண்டு, அவரைப் பார்த்து, "புலவர் பெருமானே, இப்பொழுதுதான் தமது பெருந்தகைமையை அறிந்தேன்; அரசி கூறியவை அனைத்தும் மெய்யெனத் தெளிந்தேன். இதுகாறும் நான் தம்மைப்பற்றிக் கொண்டிருந்த எண்ணம் மிகவும் தவறுடைத்து," என்று மதுரமாகப் பேசினான். பின்னர் மன்னன், புலவருக்குத் தேவியின் ஊடலைக் கூறி, அவரை அவ

னிடம் செல்லுமாறு வேண்டினன். அவரும் அதற்கிசைந்து உடனே அந்தப்புரம் குறுகி வாயிலே நின்று,

'இழையொன் றிரண்டு வகிர்செய் தவற்றோன் றினையுமிடை
குழையொன் றிரன்டுகெட் கொம்பனை யாய்கொண்ட கோபந் [தவிர்
மழையொன் றிரண்டுகை மானப ரன்கண்டன் வாயில் வந்தால்
பிழையொன் றிரண்டு பொறுப்பதன் றோகடன் பேதையர்க் [கே?'

'தீபங் கமழும்பைங் கோதையன் விக்ரம சோழ மன்னர்
தீபன் புறங்கடை வந்துநின் றான்நின் திருப்புருவச்
சாபங் குனிய விழிசிவப் பத்தலை சாய்த்துநின்ற
கோபந் தணிஅன்ன மேளனி தோரங் குடிப்பிறப்பே.'

என்னும் வண்டமிழ்ப் பாடல்களால் பாண்டியன் மகளின் அருங்குணத்தைப் பாராட்டிக் கதவைத் திறக்கும்படி அரசியை வேண்டினார். அவற்றைச் செவிமடுத்த அரசி வயந்தமாலையால் வந்தவர் புகழேந்தியார் எனத்தெரிந்து உடனே கடாடந் திறப்பித்து, புலவர் எதிர்வந்து அவரை வணங்கிப் புலம்பினாள். புலவர், சிறு குழவிபோல வருந்திய அரசிக்கு ஆறுதல் கூறித் தாம் சிறைக்கோட்டம் புக்கதும், நங்கைப் பாட்டுப் பாடியதும், புலவரைப் பயிற்றுவித்ததும், கூத்தர் செருக்கைக் குலைத்ததும் முறைமையாக எடுத்திசைக்கப் பாண்டியன் மகள் பேருவகை பூத்தாள். அதுமுதல் புகழேந்தியார் சோழ மன்னன் அவைக்களப் புலவராய் அமர்ந்ததோடு, கூத்தரினும் நன்மதிப்புடையவராய் விளங்கினார். குலோத்துங்கனும் தன் தேவியின் ஊடலைத் தவிர்த்து, தான் அறியாது புரிந்த குற்றங்களைப் பொறுக்குமாறு தேவியை வேண்டினான்.

ஒருநாள் அரசனும் தேவியுஞ் சொற்கேட்டான் ஆடினர். அப்பொழுது புலவர் அங்கே இருந்தனர். குலோத்துங்கன் ஆட்டத்தில் தோற்றான்; தேவியே வென்றாள். அஃதறிந்த புகழேந்தியார் தேவியை வியந்து,

'பழியும் புகழு மெவர்க்குமுண் டாம்இந்தப் பாரிலுனக்கு
அழியுஞ் சிலையுங் கயலுமென் றேஅக ளங்கதுங்க
பொழியும் பொழுதெங்கள் பெண்சக்ர வர்த்தி முகத்திரண்டு
விழியும் புருவமு மாகிஇப் போதுன்னை வெல்கின்றவே.'

என்று பாடினர்.

நளவெண்பா

இங்ஙனம் சிறிது காலஞ் சென்றதும், புகழேந்திப் புலவரும் சோணாட்டை விட்டுப் பாண்டி நாட்டுக்குப் போக எண்ணினார். அவருக்குச் சோழ நாடு அத்துணை இன்பமாகத் தோன்றவில்லை. செல்வழி மள்ளுவநாட்டை ஆளும் சந்திரன் சுவர்க்கியைக் கண்டார். அவனிடம் செல்ல, அவ்வேந்தல் அவரைப் பெரிதும் போற்றி, ஆதரித்துத் தன் நகரிலேயே தங்கியிருக்கும்படி மிகவும் வேண்டினன். அவன் வேண்டுகோளுக்கிசைந்து, புலவர் அந்நாட்டிலே சிறிது காலம் கழிக்க எண்ணி, அங்கே அமர்ந்து, இனிது உறைவாராயினர்.

சந்திரன் சுவர்க்கி ஒருநாள் புலவரை அண்மி, 'பாவலர் வேந்தே. பாரதத்திலேயுள்ள நளன் கதையைச் சுருக்கமாகப் பாடிமுடித்தால் எல்லாரும் தமது நாப்புலமையை உணர்வர்,' என்று கூறினன். புலவர் பெருந்தகையும் அம்மன்னவன் செவ்விய உள்ளத்தைப் பாராட்டி, அவன் பெருமையும் உலகுள்ளளவும் நிலைபெற வேண்டுமென நினைத்து, நளன் கதையை நானூற்றுச் சில்லறை வெண்பாக்களாகச் சொற்சுவை, பொருட்சுவை சொட்டி வழியப்

பாடி முடித்தார். அவ்வினிய அரிய நூலிலே அமைந்துள்ள கருத்தழகும், ஓசையினிமையும் கேட்போர் மனத்தைப் பிணிக்கத்தக்கன. அதிலே மள்ளுவநாட்டு மன்னனும் சந்திரன் சுவர்க்கியின் நன்றியையும் பாராட்டிப் புலவர் ஆண்டாண்டுச் செய்யுட் புனைந்தனர். அதிலுள்ள அரும் பெரும் பாடல்கள் சிலவற்றைத் தாலி புலாக நியாயமாக ஈண்டுத் தருவோம்: இவற்றைக்கொண்டு பிறவற்றின் சுவையையும் படித்துணர்க.

சந்திரன் சுவர்க்கியைப் பற்றியது

'வண்டார் வளயவல்சூழ் மள்ளுவநாட் டெங்கோமான்
தண்டார் புனைசந் திரன்சுவர்க்கி—கொண்டாடும்
வாவலன்பால் நின்ற பசிபோல நீங்கிற்றே
காவலன்பால் நின்ற கலி.'

அவையடக்கம்

'வெந்தறுகண் வேழத்தை வேரிக் கமலத்தின்
தந்துவினுற் கட்டச் சமைவதொக்கும்—பைந்தொடையில்
தேன்பாடுந் தார்நளன்றன் தெய்வத் திருக்கதையை
யான்பாட லுற்ற விது.'

திருமாலைக் குறித்தது

'நாராய ணாய நமவென் றவனடியிற்
சேராரை வெந்துயரஞ் சேர்ந்தாற்போல்—பாராளுங்
கொற்றவனைப் பார்மடந்தை கோமானை வாய்மைநெறி
கற்றவனைச் சேர்ந்தான் கலி.'

தமயந்தியின் அழகு

'அழகு சுமந்திளைத்த ஆகத்தான் வண்டு
பழகு கருங்கூந்தற் பாவை—மழகளிற்று
வீமன் குலத்துக்கோர் மெய்த்தீபம் மற்றவளே
காமன் திருவுக்கோர் காப்பு'

### செஞ்சுடர் மறைவு—

வையம் பகலிழப்ப வான மொளியிழப்பப்
பொய்கையும் நீள்கழியும் புள்ளிழப்ப—பையவே
செவ்வாய அன்றில் துணையிழப்பச் சென்றடைந்தான்
வெவ்வாய் விரிகதிரோன் வெற்பு.'

### நளன் தமயந்தியைப் பிரிதல்

'போயொருகால் மீளும் புகுந்தொருகால் மீண்டேகும்
ஆயர் கொணர்ந்த அடுபாலின்—தோயல்
கடைவார்தங் கைபோல ஆயிற்றே—தோயல்
வடிவாய வேலான் மனம்.'

இச்சிறந்த காப்பியத்தைச் சந்திரன் சுவர்க்கி அவைக்களத்தே புகழேந்திப் புலவர் அரங்கேற்றினர். அவர் அங்ஙனம் அரங்கேற்றிப் பொருளுரைத்து வருகையில், ஒவ்வொருவரும் பாட்டுகளின் அருமை பெருமைகளை வியந்து புலவரைக் கொண்டாடினர். சந்திரன் சுவர்க்கியும் பேரின்பம் அடைந்து, புலவர் பெருமானுக்குத் தக்க பரிசில்களை அவர் வெறுக்குமாறு வழங்கினன். இதனுல் பெரும்புகழ்ச்சியிலே தலை தூக்கி நின்றனர். புகழேந்திப் புலவர். சிறிது காலஞ் சென்றதும் புகழேந்திப் புலவர் பாடிய நளவெண்பாவின் விஞ்சிய சுவை எங்கும் பரவிற்று. சோணுட்டிலும் பலர் அதன் அருமை பெருமைகளை வியந்து கொண்டாடுவாராயினர். அதனுல் குமார குலோத்துங்கனும் அவன் கற்பிற் சிறந்த மாதேவியும் புகழேந்திப் புலவர் நளவெண்பாப் பாடிய செய்தியை அறிந்து அகமகிழ்ந்தனர். அவரைத் தம் நாட்டுக்குத் தருவித்து அவரால் அந்நூலை அரங்கேற்றுவிக்கக் கருதிச் சோழன் அவருக்குப் பன்முறை திருமுகம் விடுத்தனன் அவன் தேவியும் அவர் வருகையைத் தான் நாடி-

நிற்றலை அறிவித்தாள். கூத்தர் குணம் தமக்குப் பொருந்தாமையால் அங்குச் செல்லப் புலவருக்கு ஒருப்பாடு இல்லையெனினும் அரசன் அரசியாகிய இருவருடைய வேண்டுகோளையும் பின்முறையும் மறுத்தற்கியலவில்லை. அதனால், மள்ளுவ நாடனிடம் விடை பெற்றுக்கொண்டு உறையூரை அடைந்தனர்.

சோழன் அவர் வருகையைப் பெரிதும் போற்றிச் சிறப்புக்கள் செய்தான். அரசியும் அவரை விரும்பி ஏற்று விருந்தளித்தாள். பின்னர்த் தாம் பாடிய நளவெண்பாவிலுள்ள சில பாடல்களைப் புலவர் சொல்லக் கேட்ட அரசி, சாலவும் இன்புற்று, அந்நூலைச் சோழன் இவையில் அரங்கேற்றுவித்தல் வேண்டுமென்னுங் கருத்தைக் குமார குலோத்துங்கற்கு நினைவுறுத்தினள். அவ்வண்ணலும் அதற்கிசைந்து நன்னாள் ஒன்றைத் தேர்ந்தெடுத்து, அரங்கேற்றத்துக்கு வேண்டும் சிறப்புக்களை எல்லாங் குறைவற முடிப்பித்தனன்.

பின்னர்க் குறித்த நாளில் நளவெண்பா அரங்கேற்றம் செய்யப் பெறுவதாயிற்று. அப்போது அவைக்களத்திலே புலவர் பல்லோர் நிரம்பியிருந்தனர். ஒட்டக்கூத்தரும் வீறுடன் அமர்ந்திருந்தனர். புகழேந்தியார் நூற்பொருள்களை எடுத்து மொழிந்து வருங்காலத்து, அனைவரும் நவரசம் ஒழுகும் வெண்பாக்களைக் கேட்டுக் கேட்டுக் களிப்பு மிகுதலைக் கண்ட ஒட்டக்கூத்தருக்குச் சிறிது அழுக்காறு உண்டாயிற்று. தம்மினும் புகழேந்தியார் உயர்ந்துவிடுவரோவென எண்ணி உள்ளம் ஒடுங்கினர். அதனால் அவர் நளவெண்பாவிலே குற்றமென்று சிலவற்றை ஆங்காங்குக் கூறத் தொடங்கினர். புகழேந்தியார்,

மல்லிகையே வெண்சங்கா வண்டூத வான்கருப்பு
வில்லி கணை தெரிந்து மெய்காப்ப—முல்லைமலர்
மென்மாலை தோளசைய மெல்ல நடந்ததே
புன்மாலை அந்திப் பொழுது.'

என்னுஞ் செய்யுளைக் கூறிப் பொருள் விரிப்புழி, கூத்தர் புகழேந்தியாரை நோக்கி, 'ஐயா, புலவரே, மல்லிகையை வெண் சங்காகவும், வண்டை ஊதுவோனாகவும் நீர் உருவகஞ் செய்தது பொருந்தாது. ஏனெனில், உலகத்துச் சங்க நாதஞ் செய்வோர் அதன் கீழ்ப்புறத்தே வாய் வைத்தூதுவர்; வண்டோ, மலரின் மேலிருந்தே ஒலி செய்யுமாதலின் என்பது. ஆகவே, இவ் வருணனை முற்றும் தவறு,' என்றனர். அதனைப் பொறுமையுடன் கேட்ட புலவர், கூத்தரை நோக்கி, "புலவரே, நீர் 'எல்லியம்போ திருஞ்சிறை வண்டெம் பெருமான் குணம் மல்லிகை வெண் சங்கூதும் மதிலரங்க மென்பதுவே,' என ஆழ்வார் அருளிச் செய்த திருப்பாசுரத்தை அறிந்திலீர் போலும்! 'நாம் சைவராதலின் புறச் சமயத்தார் நூல்களைக் கையாலுந் தொடோம்' என்பீராயின், 'மல்லிகைப்போதில் வெண் சங்கம் வண்டூத' என்னுந் திருச்சிற்றம்பலக் கோவையாரையேனுங் கண்டிருப்பீரன்றே! அப் பெரியார் திருவாக்குக்களுக்கும் இங்ஙனமே குற்றங் கூற முன் வருவீரோ?" என்று கூறக் கூத்தர் அடங்கினர். பின் 'திங்கட் சுடர் பட்டுக் கொப்புளங் கொண்ட குளிர்வானை' என்ற அடிகளைக் கூறுகின்ற போது, கூத்தர், 'கொப்புளமாயின் சீ வடிய வேண்டுமே!' என்றனர். என்னலும் புகழேந்தியார், 'ஆம், பனி நீர் வடிகின்றதே!' என்றனர். இவ்வாறெல்லாம் சில குற்றங்களைக் கூத்தர் எடுத்துக் காட்டப் புலவர்

அவற்றுக்கெல்லாம் தக்க விடையிறுத்துத் தம் புகழ் நிறு வினர். அனைவரும் இன்பக் கடலில் ஆடினர். குலோத் துங்கன் புலவருக்கு அரும் பெருப்பரிசில்கள் பலவற்றை வழங்கினான். சோழன் தேவியும் அரங்கேற்றத்துக்குப் போந்திருந்து செவி குளிரக்கேட்டு மனமுவந்தாள்.

ஒட்டக்கூத்தர் வாடிய முகத்துடன் தமது மனைக்குச் சென்று ஒருவருடனும் உரையாடாமல், மஞ்சத்தின் மீது சாய்ந்து கிடந்தார்; இரவு பத்து நாழிகையாகியும உணவு கொள்ளப் போந்திலர். அதனால் அவர்தம் இல்லக் கிழத்தி அவர் இருப்பிடம் சென்று அவரை உண்ணுமாறு வேண்டி னள். அவர், தமக்கு ஊண் விருப்ப மில்லை யென்றும் அதனால் அன்று பட்டினி கிடத்தலே தகுதி யென்றும் உரைத்தனர். அது கேட்ட தலைவி, சிறிது பாலேனும் பருகவேண்டுமென வற்புறுத்தலும், கூத்தர், 'புகழேந்தி பாடிய நளவெண்பாவின் இரசத்தைப் பிழிந்து கொடுத்தா லும் எனக்கு இப்போது வேண்டா,' என்றனர். அச் சொற்களைக் கேட்ட துணைவி தன் கொழு நருக்கு நள வெண்பாவிலுள்ள விருப்பத்தை உணர்ந்து, அந்நூலைப் பற்றிப் பலவற்றையும் அவரிடம் கேட்டு மகிழ்ந்தாள் வெளிப்படையாக நளவெண்பாவிற்குக் குற்றங் குறை கூறினரேனும், அதன் உண்மை இயல்பைக் கூத்தரைப் போலத் தெரிந்து நுகர்ந்த கல்வியறிவும் நுண்ணறிவு முடையார் வேறு எவரும் இலர்.

'புலமிக் கவரைப் புலமை தெரிதல்
புலமிக் கவர்க்கே புலனாம்.'

என்பது பழமொழி அன்றோ?

இந்நிகழ்ச்சியைக் கூத்தர் மனைவி அரசிக்கு உணர்த்த அரசியால் புகழேந்திப்புலவரும் அரசனும் அறிந்தனர். அன்று முதல் புகழேந்தியாருக்குக் கூத்தர் மாட்டு இருந்த வெறுப்பு நீங்கிற்று. கூத்தரும் புகழேந்திப் புலவரை விரும்பத் தலைப்பட்டனர். இச்செவ்வியல் குலோத்துங்கன் இவ்விருவருக்கும் நேசப் பான்மையை உண்டாக்கும்பொருட்டுப் பலவாறு முயன்று வந்தான். அவன் செய்கையால் இருவரும் கெழுதகை நண்பராயினர். ‘கல்லாதார் இணக்கத்தினும் கற்றார் பகை’ சிறந்ததென்பது பொருளுரையே ஆகும்.

இவ்விரு பெரும்புலவரும் தம்முள் மனமொத்து வாழ்ந்தமைமான் சோழன் அவை மிகச் சிறந்து விளங்கியது. இவர்கள் பாடும் நாட்செய்யுட்கள் சொற்சுவை, பொருட்சுவை முதலியவற்றால் கனியோங்கிச் சோழனையே அன்றி அவைக்களத்தினர் யாவரையும் மகிழ்வித்தன. இவ்வாறு இவர் வாழ்ந்து வருங்கால் ஒருகால் சோழன்; திருநெய்த்தானம் என்னுஞ் சிவ தலத்துக்குச் சென்று வழிபாடு புரிந்த போது அவனுடன் சென்ற புகழேந்திப் புலவர்,

‘தற்கோ விப்பூ சற்பா சத்தே தப்பா மற்சா கைக்கே நிற்பீர்
முற்கோ விக்கோ விப்பூ சித்தே முட்டா மற்சே வித்தே நிற்பீர்
வற்றா னெட்டோ டைப்பா ரைச்சேன் மைப்பூ கத்தே மித்தா
[விப்போய்
நெற்றா ளுற்றா லைப்பா கிற்சேர் நெய்த்தா னத்தா னைச்சே
[விதலே

என்றொரு யாப்பிசைந்து ஐயனைப் பரவி மெய்ம்மயிர் சிலிர்த்தினர்.

மற்றொருகால், திருக்குறுங்குடிக்குச் சென்று, ஆங் கெழுந்தருளியிருக்கும் பெருமான்மீது,

‘ எட்டெழுத் தைக்கருத் திற்குறித் திட்டுநித் தம்பரவுஞ்
சிட்டர்கட் குத்திருப் பொற்பதத் தைச்சிறந் கத்தருமவ்
வட்டநெட் டைப்பணி மெத்தையத் தற்கிடம் வாரிசப்பொ
குட்டினத் துக்குலந் தத்திமுத் தீனுங் குறுங்குடியே.’

என்னும் இனிய கவி இசைத்து மனங் கசிந்தனர்.

பின் ஒருகால் அரசன் இரவில் பவனி வரும்போது புலவரை நோக்கி, ‘குடை நிழலில் இரவில் பவனி வருதல் தவறன்றோ?’ எனக் கேட்கப் புலவர் அவனை நோக்கி, அது தவறன்றெனக் காரணங் கற்பித்து,

‘ அண்டமீ துலவி வாழும் அருந்ததிக் கற்பா ளுன்னைக்
கண்டதா லுவகை யெய்திக் கற்பழிந் திடுவ ளென்றே
வண்டிகை புரக்கும் வேந்தாய் இரவினிற் கவிகை நீழல்
கொண்டுமா நடாத்து மாறு குலோத்துங்கா நீதிதானே’

என்று பாடினர்.

அரசன் துலாபார தானஞ் செய்த போது புலவர் பாடிய செய்யுள்:

‘ பொருந்த ஒருதட்டு மேருப் புகினும்
இருந்த திருத்தட் டெழாதால்—திருந்து
மறைபுக்க சொல்லபயா வன்புறவுக் காக
நிறைபுக்க தெவ்வாறு நீ?’

இங்ஙனம் புகழேந்திப் புலவர் பன்னெடு நாட்கள் சோழ நாட்டிலே உறையூரிலே இனிது வாழ்ந்திருந்து, பின் பாண்டிய நாட்டை அடைந்து, அங்கே சில தினங் கள் வைகினார். அப்போது ஒருநாள், பாண்டியன் கல்வித் திறத்தைக் கண்டு வியந்து,

'எண்ணீர்மை நூலுக் ககத்திய ஞமினவன் என்பதெல்லாம்
வெண்ணீர்மை யன்றி விரகல்ல வேயிவ் வியனுலகின்
பண்ணீர்மை தேரும் பராக்ரம மாறன் பதங்கழுவுந்
தண்ணீர் குடித்தல்லவோபோதி யோனும் தமிழ்கற்றதே.

என்ெருரு பாட்டியம்பி அவனை இன்புறுத்தினர்.

பிறகு, புகழேந்தியார் தமது பிறப்பிடமாகிய பொற் களந்தைப்பதி புகுந்து, தம் வாழ்நாட்களின் இறுதிக் காலத்தை, 'மிக்கோன் உலகளந்த மெய்யடியே சார்வாக' 'நாராயணாய நமவென்று' நவின்று நவின்று நித்தியானந் தப் பெருவாழ்வை அடைந்தனர்.

இவர் கொற்றந்தைப் பதிக்குத் தலைவன்மீது பாடிய கவி :

'நையும் படியென்கொற்றந்தை நங்கோன் செஞ்சி வரைமீதே
ஐயம் பெருநுண் ணிடைமடவாய் அகிலின் தூபம் முகிலன்று,
பெய்யுந் துளியோ மழையன்று பிரசத் துளியே பிழையாது
வையம் பெறினும் பொய்யுரைக்க மாட்டார் தொண்டை
[நாட்டாரே.

The Jupiter Press, Madras.